# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 61 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 13, வியாழக்கிழமை 26.01.2017



8th Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2017
27 28 29
ஜனவரி / January
10.00am - 8.00pm
Municipal Grounds - Jaffna
1 இன்னும் நாள்


## காணாமற்போனோர் விவகாரம்

# ரணில் கைவிரிப்பு

## எந்தத் தகவலையும் இலங்கையில் தேடமுடியாது என நாடாளுமன்றில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 26

காணாமற்போனவர்கள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் இலங்கை யில் தேட முடியாது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுக் கைவிரித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

காணாமற்போனவர்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப் பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர்களின் உறவினர்கள் முன்னெடுத்துவரும் >> 25



## காணர்மற்போனோர் சகலருக்கும் இறப்புச் சான்றிதழ் தர முடியாது

### இப்படிக் கூறுகிறது அரசு

கொழும்பு, ஜன. 26

காணாமற்போனோரின் உறவினர்கள் இறப்புச் சான்றிதழ் வழங்குமாறு கோருகின்றனர். காணாமற்போனோர் தொடர்பில் அனைவரும் உயிரிழந்ததாக இறப்புச் சான்றிதழ் கொடுக்க முடியாது. இவ்வாறு >> 25

## உறவினர்களுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும்

### சபையில் எடுத்துரைத்தது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 26

காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு உரிய பதிலை வழங்குவதற்குரிய கடப்பாடு அரசுக்கு இருக்கின்றது. இந்த விடயத்தில் இழுத்தடிப்பு இடம்பெறுவதாலேயே விரக்தியால் போராட வேண்டிய நிலை >> 25

## உறவுகளின் கண்ணீர் அரசுக்குச் சாபக்கேடு

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

காணாமற்போனவர்களின் உறவினர்கள் இன்று வீதியில் இறங்கி விழிநீர் வடிக்கின்றனர். இவர்களின் கண்ணீர் இந்த அரசை சும்மாவிடாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். >> 25

## கேப்பாபிலவுக்கு நேற்று வரவில்லை மைத்திரி

### காலநிலை சீரின்மை காரணமாம்

முல்லைத்தீவு, ஜன. 26

காலநிலை சீரின்மை காரணமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று வருகை தரவில்லை. >> 25

## வவுனியா உறவுகளின் போராட்டத்துக்கு வலுக்கிறது ஆதரவு

### பல இடங்களிலும் இன்று கவனவீர்ப்பில் ஈடுபட அழைப்பு

வவுனியா, ஜன. 26

வவுனியாவில் முன்னெடுக்கப்படும் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழர் தாயகத்தில் பல்வேறுதரப்புக்களும் போராட்டத்தில் இன்று குதிக்கவுள்ளன.

காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக உணவு - குடிதண்ணீர் இன்றி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பெரும் பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், வவுனியா நகரில் பேரணியாகச் சென்று போராட் டம் நடைபெறும் இடத்துக்கு அருகில் கவன >> 25

## போராட்டம் இன்றும் தொடர்ந்தால் நால்வரின் நிலைமை மோசமாகும்

### மருத்துவர் எச்சரிக்கை; நேற்று மாலை ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா, ஜன. 26

நான்காவது நாளாக இன்றைய தினமும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டால், நால்வரின் உடல்நிலை மிகமோசமாகப் பாதிக்கப்படும் என்று போராட்டக்காரர்களை நேற்று மாலை பரிசோதித்த மருத்துவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை நேற்று இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்த பெண் ஒருவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலை >> 23அ



## ரயிலுடன் மோதுண்டு ஆசிரியர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 26

கிளிநொச்சி 155ஆம் கட்டையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர், ரயிலுடன் மோதுண்டு >> 25

## தெப்பம் புரண்டதில் குடும்பத்தலைவர் கடலில் மூழ்கிச் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 26

நெடுந்தீவு கிழக்கில் நேற்றைய காற்றினால் தெப்பம் புரண்டதில், அதில் பயணித்த >> 23அ



## மூளை சிதைவடைந்தே கர்ப்பிணிப் பெண் சாவு

### இறப்பு விசாரணையில் தெரிவிப்பு சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 26

மண்டையோட்டு எலும்புகள் நொறுங்கி மூளை சிதையுமளவுக்கு கர்ப்பிணிப் பெண் அடித்துக் கொல்லப்பட்டார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் இறுதிக் கிரியைக்காக நெடுந்தீவுக்கு நேற்றுக் >> 25

## படை வசமிருந்த ஒரு பகுதி காணி நேற்று முல்லைத்தீவில் விடுவிப்பு

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவில் இராணுவத்தினர் வசமிருந்த ஒரு பகுதி காணி நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டது. குறித்த காணிகளுக்கு உரித்துடைய ஆயிரத்து 350 பேருக்குக் காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுக் >> 25



## அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கேப்பாபிலவு மக்கள் போராட்டம்

### மழையும் அவர்களை வாட்டியது

முல்லைத்தீவு, ஜன. 26

வேறு நிலங்களை விடுவித்து அதனை எமது நிலத்தை விடுவித்ததாகக் காண்பிக்க வேண்டாம்.

இவ்வாறு வலியுறுத்தி, மழைக்கு மத்தியிலும், பாதுகாப்புத் தரப்பின் அச்சுறுத்தலையும் மீறி கேப்பாபிலவு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(விரிவான செய்தி 10 ஆம் பக்கம்)


60%
தற்போது உங்களது வழக்கமான வட்டிக்கு மேலாக 60% மேலதிக வட்டியையும், இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும் பெற்று அனுபவியுங்கள்!
மேலதிக விபரங்களுக்கு
0114 711 411 www.nationstrust.com
அல்லது அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்
Nations MaxBonus

இலங்கைக் கடற்படை கைப்பற்றிய

# தமிழக மீனவர் படகுகளை மீட்க உடனடி நடவடிக்கை

இந்திய நடுவண் அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு

சென்னை, ஜன. 26
இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றிய தமிழக மீனவர்களின் 120 படகுகளை மீட்க இரண்டு மாதங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய நடுவண் அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நேற்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பிரதேசத்தில் அத்துமீறிநுழைந்ததாகத் தெரிவித்து மீனவர்களின் படகுகளைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். அவற்றில் 80 படகுகள் இராமேஸ்வரம் மீனவர்களுடையவை. ஒவ்வொரு படகும் பல லட்ச ரூபா மதிப்புடையவை. இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றிய 120 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டும் என்று மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஏ.செல்வம், பி.கலையரசன் ஆகியோர் அடங்கிய அமர்வுமுன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மீனவர்களின் படகுகளை மீட்பது தொடர்பாக நடுவண் அரசுக்கு, தமிழக அரசின் தலைமைச் செயலர் மனு அளித்துள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்த நீதிபதிகள், தலைமைச் செயலர் அனுப்பிய மனு தொடர்பாக, இந்திய நடுவண் அரசின் அயலுறவுத்துறைச் செயலர் இரண்டு மாதங்களில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார். (த-5)

# நெருக்கடியை சமாளிக்கும் ஆற்றல் இல்லை மகிந்தவிடம்

இப்படிச் சொல்கிறார் அமைச்சர் விஜிதமுனி



கொழும்பு, ஜன. 26
மகிந்த அரசின் காலத்தில் பொருளாதார நெருக்கடி இருந்தது உண்மை. நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஆற்றல் மகிந்தவிடம் இருக்கவில்லை. அதனைத் தீர்ப்பதற்குப் பன்னாட்டுச் சமூகம் சந்தர்ப்பம் வழங்கவுமில்லை. திண்டாடிய மகிந்த இதனால்தான் முன்கூட்டியே தேர்தலை நடத்தினார்.

இவ்வாறு அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பிரச்சினையை சமாளிப்பதற்காக மகிந்த காணிகளை தனியாருக்கு விற்கவும் செய்தார். இதற்கு எதிராக நான் அமைச்சரவைக்குள் குரல் எழுப்பியபோதும், பெரும்பான்மை குரல்கள் மூலம் எனது குரல் தோற்கடிக்கப்பட்டது.

அரச காணிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்க முடியாது என்ற சட்டத்தை ரணில் விக்கிரமசிங்க 2002 இல் தலைமை அமைச்சராக இருந்தபோது நிறைவேற்றினார். அந்தச் சட்டத்தை மீறித்தான் மகிந்த நிலங்களை விற்றார். அதை மறந்துவிட்டு இந்த அரசு காணிகளை விற்பதாக குற்றம் சுமத்துகின்றார்.

இந்த அரசில் காணிகள் விற்கப்படவில்லை. தனியாருடன் சேர்ந்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த வகையில்தான், அம்பாந்தோட்டையில் வர்த்தக வலயம் அமைக்கப்படுகின்றது-என்கிறார். (த-5)



தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் இளைஞர் நாடாளுமன்ற நான்காவது கூட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வில் கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். (த)

விதுர விக்ரமநாயக்க எம்.பி. சொல்கிறார்

# பிரபாகரனுடன் கூட்டாட்சி அமைக்குமாறு மகிந்தவுக்கு உத்தரவிட்டதாம் அமெரிக்கா

கொழும்பு, ஜன. 26
வடக்கு - கிழக்கையும் பிரபாகரனையும் இணைத்துக் கொண்டு கூட்டாட்சி அமைக்குமாறு அமெரிக்கா, மகிந்த ராஜபக்சவுக்கு உத்தரவிட்டதாகவும் அந்த உத்தரவை உதாசீனம் செய்துவிட்டே மகிந்த புலிகளுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தினார் என்றும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசியல் கலாசாரம் தொடர்பில் எனக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணமாகவே நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக முடிவெடுத்துள்ளேன்.

அதன் பின்னர் தொடர்ந்து அரசியல் அமுக்கக் குழுவொன்றை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளேன். அந்தக் குழு அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் நேர் வழியை நோக்கி அழுத்தம் கொடுக்கும்.

நான் பதவி விலக எடுத்துள்ள முடிவை அனைவரும் வரவேற்றுள்ளனர். நாட்டில் நல்ல அரசியல் கலாசாரம் உருவாக வேண்டும் என்பதே எனது ஒரே லட்சியமாகும்.

எனது தந்தை தலைமை அமைச்சராக இருந்த போதும்கூட நான், அவரது பதவியைப் பயன்படுத்தி அரசியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதில்லை. தாமதமாகத்தான் அரசியலுக்கே வந்தேன்.

சுதந்திரக் கட்சி ஒன்றுபடவேண்டும் என்று நான் கோரிக்கை முன்வைக்கின்றேன். மகிந்தவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பேச்சு மேசைக்கு வரவேண்டும். மனம் திறந்து பேசி கட்சியை ஒற்றுமைப்படுத்த வேண்டும்.

புலிகளுடன் போர் செய்யாமல் பிரபாகரனையும் வடக்கு - கிழக்கையும் இணைத்துக் கொண்டு கூட்டாட்சி ஒன்றை அமைக்குமாறு அமெரிக்கா மகிந்தவுக்கு உத்தரவிட்டபோதும் அதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுப் புலிகளை அழித்து ஒழித்தவர்தான் மகிந்த. அப்படிப்பட்ட மகிந்தவுடன் ஏன் மைத்திரி பேசக்கூடாது? ஏன் அவரை இணைத்துக் கொண்டு கட்சியை ஒற்றுமைப்படுத்தக் கூடாது? - என்றார். (த-5)

# இடம்பெயர்ந்தோரில் 34,000 குடும்பங்களே மீள்குடியமரவேண்டும்

மீள்குடியேற்ற அமைச்சு நாடாளுமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26
போர் காரணமாக வடக்கு - கிழக்கிலிருந்து 2 லட்சத்து 67 ஆயிரத்து 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர். இடம்பெயர்ந்த குடும்பங்களுள் 2009 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் 2 லட்சத்து 33 ஆயிரத்து 245 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 34 ஆயிரத்து 255 குடும்பங்கள்தான் மீள்குடியமர்த்த வேண்டியுள்ளனர்.

இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மறுவாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்றின் போது நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அநுருத்த ஹேரத் எழுப்பிய கேள்விகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சு சபையில் சமர்ப்பித்த பதில்களிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுள் 87 சதவீதமான குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

2016 ஜனவரி மாத மளவில் ஆயிரத்து 490 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 223 பேர் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தனர். 2016ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் மாதம் வரை ஆயிரத்து 37 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 235 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

13 ஆயிரத்து 659 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 585 பேர் மீளக்குடியமர்த்துவதற்கு எஞ்சியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளுக்குச் செல்லக் கூடிய விதத்தில் அவை விடுவிக்கப்பட்ட பின்னரே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவடையும் என்றும் அமைச்சின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# முல்லையில் மழை பெய்தாலும் குளங்களுக்கு நீர் வரத்து இல்லை


நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன. 26
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக மழை வீழ்ச்சி இடம்பெறுகின்ற போதும் குளங்களுக்கு நீர்வரத்து ஆரம்பிக்கவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மவாட்டத்தில் கடந்த சில நாள்களாக மழை வீழ்ச்சி இடம்பெறுகின்ற போதும் 20 மில்லி மீற்றருக்கு மேல் பதிவாகவில்லை. 12 மில்லி மீற்றர் மற்றும் 19 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகி உள்ளன.

முல்லைத்தீவு மவாட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனிக்குள நீர்ப்பாசனம் மற்றும் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் உள்ள குளங்களுக்கான நீர்வரத்தும் ஆரம்பிக்கவில்லை.

தொடர்ந்து மழைவீழ்ச்சி அதிகரித்துக் காணப்படுமாயின் குளங்களுக்கு நீர்வரக் கூடும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் சிறிஸ்கந்தராசா தெரிவித்தார். (வ-7)



# மகிந்த நியமித்த கோப் குழு அறிக்கைகளும் 'அவுட்'டாகும்

## அமைச்சரவைப் பேச்சாளர் உறுதி

கொழும்பு, ஜன. 26

மகிந்த அரசின் காலத்தில் மறைக்கப்பட்ட கோப் குழுவின் 40 அறிக்கைகளையும் விரைவில் அம்பலப்படுத்துவோம் என்று அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கூட்டு அரசின் ஆட்சிக்காலத்தில் மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் அமைக்கப்பட்ட கோப் குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதம் நடைபெற்ற நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அரசின் நேர்மையை நேற்று (நேற்று முன்தினம்) நாடாளுமன்றில் நடைபெற்ற கோப் அறிக்கை தொடர்பிலான விவாதமே காட்டிக்கொடுத்து விட்டது. ஒரு முழு நாளும் விவாதத்தை நடத்தியது மட்டுமல்லாது, அந்த அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பியும், அதற்கு மேலதிகமாக அதனை விசாரணை செய்ய அரச தலைவர் சிறப்பு ஆணைக் குழுவொன்றையும் அமைத்துள்ளோம். இதுதான் எமது நல்லாட்சி.

நாடாளுமன்றில் தற்போது கூச்சலிடுபவர்கள் ஹெஜின் கொடுக்கல் வாங்கல், ஊழியர் சேமலாப நிதிய மோசடி, சிறிலங்கன் வானூர்தி சேவையில் இடம்பெற்ற மோசடி என்பவை தொடர்பில் மறந்துவிட்டார்கள் என்றே தெரிகின்றது. கடந்த அரசின் காலத்தில் கோப் குழுவின் 40 அறிக்கைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பிலும் தற்போது நாம் கவனம் செலுத்தியுள்ளோம். மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் எவ்வாறு நாம் நேர்மையானத் தகவல்களை மக்களுக்கு வழங்கினோமோ அதேபோல், கடந்த கால மோசடிகள் குறித்தும் உண்மைகளை அம்பலப்படுத்துவோம். இவை தொடர்பிலும் வெகுவிரைவிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படும் – என்றார். (வ-5)

# சரவணபவன் எம்.பி. லண்டன் பயணம்

## துறைசார் நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை அறிய

கொழும்பு, ஜன. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் லண்டன் பயணமானார். துறைசார் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற கற்கைச் சுற்றுலாவில் கலந்துகொண்டு அவர் லண்டன் சென்றுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவே இந்தக் குழுவில் சென்றிருக்க வேண்டியவர் எனினும், அவரது உடல்நலக் குறைவின் காரணமாக அவரது பரிந்துரையுடன் இறுதி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் குழுவில் இடம்பெற்றார்.

அரச பொறிமுறையை நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வைப்பதை நோக்கமாகக்கொண்டு துறைசார் மேற்பார்வைக் குழு முறைமை இலங்கையில் ஏற்படுத்தப்பட்டது. இதே முறைமை பிரிட்டனில் நடைமுறையில் உள்ளது. அங்கு இந்த முறைமை வெற்றிகரமாகச் செயற்பட்டுப் பயன் அளிக்கிறது. அதன் அடிப்படையில் இலங்கையிலும் அந்த முறைமை தற்போதைய ஆட்சியாளர்களால் தழுவப்பட்டது.

அதன் பின்னர் அந்த முறைமை பற்றிய முதலாவது பயிற்சிப் பட்டறை 2016 பெப்ரவரி மாதம் 15 – 17ஆம் திகதி வரை நடைபெற்றது. அந்தப் பயிற்சிப் பட்டறை சிறப்பான அனுபவத்தை வழங்கியதை அடுத்து, தொடர் நடவடிக்கைகளை எடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் இலங்கை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு நேரில் சென்று துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் செயற்பாடுகளை ஆராய்ந்தார். ஏப்ரல் மாதம் அந்தப் பயணம் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக 2016 ஜூலை மாதம் நாடாளுமன்ற அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை கொழும்பில் நடத்தப்பட்டது.

இவற்றின் தொடர்ச்சியாக, துறைசார் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற அலுவலர்களை உள்ளடக்கிய குழுவினருக்கான கற்கைச் சுற்றுலா பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்றது. அதன் இரண்டாவது தொகுதியினருக்கான சுற்றுலா இந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பமானது.

துறைசார் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் மாவை. சேனாதிராசா அதில் இடம்பெற்றிருந்தார். உடல் நலக் குறைவு காரணமாக அவர் லண்டன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். (உ-5)

# வடக்கு மீன்வளத் துறை அபிவிருத்திக்கு அமைச்சரவை ஒப்புதல்

வடக்கு மாகாணத்தில் நிலையான மீன்வள அபிவிருத்தி வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்வைக்கப்பட்ட பத்திரத்துக்கு, அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீரவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில், போரின் விளைவால் நீண்ட காலமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் குறைவாகக் காணப்பட்ட வட பகுதியின் மீனவ அடிப்படை வசதிகளை விருத்தி செய்வது அதி சிறப்பு மற்றும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய தேவையாக உள்ளது. அதற் காக நிதியுதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள 'வடமாகாண நிலையான மீனவ அபிவிருத்தி வேலைத்திட்டத்தை' செயற்படுத்துவதற்கு அனுமதி கோரப்பட்டது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. (வ-5)







விவசாயிகளின் கரங்கள் பாதுகாக்கப்பட்டது

மன்னார் தானியக் களஞ்சியத் தொகுதி விவசாயிகளிடம் கையளிப்பு



அதிமேதகு ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன அவர்களதும்,
கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களதும்
இணக்கப்பாட்டு அரசாங்கத்தின் 2017 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில்
மன்னார் தானியக் களஞ்சிய கட்டடத் தொகுதி
விவசாயிகளிடம் கையளிக்கப்படுகின்றது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கா அவர்களின்
தலைமையில் பிரதேச அமைச்சர்கள் மற்றும் அதிதிகளின் பங்குபற்றுதலுடன் 2017-01-26 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நானாட்டான் பிதேச செயலகப் பிரிவிலுள்ள முருங்கனில் இக்கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுகின்றது.

- ஒரே தடவையில் 10,000 மெற்றிக் தொன் தானியத்தைக் களஞ்சியப்படுத்தக் கூடிய இக்களஞ்சிய கட்டடத் தொகுதி 21,586 சதுர அடிகளைக் கொண்டுள்ளது.
- புதிய தானிய கூடத்திற்காக 264 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது

வலுவான பொருளாதாரத்தின் முன்னோக்கு

நிதி அமைச்சு

Facebook :-UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.26
யாழ்ப்பாணம், இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் கே.கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரெனியூஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# வார இறுதியில் ஆதனவரி அறவீடு

யாழ்ப்பாணம், ஜன.26
யாழ். மாநகர சபையால் வார இறுதி நாள்களிலும் ஆதனவரி அறவீடு மேற்கொள்ளப்படவுள்ளது.
எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமையும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் ஆதனவரி அறவீட்டு நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாநகரசபையால் மேற்கொள்ளப்படவுள்ளன. நடப்பாண்டுக்கான ஆதனவரியை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10 வீத கழிவையும், அவ்வாறு செலுத்த முடியாதவர்கள் காலாண்டுகளுக்கான ஆதன வரியை, காலாண்டின் முதல் மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 5 வீதம் கழிவையும் பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை ஆதனவரி அறிவித்தல் கிடைக்காதவர்கள், தமது வட்டாரம் ஆதன இலக்கம் என்பனவற்றை நேரடியாக வரி செலுத்தும் இடத்தில் கூறி வரியைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

# மோ. சைக்கிளை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.26
பருத்தித்துறை பொலிஸாரால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.
அதற்கு உரிமையாளர் எவராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். தவறின் 2 மாதங்களின் பின்னர் அரசுடைமை ஆக்கப்படும் என பருத்தித்துறை நீதிவான் மன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ற-8)

# விடுதலைப் புலிகள் விடயத்தில் அரசு விழிப்பாகவேயுள்ளதாம்

கொழும்பு, ஜன. 26
நாடு கடந்த தமிழீழம் என்ற பெயரில் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு கட்டமைப்பும் உலகில் எந்தவொரு பகுதியிலும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து அரசு தொடர்ந்தும் விழிப்புடன் இருக்கின்றது.
இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். உருத்திரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த தமிழீழ அரசு எனத் தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் குழுவொன்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சிபோல கனவு கண்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, உருத்திரகுமாரன் தலைமையில் 135 உறுப்பினர்களைக் கொண்ட நாடு கடந்த தமிழீழ அரசு செயற்பட்டு வருவது தொடர்பில் அயலுறவுத் துறை அமைச்சுக்குத் தெரியுமா என்று கேள்வியெழுப்பினார்.
அதற்குப் பதிலளிக்கும் போதே அயலுறவுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
பன்னாட்டு ரீதியாக வியாபித்துள்ள தமிழீழ அரசு என்று அழைக்கப்படும் அரசு எதுவும் இல்லை. நாடு கடந்த தமிழீழம் என்று தம்மைத்தாமே அழைத்துக் கொள்ளும் நபர்கள் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை எந்தவொரு உலக நாடுகளோ, ஐக்கிய நாடுகள் சபையோ சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (வ-5)

# காதலியை இழந்து தவிக்கிறார் நாமல்

*பிணை முறி விவகாரத்துக்கு ராஜித புது விளக்கம்*



கொழும்பு, ஜன. 26
பிணைமுறியில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அர்ஜுன அலோசியஸும், நாமல் ராஜபக்சவும் காதலன் - காதலி போன்று இருந்தனர்.
இருவரும் பிரிந்துவிட்டனர். தனது காதலி வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருப்பதை எந்தக் காதலன் விரும்புவார். அது தான் நாமல் ராஜபக்ச, அர்ஜுன மீது குற்றம் சாட்டி வருகின்றார்.
இவ்வாறு புதுவிளக்கம் கொடுத்தார் அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலும் கூட்டு அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. நாம் எதையும் மூடிமறைக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச போன்றோர், பிணை முறி விவகாரத்தில் தொடர்புடைய அர்ஜுன அலோசியஸை முடிந்தால் கைது செய்து காட்டுமாறு எமக்கு சவால் விடுக்கிறார்.
உண்மையில் எமக்கு எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவையே கிடையாது. நாமலுக்குத் தான் தன்னுடன் இத்தனை காலமாக இருந்து வந்த அர்ஜுன அலோசியஸ் தற்போது பிரிந்து சென்று விட்டாரே என்ற சோகம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.
காதலன் காதலி போல இருந்த இவ்விருவம் தற்போது பிரிந்து விட்டார்கள். தனது காதலி வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருப்பதை எந்தக் காதலன் தான் விரும்புவார்? அந்தக் கோபத்தில் தான் அர்ஜுன அலோசியஸ் மீது நாமல் தற்போது குற்றம் சாட்டிவருகிறார்.
இவ்வாறான ஒரு காதல் பிரச்சினையால் தானே றகர் வீரர் வசீம் தாஜுதீனும் கொல்லப்பட்டார் என்று நக்கலாக நாமல்- அர்ஜுன இருவருக்குமிடையிலான நட்பு தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.
இதன்போது, அப்படியானால் அந்தக் காதலி (அர்ஜுன அலோசியஸ்) தற்போது எந்த நபருடன் தொடர்பில் உள்ளார்? என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்ப, ஏன், உங்களுக்கே நன்றாகத் தெரியும் தானே, என்று அமைச்சர் ராஜித சிரித்துக் கொண்டே பதிலளித்தார். பின்னர், அவர் யார் என்றுக் கூற முடியுமா? என மீண்டுமொரு கேள்வி எழுப்பப்பட்டபோது, அரசிலுள்ள ஒருவர்தான் என்று அமைச்சர் மழுப்பலாக பதிலளித்தார். (வ-5)

# தமிழ் மாணவர்களது கல்வியை மேலோங்கச் செய்ய வேண்டும்

*வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா தெரிவிப்பு*

வவுனியா, ஜன.26
தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. ஆரம்ப கால திறமைகளையும், வரலாறுகளையும் எமது பண்பாடுகளையும் சாதனைகளையும் நினைவில் கொண்டு வருங்காலத்தில் எம் சிறார்களின் கல்வி, இணைப் பாடவிதான செயற்பாடுகள், ஒழுக்க விழுமியங்கள் ஆகியவற்றை மேலோங்கச் செய்ய வேண்டும்.
இவ்வாறு வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதாவும், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஸ்தாபகருமாகிய க.சந்திரகுலசிங்கம் தெரிவித்தார்.
பின் தங்கிய கிராமங்களில் மாணவர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் முகமாக இலண்டன் நெடுந்தீவு விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
அதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இங்குள்ள மக்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர். பொருளாதாரம், போக்குவரத்து இன்னும் பல துன்பங்களை எதிர்கொண்டு இருக்கின்ற நேரத்தில், இயற்கையும் எம்மை சோதிக்கின்றது. சிறார்களின் கல்வி நிலை பாதிக்கப்படக்கூடாது என்ற ஆதங்கத்தில் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.
தமிழ் தேசிய இளைஞர் கழகத்தினருக்கும், வாய்ப்பளித்த பாடசாலைச் சமூகத்துக்கும், பழைய மாணவர்களுக்கும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்துக்கும் இதயபூர்வமான நன்றிகள்- என்றார்.
நிகழ்வில் வித்தியாலய ஆசிரியர்கள், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் உப தலைவர் பி.கெர்சோன், கழகத்தின் உறுப்பினர்களான வ.பிரதீபன், ஜெ.கஜீரன், கிராம சமூகமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

*37 வருடப் போரினால்*

# உயிரிழந்தோர் விவரத்தை கோருகிறது மகிந்த அணி

கொழும்பு, ஜன. 26
1972ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தமிழ்ப் பிரிவினைவாதப் பயங்கரவாதம் காரணமாக உயிரிழந்த மற்றும் காயமடைந்த பொதுமக்கள், பயங்கரவாதிகள், படையினர் விவரங்களை அரசிடம் கோரியுள்ளது மகிந்த அணி.
இவற்றை வழங்குவதற்குத் தமக்கு இரண்டு வாரங்கள் அவகாசம் தருமாறு அரசு கேட்டுக் கொண்டது.
நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் ஆகியன முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.
நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பிலவால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு இரண்டு வாரகால அவகாசம் தேவை என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (வ-5)

# சங்கக் கட்டட அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.26
அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டட அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் அளவெட்டி தெற்கு மக்கள் வங்கிக்கு முன்பாக இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும், வலி.வடக்கு பிரதேச செயலர் க. ஸ்ரீமோகனனும், வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் .சி. பெலிசியனும், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு கிராம உத்தியோகத்தர் இ.பரணீதரனும், கௌரவ விருந்தினராக கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு காணி அன்பளிப்பாக வழங்கிய க. சொர்ணலிங்கமும் கலந்து கொண்டனர். (ற-ரி)

# 2, 753 உளவியல் ஆசிரியர்களை சேவையில் இணைக்கத் திட்டம்

*கல்வி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 26
மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்குவதற்குப் புதிதாக 2 ஆயிரத்து 753 ஆசிரியர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
உளவியல் ஆலோசனை தொடர்பில் முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.
இது தொடர்பில் கல்வி அமைச்சர் தெரிவித்ததாவது:
தற்போதைய சமூகங்கள் மத்தியில் பாடசாலை மாணவர்கள் பல்வேறு உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.
இதன் காரணமாக இவர்களது கல்வி மற்றும் சமூக செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.
இவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் சிறந்த தொடர்பாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.
பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்காகப் புதிததாக 2 ஆயிரத்து 753 ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.
இவ்வாறான பாடசாலைகள் 3 ஆயிரத்து 768 காணப்படுகின்றன. தற்போது ஆயிரத்து 39 உளவியல் ஆசிரியர் சேவையில் தற்காலிக பணியில் ஈடுபட்டுள்ளனர்.
இவர்கள் உரிய பயிற்சிகளைப் பெற்ற பின்னர், உளவியல் ஆலோசகர்களாக நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (வ)

## இலவச மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, ஜன.26
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ சங்கத்தால் இலவச மருத்துவமுகாம் தேவிபுரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தில் எதிர் வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட வுள் ளது.

காலை 8.30 மணி யிலிருந்து பி.ப. 1.30 மணிவரை இடம்பெறும் மருத் துவ முகாமில் பொது மருத்துவம், சத்திரசிகிச்சை, என்புமுறிவு. குழந்தை மருத்து வம், மகப்பேறு மற் றும் பெண் நோயி யல் காது, மூக்கு, தொண்டை, முகச் சீராக்கல் சத்திர சிகிச்சை மற்றும் பற்சிகிச்சை போன்ற துறை களுக்கான வைத் திய நிபுணர்களும் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மருத்துவர் களும் சேவையை முற்றிலும் இலவச மாக வழங்கவுள் ளனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், தேவிபுரம், சுதந் திரபுரம், உடை யார் கட்டு, மூங்கி லாறு, விசுவமடு ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயனடைய முடியும் என்று தெரி விக்கப்பட்டது.

(ந)

## கண்ணீர் அஞ்சலி


எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரியை **கமலலோஜினி கோபீஸகன்** அவர்களின் மாமியார்

**நாமகள் சந்திரசேகரம்**

அவர்கள் 18.01.2017 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## பிறந்த தின நினைவஞ்சலி



தோற்றம் 1939 . 01 . 26
மறைவு 2016 . 03 . 23

பிறந்த தினம் - 26.01.2017

அமரர் வைத்தியகலாநிதி

### இராஜசிங்கம் தெய்வேந்திரன்

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
நல்வழிகாட்டி நானிலம் போற்ற வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வமே !!
இன்று தங்கள் பிறந்தநாள்
கடந்த வருடம் தங்கள் சுற்றத்தாருடன்
பிறந்தநாளை மகிழ்வுடன் கழித்தது
நினைவுக்கு வருகின்றது
அப்பா நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்றாலும்
என்றும் எம்மனதில் நிறைவாக வாழ்வீர்கள்

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

என்றும் நீங்காத தங்கள் நினைவலைகளுடன்
Dr. தெய்வேந்திரன் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### இராசரத்தினம் இரவீந்திரரட்ணம்

தோற்றம் 24.09.1951
மறைவு 29.12.2016

29.12.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று 28.01.2017 சனிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் சட்ட நாதர் சிவன்கோயில் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு நினைவுப் பூர்த்தி





### சண்முகம் இரத்தினம்

(ஸ்தாபகர், வதனி ஜுவலறி - கொடிகாமம்)

அன்னை மடியில் 19.01.1917
ஆண்டவன் மடியில் 23.02.2010

திதி: மாசி மாத பூர்வபக்க தசமி

### சண்முகலிங்கம் லதுர்ஜிகாந்

(உரிமையாளர், வதனி ஜுவலறி- கொடிகாமம்)

அன்னை மடியில் 16.08.1976
ஆண்டவன் மடியில் 14.01.2010

திதி: தைமாத அபரபக்க சதுர்த்தசி

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் பரப்பி
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய்ப் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஏழு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

வதனி ஜீவலறி
(சாவகச்சேரி கொடிகாமம்)
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(ஜெ.299)
(13.18)

தங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன்

(உரிமையாளர் - சுந்தரமூர்த்தி அன் சன்ஸ் - யாழ்ப்பாணம்) தொண்டைமானாறு

எமது குடும்ப விளக்கு சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவுக் கிரியைகள் நாளை (26.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை மடியில் 19.07.1947
ஆண்டவன் அடியில் 07.02.2016

மாறுகரை உடுத்திய உன் எழில் மிகு தோற்றம்
மனக் கண்ணில் நிழலாடுகிறது
ஒரு கூட்டின் குருவிகளாய் கூடி இருந்த
வாழ்வு நேற்றுப்போல் மனதை வாட்டுகிறது
உன் ஆத்மசாந்திக்காக
செல்வச்சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்.

210, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(J/276)
(11,17,18)

சகோதரர்கள்,
சகோதரிகள்.

# அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமைச்சரவை உப குழு அமைப்பு

கொழும்பு, ஜன. 26

அரிசி விலை சந்தையில் உயர்வடையாமல் பேணுவதற்கு அமைச்சரவையில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நெல் வழங்கப்பட்டும் அதனைச் சந்தைக்கு விடாமல் வைத்திருக்கும் ஆலை உரிமையாளர்கள் தொடர்பில் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை உப குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டவை தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

நெல் சந்தைப்படுத்தல் சபை கையிருப்பில் இருந்த 90 ஆயிரத்து 958 மெற்றிக் தொன் நெல், அரிசியாக்கப்பட்டு சந்தைப் படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் ஆலை உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

லங்கா ச.தொ.ச நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட நெல்தொகையானது அரிசியாக்கப்பட்டு ச.தொ.ச வினூடாக ஒரு கிலோ கிராம் 76 ரூபா வீதம் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் தனியார் நெல் ஆலை உரிமையாளர்களின் மூலம் நெல் அரிசியாக்கப்பட்டு சந்தைக்கு விற்பனை செய்யப்படவில்லைஎன்பது அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நெல் சந்தைப்படுத்தல் சபை வசம் இருக்கும் நெல் கையிருப்பை லங்கா ச.தொ.ச நிறுவனம், தனியார் நெல் ஆலை உரிமையாளர்களின் ஊடாக அரிசியாக்கப்பட்டு முறையான செயற்றிட்டமொன்றை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், தற்போது நெல் வழங்கப்பட்டு அதனை சந்தைக்கு விநியோகிக்காமல் இருக்கும் நெல் ஆலை உரிமையாளர்கள் தொடர்பில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சிறப்புச் செயற்பாட்டு அமைச்சரின் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றை அமைப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால வேண்டுகோளின் படி 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இந்தோனேசியா அரசின் மூலம் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த அரிசி அடுத்த ஒரு சில நாள்களில் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் சந்தையில் அரிசி விலை உயர்ந்து காணப்படின் இந்தோனேசியா, வியட்நாம் உட்பட மிகவும் அருகிலுள்ள நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டு துரிதமாக சந்தைக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் அமைச்சரவையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (வ-5)

## வேள்விக்குத் தடை கோரும் வழக்கில்
# ஆட்சேபனையை முன்வைக்குமாறு யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 26

கோயிலில் வேள்வி நடத்துவதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட தடையீட்டு எழுத்தாணை மனுவில், ஆலயமொன்றின் நிர்வாகத்தினரையும் ஒரு தரப்பினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்று இணைத்தது. வேள்வி நடத்துவதற்கான தடைக்கு ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்யுமாறும் அவர்களுக்கு மன்று அறிவுறுத்தியது.

இந்த மனு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் ஒரு கட்சிக்காரராகத் தம்மை இணைத்துக்கொள்ளுமாறு, தாம் இந்த வழக்கில் விசாரணை நடத்த விரும்புவதாகவும் ஆலயம் ஒன்றின் நிர்வாகத்தினர் மேல் நீதிமன்றில் ஏற்கனவே மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று நேற்று அதற்கான அனுமதியை வழங்கியது. அதன்படி ஆலயங்களில் வேள்வி நடத்த வேண்டும் என்பதற்கான காரணங்களைக் கூறி ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்யுமாறு மேல் நீதிமன்று நேற்று ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியது.

'வாய்பேச முடியாத ஒரு மிருகத்தை வதைப்பதற்கு உங்களுக்கு கவலையளிக்கவில்லையா என்று நீதிபதி நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

'இது எங்கள் முப்பாட்டன் காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்திக் கொண்டுவருகிறோம். எமது முன்னோர் ஆலய முன்றிலில்தான் வேள்வி நடத்தினார்கள். அவ்வாறு தான் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளனர்' என்று கோயில் நிர்வாகம் சார்பில் மன்றில் முன்னிலையானவர் தெரிவித்தார்.

அதற்கு நீதிபதி 'மிருகங்களைப் பலியிடல் கவலையான விடயம். நீங்கள் அதன் கழுத்தில் வெட்டுகின்றபோது அந்த மிருகம் துடிதுடித்து இறந்து போவதை கண் முன்னே காணும்போது எப்படி இருக்கும்? எப்படி உங்களால் அவற்றைப் பார்க்க முடிகிறது? பழையனவற்றை விடுத்து புதியவற்றைச் சிந்தியுங்கள். புதிதாக எதையாவது செய்ய முயற்சியுங்கள். பழையனவற்றிலேயே நிற்காதீர்கள்' என்று தெரிவித்தார். இந்த மனு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

*பின்னணி*

அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தடையீட்டு எழுத்தாணை மனுவைச் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடாகத் தாக்கல் செய்திருந்தார். கோயில்களில் இடம்பெறவுள்ள வேள்விக்குப் பிரதேச சபை அனுமதி வழங்கக்கூடாது, வேள்வி உயிர்ப்பலி நடத்தப்படக் கூடாது என்று மனுவில் கோரப்பட்டது. மனுவைப் பரிசீலித்த மேல்நீதிமன்று வேள்வி நடத்த இடைக்காலத்தடை உத்தரவு விதித்தது. (வ-4,ரி)

# வயம்ப பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இடம்பெறவில்லை
## அங்கு பயிலும் தமிழ் மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 26

வயம்ப பல்கலைக்கழகத்தில் எந்தவொரு பகிடிவதையும் இடம்பெறவில்லை என்று, அங்கு கல்வி கற்றும் தமிழ் மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.

பகிடிவதை தொடர்வதாகவும், பகிடிவதை தொடர்பில் பத்திரிகையில் வெளியான செய்திக்கு மறுப்புக் கொடுக்குமாறு தமக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் வயம்ப பல்கலைக் கழக மாணவி ஒருவர் குறிப்பிட்டார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு பகிடிவதை இடம்பெறுவதாக கடந்த 23ஆம் திகதி உதயன் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. பகிடிவதை காரணமாக மாணவி ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட மாணவியின் தாயார், மற்றும் அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் 6 பேர், வயம்ப பல்கலைக் கழகத்தில் எந்தவொரு பகிடிவதையும் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டனர். மாணவி, சுகவீனம் காரணமாகவே வைத்தியசாலையில் மூத்த மாணவர்களால் சேர்க்கப்பட்டார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பல்கலைக் கழகத்தில் பகிடிவதை தொடர்வதாகவும், பத்திரிகையில் வெளியான செய்திக்கு மறுப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று மூத்த மாணவர்களால் அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் வயம்ப பல்கலைக் கழக மாணவி ஒருவர் தெரிவித்தார். (வ-5-8-101)

## அபிராமிப் பட்டர் விழா

அளவெட்டி, ஜன. 26

அளவெட்டி வெளிவயல் சிறிமுத்துமாரி அம்பாள் ஆலய அபிராமிப் பட்டர் விழா நாளை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் மு.ப.10.30 மணிக்கு முழுக்கு, சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதான நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து பி.ப.3.30 மணிக்கு மூலமூர்த்திக்கு சிறப்பு முழுக்கு இடம்பெற்று 4.30 மணிக்கு வசந்த வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அபிராமி அந்தாதி பாராயணம் இடம்பெற்று அம்பாள் திருவீதி உலா இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-36)

## வவுனியா போராட்டத்துக்கு ஆதரவாக கிளிநொச்சியில் நாளை கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

வவுனியாவில் நடைபெறும் காணாமற் போனோரின் உறவினர்கள் முன்னெடுத்துள்ள உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக நாளைக் காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அனைத்துப் பொது அமைப்புக்கள், சமுக செயற்பாட்டு மையங்கள், வணிகர் சங்கங்கள், கிராம மட்ட அமைப்புக்கள் அனைவரதும் ஆதரவினை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்திக் கழகம் கேட்டுள்ளது. (வ-6)

## சனிப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.26

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை சனிப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. சிறப்பு முழுக்கு, யாக வழிபாடுகள் என்பன நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## மெய்வன்மைப் போட்டிகள்

கைதடி சேதுகாவலர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப.2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் திருமதி சி.கணராஜன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் வ.நடராசா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

■ ■ ■

தென்மராட்சி, ஜன. 26

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## ஜல்லிக்கட்டுப் போராட்டத்தால்
# சிறிலங்கன் வானூர்திச் சேவை பணியாளர்களுக்கு நேர்ந்த கதி

கொழும்பு, ஜன. 26

தமிழ்நாட்டில் ஏறு தழுவுதல் தடைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தினால், மதுரையில் சிறிலங்கன் விமானசேவை விமானிகளும், பணியாளர்களும் முள்வேலிகளைக் கடந்து விமானத்துக்குச் செல்லும் காட்சி அடங்கிய காணொலி இணையத்தில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏறு தழுவுதல் தடைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களின்போது, சிறிலங்கன் விமான சேவைப் பணியாளர்களால், மதுரை விமான நிலையத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. விமானிகள் மற்றும் விமானப் பணிப்பெண்கள், அதிகாரிகள், பற்றைகள் நிறைந்த பகுதி ஊடாகச் சென்று, முள்வேலி ஒன்றின் ஊடாக, விமான நிலையத்துக்குள் நுழைந்தனர்.

இந்தக் காட்சி அடங்கிய காணொலி இணையத்தில் பரவியுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட சிறிலங்கன் விமான சேவை அதிகாரி, விமான நிலைய அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்ட பின்னரே, இவ்வாறு முள்வேலியைக் கடந்து சிறிலங்கன் விமான சேவை பணியாளர்கள் தமது விமானத்தை அடைந்ததானர் எனத் தெரிவித்துள்ளார்.

"போராட்டக்காரர்கள் வீதிகளைத் தடை செய்திருந்தனர். மதுரை விமான நிலையம் மிகச் சிறியது. அதனைச் சுற்றிப் போராட்டக்காரர்கள் இருந்தனர். திட்டமிட்ட நேரத்தில் பயணிகளுக்குச் சேவையாற்ற வேண்டியிருந்ததால், மாற்று வழியில் விமானப் பணிப்பெண்கள் மற்றும் அதிகாரிகள் விமானத்தை அடைய வேண்டியிருந்தது" என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (நு-5)

# கச்சாயில் வீடுடைத்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 27

கொடிகாமம் கச்சாயில் கடந்த திங்கட்கிழமை வீடு புகுந்த திருடர்கள் 18 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் வெளியிடத்துக்குச் சென்றிருந்தார். மனைவி தனிமையில் இருந்தார். இரவு உறங்குவதற்காக அயல்வீட்டுக்குச் சென்றுள்ளார். அந்த நேரத்தில் வீட்டில் புகுந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைத் திருடி சென்றுள்ளனர்.

செவ்வாய்க் கிழமை காலை வீட்டுக்குச் சென்ற பெண் திருட்டுத் தொடர்பில் கொடிகாமம் பொலிஸில் முறையிட்டார். விசாரணை செய்வதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## பல்கலை. மாணவர்கள் 8 பேர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜன 26

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒரு வரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப் பட்ட 8 மாணவர்கள் விளக் கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி நடந்த இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இதன் அடிப்படையில் விசார ணைகளை மேற்கொண்ட பொலிஸார் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 8 மாணவர்களை நேற்று முன் தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாண வர்கள் நேற்றுக் கண்டி நீதி வான் நீதிமன்றத்தில் முற் படுத்தப்பட்டனர், அவர் களை இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டது. (தி)

# வவுனியா உறவுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை அவசியம்

## மைத்திரியிடம் வலியுறுத்துகிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜன. 26

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன் னெடுத்துள்ள உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவருக்கு நேற்று அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் வடக்கு மாகாண முதல மைச்சர் தெரிவித்துள்ளதாவது:

காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுத்துவரும் உணவு ஒறுப்புப் போராட் டம் தொடர்பில் தாங்கள் அறிந்திருக்க முடி யும். மூன்றாவது நாளாக அவர்கள் குடிதண் ணீர் மற்றும் உணவை ஒறுத்து போராட் டத்தை நடத்துகிறார்கள். அவர்களின் உடல் நிலை மோசமடைகிறது. அவர்களுக்கு விரை வாக நாம் எதனையும் செய்யவில்லை எனில் பெறுமதிமிக்க உயிர்களை நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தங்களுடைய ஆட்சி வந்த போது எமது மக் களின் உரிமைகள் கிடைக்கும் என்ற எதிர் பார்ப்பு இருந்தது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் மற்றும் தமிழ் அர சியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங் கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகள் இடம் பெறும் என்று நம்பப்பட்டது.

காணாமற்போனோர் அலுவலம் அமைக்கும் விடயம் பெயரளவிலேயே உள்ளது. அந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டாலும் இராணு வத்தைச் சேர்ந்த சந்தேகநபர்களுக்கு எதி ராக நடவடிக்கைகளை எடுக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களிடம் சில கோரிக் கைகளை முன்வைக்கின்றேன்.

மூத்த அமைச்சர் ஒருவர் நேரடியாக வவுனி யாவுக்குச் சென்று, உணவு ஒறுப்புப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சில உத்தர வாதங்களை வழங்கவேண்டும்.

காணமற்போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தொடர்பில் தகவல்களை வழங்க கால அவகாசத்தை வழங்கவேண்டும்.

ஒளிப்படம் ஒன்றில் தங்களுக்கு அருகாமை யில் நின்ற மாணவி ஒருவருடைய தாயாரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார். குறைந்தது அந்தத் தாயாரிடம் மாணவியை வெளிப்படுத்தவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதன் ஊடாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

எந்தத் தாமதமுமின்றி உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன் - என் றுள்ளது. (வ)

## இளைஞன் மீது வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் கஸ் தூரியார் சாலையும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி சாலையும் இணையும் சந்தியை அண்மித்து நேற்றுப் பிற்பகல் ஒருவர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார். ஞானசம்பந்தர் கிரிசாந்தன் என்பவரே காயம டைந்தவர்.

மோட்டார் சைக்கிள் களில் பயணித்த இனந்தெரியாத நபர்கள் முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்தவாறு சென்று வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

விசாரணைகள் இடம் பெறுகின்றன என்று யாழ்ப்பாணப் பொலி ஸார் தெரிவித்தனர். (வ-4,10)

பிணை முறி குறித்து முடிவெடுக்க

## மைத்திரியால் முடியாவிடின் நிறைவேற்றதிகாரம் எதற்கு?

### பந்துல குணவர்த்தன கேள்வி

கொழும்பு, ஜன 26

பிணை முறி மோசடியில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்காவிடின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன இருப்பதில் எந்த வொரு பயனுமில்லை என்று நாடாளுமன்ற உறுப் பினரான பந்துல குணவர்த் தன தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான கோப் குழு வால் வெளியிடப்பட்ட அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளி யிட்டபோதே பந்துல இத னைக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன காத்திரமான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். அப்படி அவரால் முடியாது போனால் நிறைவேற்று அதி காரம் கொண்ட அரச தலைவராக அவர் இருப் பதிலேயே பயனில்லை- என்றார். (தி)

## கூட்டு அரசின் ஆட்சியில் ஊழல் அதிகரித்துள்ளது

### டிரான்ஸ்பரன்ஸி குற்றச்சாட்டு

2015ஆம் ஆண்டை விட 2016ஆம் ஆண்டு இலங்கையில் ஊழல் அதிகரித்துள்ளதாக டிரான்ஸ்பரன்ஸி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு 168 நாடுகளுள் இலங்கை 83ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தது. 2016ஆம் ஆண்டு 12 இடங்கள் பின்தங்கி 95 ஆவது இடமே கிடைத்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சி காலத்தில் உலக ஊழல் தரவில் 2014 ஆம் ஆண்டில் 175 நாடுகளுக் குள் இலங்கைக்கு 85 ஆவது இடம் கிடைத்திருந்தது.

'அரசில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதும் பொதுத்துறையில் ஊழல்கள் குறையவில்லை. லஞ்ச ஊழல் ஆணைக் குழு வுக்கு அதிகாரம் இருந்தும் அது சரியான முறையில் விசார ணைகளை முன்னெடுக்கவில்லை' என்று டிரான்ஸ்பரன்ஸி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபய சேகர தெரிவித்தார். (வ-5)

## பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் யாழ். செயலகத்தில் இன்று திறப்பு

இலங்கை அயலுறவுத்துறை அமைச்சின் பிராந்திய சேவைகளுக்கான பணிய கம் யாழ். மாவட்டச்செயலகத் தில் அயலுறவுத்துறைஅமைச் சர் மங்கள சமரவீரவால் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

அயலுறவுத் துறை அமைச் சின் சேவைகளை இந்த பிராந்திய பணியகம் மூலம் பெற முடியும் என்று தெரி விக்கப்பட்டது.

வெளிநாட்டுத் தேவைகளுக் கான பிறப்பு, திருமண, இறப்பு, கல்விச் சான்றிதழ் கள், வெளிநாட்டில் தவிக் கும் இலங்கையர்களுக் கான அவர்களின் குடும்பத் தினரின் உதவிகள், புலம் பெயர்பணியாளர்களின் இழப் பீடுகள் மற்றும் வெளிநாட் டில் இருந்து நாடு திரும்பி யோருக்கான உதவிகளை வழங்குதல் போன்ற சேவை களை இந்தப் பிராந்திய பணியகம் மூலம் பெற முடியும் என்று குறிப்பிடப்பட் டது.

அயலுறவுத்துறைஅமைச்சு முதல்முறையாக இலங்கை கான தூதரக சேவை களுக்கான பிராந்தியப் பணி யகம் ஒன்றை அமைக்க வுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சின் பிராந்திய தூத ரக சேவைகளுக்கான அலு வலகமொன்றை யாழ்ப் பாணத்தில் அமைக்குமாறு வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன், அயலுறவுத்துறை அமைச் சர் மங்கள சமரவீர யாழ்ப் பாணத்துக்கு கடந்த வருடம் வருகைதந்த போது கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற் றுக் கொண்ட அமைச்சர் மங் கள சமரவீர, மிகவிரைவில் குறித்த பணியகம் அமைக் கப்படும் என்றும் உறுதியளித் திருந்தார். அதன் படி இன் றைய தினம் குறித்த பிராந் திய அலுவலகம் திறந்துவைக் கப்படவுள்ளது. (வ-8)

## விமலை சந்தித்த சரத் என் சில்வா

கொழும்பு, ஜன.26

விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் நலன் விசாரிக்க அரசியல் வாதிகள், கலைஞர்கள், தொழில்சார் வல் லுநர்கள் என பலர் சிறைக்குச் சென்று வரு கின்றனர்.

இவர்களைத் தவிர அரசில் அங்கம் வகிக்கும் இரா ஜாங்க அமைச்சர்களாக டிலிப் விஜேசேகர, சுமேதா ஜயசேன ஆகியோரும் வீரவன்சவைச் சிறையில் சென்று சந் தித்து நலன் விசாரித்துள்ளனர்.

இந்த நிலையில், முன் னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சிறைக்குச் சென்று விமல் வீரவன் சவைச் சந்தித்துள்ளார்.

இது குறித்து தனக்கு நெருக்கமான வர்களிடம் சரத் என் சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு எதி ராக நடக்கும் விசாரணை அறிக்கை, குற்றச்சாட்டு போன்ற வற்றை ஆராய்ந் தேன். விமல் எந்தக் குற்றமும் செய்ய வில்லை என்பது தெரி கின்றது என அவர் கூறி யுள்ளார். (தி)

# சு.கட்சி அரசில் மட்டுமே அமைச்சராக இருப்பேன்

## பிரியங்கர ஜயரத்ன உறுதி

கொழும்பு, ஜன 26

ஆனமடுவ பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே கடந்த டிசெம் பர்மாதம் இராஜாங்க அமைச் சர் பதவியில் இருந்து விலகியதாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் அமைச் சுப் பதவியை வகிக்கத் தான் விரும்பவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரியங்கர ஜயரத்ன நாடா ளுமன்றத்தில் நேற்று முன் தினம் எதிர்க்கட்சி வரிசை யில் அமர்ந்து கொண்டார்.

இது குறித்து கருத்து வெளி யிடும்போதே அவர் இத னைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிவரிசையில்அமர்ந்த எனக்கு மூப்பின் அடிப்படை யில், மகிந்தானந்த அளுத் கமகே மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோ ருக்கு நடுவில் உள்ள ஆச னம் வழங்கப்பட்டது. எனி னும் கூட்டு எதிர்க் கட்சியில் இணையப் போவதில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் 95 நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் அரசு ஒன்றை அமைக்கப் பாடுபடுவேன்.

கட்சியின் தலைவர் என்ற வகையில் அரச தலைவ ருடன் இணைந்து செயற் படுவேன். மனச்சாட்சிக்கு இணங்க எதிர்க்கட்சி உறுப் பினராக செயற்படமுடியும் என்பதால், பிரச்சினைகள் ஏற்படாது-என்றார். (தி)

## ஏறாவூர் இரட்டைப் படுகொலை; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஜன.26

ஏறாவூர் - முகாந்திரம் வீதி இரட்டைப் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த 6 சந்தேகநபர் களையும் எதிர்வரும் பெப் ரவரி 8ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிம ன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஏறாவூர்ச்சுற்றுலா நீதிவான் நீதிமன் றத்தில் நேற்று முற் படுத்தப் பட்டபோதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப் பித்தார்.

ஏறாவூர் - முகாந்திரம்வீதி முதலாவது குறுக்கு ஒழுங் கையிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம் மது உஸைரா (வயது-56) அவரது மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது-32) ஆகியோர் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி நள்ளி ரவு வேளையில் இனந் தெரியாத நபர்களினால் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் அதே பிரதேசத்தை சேர்ந்த 06 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். (தி)

### அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி 57 இல் வசிக்கும் இ.48, சோமர்வெல் றோட், ஹறோ, மிடில்செக்ஸ், எச்ஏ 2 8ரிரி ஐக்கிய ராட்சியத்தைச் சேர்ந்த **சகுந்தலா பிரபாகரன்** ஆகிய நான் 60 /1, செட்டித்தெரு, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **கணபதி பிறைசூடி** என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட இலண்டனைச் சேர்ந்த எஸ்.செல்வமுருகானந்தம் என்ற சொலிசிற்றினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2012 ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 22ஆம் திகதி என திகதியிடப்பட்டதுமான அற்றோணித்தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட **கணபதி பிறைசூடி** என்பவரினால் எனக்காகவும், என் சார்பாகவும் செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

**சகுந்தலா பிரபாகரன்**
**அற்றோணித்தத்துவம் வழங்கியவர்**

2017 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி

### அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி 57 இல் வசிக்கும் இ.48, சோமர்வெல் றோட், ஹறோ, மிடில்செக்ஸ், எச்ஏ 2 8ரிரி ஐக்கியராட்சியத்தைச் சேர்ந்த இராஜரெட்ணம் பிரபாகரனும் பெண் சகுந்தலா பிரபாகரனும் ஆகிய நாங்கள் 60/1, செட்டித்தெரு, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதி பிறைசூடி என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட இலண்டனைச் சேர்ந்த எஸ்.செல்வமுருகானந்தம் என்ற சொலிசிற்றினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2016 ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 29ஆம் திகதி என திகதியிடப்பட்டதுமான அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகின்றோம்.

இங்கு குறிப்பிடப்பட்ட கணபதி பிறைசூடி என்பவரினால் எமக்காகவும், எம் சார்பாகவும் செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம்.

**இராஜரெட்ணம் பிரபாகரன்**
**சகுந்தலா பிரபாகரன்**
**அற்றோணித்தத்துவம் வழங்கியவர்**

2017 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி

### அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி 57 இல் வசிக்கும் இ.48, சோமர்வெல் றோட், ஹறோ, மிடில்செக்ஸ், எச்ஏ 2 8ரிரி ஐக்கியராட்சியத்தைச் சேர்ந்த **இராஜரெட்ணம் பிரபாகரனும் பெண் சகுந்தலா பிரபாகரனும்** ஆகிய நாங்கள் 57, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **கலைச்செல்வன் சசிகலா** என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு ஜே.எஸ்.ஏ. மதுரநாயகம் அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் 2015 ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 28ஆம் திகதி என திகதியிடப்பட்டதுமான அற்றோணித்தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகின்றோம்.

இங்கு குறிப்பிடப்பட்ட **கலைச்செல்வன் சசிகலா** என்பவரினால் எமக்காகவும், எம் சார்பாகவும் செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம்.

**இராஜரெட்ணம் பிரபாகரன்**
**சகுந்தலா பிரபாகரன்**
**அற்றோணித்தத்துவம் வழங்கியவர்**

2017 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி

### அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி 57 இல் வசிக்கும் இ.48, சோமர்வெல் றோட், ஹறோ, மிடில்செக்ஸ், எச்ஏ 2 8ரிரி ஐக்கியராட்சியத்தைச் சேர்ந்த **சகுந்தலா பிரபாகரன்** ஆகிய நான் 57, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **கலைச்செல்வன் சசிகலா** என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட லண்டனைச் சேர்ந்த எஸ்.செல்வமுருகானந்தம் என்ற சொலிசிற்றினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் 2015 ஆம் ஆண்டு 04ஆம் மாதம் 16ஆம் திகதி என திகதியிடப்பட்டதுமான அற்றோணித்தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட **கலைச்செல்வன் சசிகலா** என்பவரினால் எனக்காகவும், என் சார்பாகவும் செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

**சகுந்தலா பிரபாகரன்**
**அற்றோணித்தத்துவம் வழங்கியவர்**

2017 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி

# ஓவிய - சிற்ப கண்காட்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு, ஜன. 26
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் 2017ஆம் ஆண்டுக்கான அரச ஓவிய சிற்பக் கண்காட்சி விழா மற்றும் அரச சிறுவர் ஓவிய விழாவுக்கான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் இலங்கையிலுள்ள ஓவியக் கலைஞர்களின் ஆக்கத்திறன்களையும் படைப்புக்களையும் மதிப்பிட்டு முதன்மை அரச ஓவிய விழாவில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை இதன் மூலம் வழங்குகின்றது என்று கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த ஆக்கங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கடந்த 20ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.culturaldept.gov.lk என்ற இணையத் தளம் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். இதற்கு மேலதிமாக மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகத்திலும் உள்ள கலாசார அதிகாரிகளிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆக்கத்துடன் கூடிய இறுவட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தினைப் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்செறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும். அரச சிறுவர் ஓவிய விழாவுக்கான சகல ஆக்கங்களும் தேசிய ஒருங்கிணைப்பாளர், அரச கட்புலக் கலை ஆலோசனைக் குழு, தேசியகலா பவனம், ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்குத்தபால்மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும். போட்டிப் பிரிவு இரண்டுக்குமான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஆக்கங்கள் 2017 மார்ச் மாதம் 10 ஆம் திகதிவரைமட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் -என்றார். (வ)

## ஆழ்கடல் செல்வதை தவிர்க்கும் மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.26
சீரற்ற காலநிலையால் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பதை மீனவர்கள் தவிர்த்துள்ளனர். யாழ்ப்பாணம், தீவுப்பகுதி, வடமராட்சி போன்ற இடங்களில் கடந்த மூன்று நாள் களாக மீனவர்கள் ஆழ்கடலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது குடாநாட்டு மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலை திடீரென அதிகரித்துள்ளன. பாசையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை மீன்சந்தைகளுக்கு மிகக் குறைந்தளவு கடலுணவுகளே விற்பனைக்கு வருகின்றன. (ற-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட மாகாண சபை கௌரவ உறுப்பினர் திருமதி **அனந்தி சசிதரன்**



வட மாகாண சபை கௌரவ உறுப்பினர் திரு. **இமானுவல் ஆனல்ட்**



நல்லூர் பிரதேச சபை முன்னாள் கௌரவ உறுப்பினர் திரு. **கிட்னர் தர்மரெட்னம்**

கொக்குவில் கிழக்கு காளி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்திற்கு தங்கள் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகைப் பணத்தை தந்துதவிய வடமாகாண சபை கௌரவ உறுப்பினர்களான **திரு. இமானுவல் ஆனல்ட்** அவர்களையும், **திருமதி அனந்தி சசிதரன்** அவர்களையும் மற்றும் இவர்களிடமிருந்து இந்த நிதியைப் பெற்றுத் தந்த நல்லூர் பிரதேச சபை முன்னாள் கௌரவ உறுப்பினர் **திரு. கிட்னர் தர்மரெட்னம்** அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**கொக்குவில் கிழக்கு,**
**காளி அம்பாள் ஆலய பரிபாலன சபை.**

(J/602)
(22,18,17)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்
32 ஆவது பட்டமளிப்பு நிகழ்வில்
கடந்த 10.01.2017 ஆம் திகதி
**"அரசறிவியல் சிறப்புக் கலைமாணி"**
பட்டத்தைப் பெற்ற
**செல்வி**
**லக்ஸ்சினி சிவபாலசுப்பிரமணியம்**
(B.A.(Hons) First Class)
அவர்களைப் பாராட்டி மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.



**வாழ்த்துவோர்:-**
**சித்தப்பா, சித்தி குடும்பத்தினர். (கனடா)**
**மச்சாள், உடன்பிறவா அண்ணா குடும்பத்தினர். (கனடா)**
**ஆசைமாமா குடும்பத்தினர். (கனடா)**
**சித்தி குடும்பத்தினர். (கனடா)**

(J/R/447)
(22,18,17)

# பயிரழிவு காப்புறுதி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.26
வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் அழிவு காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

அழிவை எதிர்கொண்ட அனைத்து விவசாயிகளும் விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளர், பெருளாளர்களுடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்த வேண்டும் என்று சண்டிலிப்பாய் கமநல சேவை நிலைய பெரும்பாக அலுவலர் கே.கோகுலன் தெரிவித்தார்.

கெட்ட- தருண உரமானிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் பயிர் அழிவுக்கான படிவங்கள் கமநல கேந்திர நிலையங்களில் வழங்கப்படவுள்ளன.

படிவங்களை இன்று வியாழக்கிழமை முதல் (இருநாள்களில் ) படிவங்களைப் பெற்று முழுமைப்படுத்தி வழங்க வேண்டும் என்றும், விவசாயிகளை விரைந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காரைநகர் கம்நலகேந்திர நிலையத்துக்குட்பட்ட நெற்பயிர் அழிவுகொண்ட விவசாயிகளும் இதே நடைமுறையைப் பின்பற்றி இன்று வியாழக்கிழமை முதல் படிவங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

# வறட்சி நிவாரணம் வழங்க பதிவு

அளவெட்டி, ஜன.26
அளவெட்டிப் பிரதேச கமக்கார அமைப்பு தமது எல்லைக்குட்பட்ட காலபோக நெற்செய்கை யாளர் களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது தொடர்பான பதிவுகளை மேற்கொண்டுள்ளது.

பயிரழிவு சேதவிவரங்களைத் தனித்தனி மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு கமக்காரர் களி டமிருந்து விவரங்களைப் பெறப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர் கள் இது தொடர்பாக விவசாய சம்மேளனத்திடம் தமது பதிவு விவரங்களைப் பதிவு செய்ய முடியும் என்று விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (ற-36)

## பல்கலை. கல்விசாரா ஊழியர் மீண்டும் போராடத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 26

மாதாந்தம் வழங்கப்பட்டுவரும் மேலதிகக் கொடுப்பனவை அதிகரிக்கும் சுற்றறிக்கை இதுவரை வெளியிடப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக் கழகங்களிலுள்ள சுமார் 14 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் போராடத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இம்மாதம் முதல் அதிகரித்துத் தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுயை மீறும் விதமாக அரசு செயற்பட்டு வருவதாகவும் ஊழியர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசு இவ்வாறு செயற்பட்டால், அதற்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் குறித்து தீர்மானிப்பதற்கு எதிர்வரும் 31 ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள் கூடிக் கலந்துரையாடவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வழங்கப்படும் சம்பளத்தின் 20 வீதமான மேலதிகக் கொடுப்பனவை அதிகரித்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி, கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஒகஸ்ட் 08 ஆம் திகதி அரசின் வாக்குறுதிகளையடுத்து கைவிடப்பட்டதாகவும் சங்கம் கூறியுள்ளது. (த)

## பேருந்து விபத்தில் 7 பெண்கள் படுகாயம்

பொகவந்தலாவை–ஹற்றன் பிரதான வீதி, நேர்வூட் சிங்கள வித்தியாலயத்துக்கு அருகில் நேற்றுக் காலை, இடம் பெற்ற பேருந்து விபத் தில் படுகாயமடைந்த ஏழு பெண்கள், டிக்கோயா மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். நோர்வூட் ஆடைத் தொழிற்சாலையில் பணிப்புரியும் பெண்களை ஏற்றிவந்த பேருந்தே, இவ்வாறு வடிகானில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. பின்னால் வந்த பேருந்துக்கு இடம் கொடுக்க முற்பட்டபோது, வேகக்கட்டுப்பாட்டை இழந்து பேருந்து வடிகானில் விழுந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (த)




## உள்ளூராட்சி அரசியலில் பெண்களுக்கு 50 வீத பங்கு

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளர் கிருத்திகா வலியுறுத்தல்



மட்டக்களப்பு, ஜன.26

அரசியலில் பெண்கள் புறக்கணிக்கப்படக் கூடாது. உள்ளூராட்சி அரசியலில் பெண்களுக்கு 50 சதவீதப் பங்கு வழங்கப்பட வேண்டும் என அங்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அகில இலங்கை இணைப்பாளர் ம. கிருத்திகா தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் நேற்று நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசியலின் உள்ளூராட்சித் துறையில் 1.8 சதவீதமான பெண்களே உள்ளதுடன், அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த நிலையிலேயே இருந்து வருகின்றது.

தற்போது பெண்கள் அனைத்துத்துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். அரச துறையாக இருக்கலாம், தனியார் துறையாக இருக்கலாம், அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்களின் திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால், பெண்களால் ஒதுக்கப்பட்ட ஒரு துறையாக அரசியல்துறை காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள அரசியல் நிறுவனங்கள் அனைத்திலும் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்கை வலுப்படுத்தும் நோக்கில் நாங்கள் விழிப்புணர்வுப் பரப்புரை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். மக்கள் விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்பதற்காகவும் மக்கள் எவ்வளவு தூரம் இதனை ஆதரிக்கின்றனர் என்பதை அறிந்து கொள்வதற்காகவும் கையெழுத்துகளைப் பெறுகின்றோம்–என்றார். (த)



# அபிவிருத்திச் சட்டவரைவு திருத்தப்பட்ட பின்னரே அது குறித்துத் தீர்மானம்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.26

சிறப்பு அபிவிருத்தி தொடர் பான சட்ட வரைவு திருத்தப் பட்டதன் பின்னர் அது தொடர்பில் கிழக்கு மாகாண சபை தீர்மானிக்கும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னு லாப் தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்

சிறப்பு அபிவிருத்தி தொடர்பான சட்ட வரைவு நேற்று முன்தினம் மாகாண சபையில் வாக்கெடுப்புக்கு விடப் படவிருந்த நிலையில், மாகாணசபை அமர்வில் உரையாற்றிய முதல மைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.



முதலமைச்சரின் கருத்துக்கு உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

அத்துடன் மாகாண சபைக ளின் அதிகாரங்களைப் பறித் தெடுக்கும் வகையில் முன் வைக் கப்படும் எந்தவொரு சட்டவரை வுக்கும் கிழக்கு மாகாண சபை ஆதரவளிக்கப் போவதில்லை எனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க குறித்த சட்டவரை வைத் திருத்தத்துடன் முன்வைக்கும் பட்சத்தில் அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மா னம் ஒன்றை எடுக்கவுள்ளதாக வும் அவர் கூறினார்.

அத்துடன் மாகாணங்களின் அபி விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் மாகாண சபைகளை யும் இணைத்துக்குக் கொண்டு அபிவிருத்திகளை முன்னெடுப் பதற்கு, சிறப்பு அபிவிருத்திச் சட்ட வரைவு ஊடாக அரசு தீர்மா னித்தால் அதனை வரவேற்கத் தயாராகவுள்ளதாகவும் முதல மைச்சர் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தத்தின் ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஊடாக சகல இனங்களுக்கு மான சுபீட்சமிக்க தீர் வொன்றை வழங்குவதன் மூலமாகவும் மாகாண சபைகளுக்கு நியா யமாக வழங்க வேண்டிய அதி காரங்களை உறுதிப்படுத்து வதனூடாகவும் மாகாணங்கள் தாமாகவே அபிவிருத்திய டைந்துவிடும் எனவும் கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார், உத்தேச அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவு ஊடாகத் தேர்தல் முறைமையில் சிறுபான்மை மக்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் வழிவகைகள் செய் யப்பட்டுச் சிறுபான்மை மக் களின் அரசியல் எதிர்காலம் கேள் விக் குறியாகாத வகையில் நட வடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டும், அத்துடன் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகா ணம் குறித்து அரசு கூடுதல் கவனம்செலுத்தி இந்த மாகா ணத்தின் அபிவிருத்திப் பணி களுக்கு கூடுதல் நிதியினை வழங்க வேண்டும்- என்றார் முதலமைச்சர். (த-ய-46)



நல்லதோர் வாய்ப்பு
உங்களது புதிய வீட்டை மற்றும் பழைய வீட்டைப் புதுப்பிக்க சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு கூரை ஓடு
சூர்யா கூரை ஓடு
யாழ்ப்பாணம்
Saai Tile & Bricks / 0776170183

# கடலில் படகு கவிழ்ந்ததில் சகோதரர்கள் இருவர் சாவு

## மற்றொருவர் உயிருடன் மீட்பு
## இறால் பிடிக்கச் சென்றவேளை சம்பவம்

மட்டக்களப்பு, ஜன.26

மட்டக்களப்பு முகத்து வாரம் கடலில் படகு கவிழ்ந்ததில் இரு சகோதரர்கள் உயிரி ழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற் றுள்ளது.

கடலில் இறால் பிடிக் கச் சென்ற இருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளனர்.

மேலும், ஒருவர் சக மீனவர்களால் காப் பாற்றப்பட்டு மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இறால் பிடித்துக் கொண்டு கரையை நெருங்கும் போதே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

மட்டக்களப்பு திராய் மடு 8ஆம் குறுக் கைச் சேர்ந்த துரை மணி வசந்தன் (வயது-26) மற்றும் துரை மணி செல்வா (வயது-18) என்ற இருவருமே உயி ரிழந்துள்ளனர். இரு வரின் சடலங்களும் கடலாட்சி அம்மன் கடற்கரையில் ஒதுங் கிய நிலையில் மீட் கப்பட்டன. சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை மட்டக் களப்பு பொலி ஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த-ய-46,47)

8 வது
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
நாளை ஆரம்பம்

JITF
2017
27 28 29
ஜனவரி
JANUARY
10.00 am - 8.00 pm

கல்வி
2017
Special Education Pavilion

கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிற்துறை
நுகர்வோர் பொருட்கள்
ஆடைத் தொழிற்துறை
விவசாய தொழிற்துறை

முக்கிய அதிகாரிகளுடன் நேரடி சந்திப்புக்கள் மற்றும் உரையாடல்

விருந்தோம்பல் தொழிற்துறை
நிர்மாண தொழிற்துறை
நிதியியல் சேவை நிறுவனங்கள்

சராசரியாக எமது பார்வையாளர்களில் 70% ஆனோர் கண்காட்சியாளர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்

மோட்டார் வாகனத் தொழிற்துறை மற்றும் உபகரணம்
உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை
பிரயாணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை

இசை நிகழ்வுகள்
50%

jitf.lk
www.jitf.lk










ORGANIZED BY
IN ASSOCIATION WITH
CO-SPONSOR
S-lon
SUPPORTED BY
ENDORSED BY
PARTNER COUNTRY
OFFICIAL PARTNERS
BEAUTY CARE PARTNER
INTERIOR PARTNER
FOOTWEAR PARTNER
PROCESSING MACHINERY & EQUIPMENT PARTNER
HEALTH CARE PARTNER
FOOD PARTNER
MACHINERY & POWER TOOL PARTNER
MOBILE TELECOMMUNICATION PARTNER
PRINT MEDIA TAMIL
ELECTRONIC MEDIA



## போக்குவரத்து விதிகள் விழிப்புணர்வு நிகழ்வு

வவுனியா, ஜன.26

வீதிச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியா, பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிவில் சமூக பொலிஸ் குழுவும், போக்குவரத்துப் பொலிஸாரும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

மாணவர்களுக்கான விளக்கங்களை பொலிஸ் அதிகாரி எஸ்.ஜெயபிரகாஸ் வழங்கினார். சிவில் சமூக பொலிஸ் குழு அதிகாரி கே.புஸ்பகுமார, போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி எ.அசோக் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நெறிப்படுத்தலில் விழிப்புணர்வு நிகழ்வுகள் பாடசாலைகளில் நடத்தப்படுகின்றன. (ற)

### காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

# அரசின் பதில் உடன் தேவை

### வடக்கு சுகாதார அமைச்சர் வலியுறுத்து

வவுனியா, ஜன.26

உள்நாட்டுப் போரில் பல சந்தர்ப்பங்களில் ஏராளமானோர் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உண்மை நிலை தொடர்பில் அவர்களது உறவினர்களுக்கு பதில் வழங்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. அதிலிருந்து அரசு எளிதாக விலகிவிட முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் நேற்றுமுன்தினம் முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே வடக்கு சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் உள்ளதாவது:

கடந்த 30 ஆண்டுகளாக தமிழர் தாயகத்தில் பெருமளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்களும், போராட்டத்தில் எந்தவித ஈடுபாடும் கொண்டிராதவர்களும் அவர்களுள் அடக்கம்.

உலக சட்டங்களை மீறி பல்வேறு தரப்பினரால் இந்தச் செயற்பாடு நடந்துள்ளது. பொறுப்புள்ள அரசு என்ற வகையில் இவற்றுக்கான பொறுப்புக் கூறலில் இருந்து அரசு தப்ப முடியாது. 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிப் போரில் அரச படைகளின் வேண்டுகோளின்படி - அப்போதைய அரசை நம்பித் தமது உறவுகளை மக்கள் அவர்களிடம் கையளித்தனர். கையளிக்கப்பட்டவர்கள் இன்று வரை உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவில்லை.

கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன ஆனது என்பது தொடர்பாக அரசு உரிய விசாரணை நடத்த வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டது முதல் அவர்களை மீட்டெடுக்கும் நம்பிக்கையுடன் உறவினர்கள் அலைகின்றனர். போராட்டங்கள், சந்திப்புகள் எனப் பல நடத்தப்பட்டபோதும், வாக்குறுதிகள் பல வழங்கப்பட்டபோதும் இதுவரை உறவினர்களுக்குச் சரியான பதில் வழங்கவில்லை. முன்னைய சம்பவங்களால் நம்பிக்கையிழந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உயிரையும் மதிக்காது இப்போது சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். எனினும் தாமதிக்காது அரசு உரிய பதிலை வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ற-21)

## தத்தளித்த மீனவர்களை காப்பாற்றிய கடற்படை

யாழ்ப்பாணம், ஜன.26

கச்சதீவுக் கடலில் எரிபொருள் இன்றித் தத்தளித்த நெடுந்தீவு மீனவர்களை கடற்படையினர் காப்பாற்றிக் கரை சேர்த்தனர் என்று நெடுந்தீவு கடற்றொழில் சமாசம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கச்சதீவை அண்டிய கடற்பரப் பில் மீன்பிடியில் ஈடுபட்டனர். கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பால் மீனவர்களின் வலை இழுத்துச் செல்லப்பட்டது. வலை மீட்க மீனவர்கள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை. வலையைக்கடலில் விட்டுவிட்டு மீனவர்கள் கரை திரும்பினர். மறுநாள் வலையை மீட்பதற்காக மீனவர்கள் மீண்டும் அந்தப் பகுதிக்குச் சென்றனர். அப்போது படகில் இருந்த எரிபொருள் தீர்ந்துள்ளது. மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் தங்க வேண்டி ஏற்பட்டது.

மீனவர்கள் குடிதண்ணீர், உணவு இல்லாது சிரமப்பட்டனர். இலங்கைக் கடற்படையினர் அவர்களை மீட்டு அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். நெடுந்தீவிலிருந்து படகு மூலம் எரிபொருள் கொண்டுவரப்படும் வரை மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினர் என்று சமாசம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ற-8)

## கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு நடவடிக்கை

தென்மராட்சி, ஜன.26

யாழ்.மாவட்டத்தில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கைகளை நகர சபை மேற்கொண்டுள்ளது.

சபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்கள் தொடர்பான விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என்று நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவுறுத்தியுள்ளார்.

நாய்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக விவரங்கள் வட்டார ரீதியாக சபை அலுவலர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன. பதிவுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள், திகதிகள் ஒலி பெருக்கி மூலம் வரியிறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும். வளர்ப்பு நாய்களைப் பதிவு செய்து எதிர்காலத்தில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மகிந்த சிந்தனைத் திட்டத்தால் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் செயற்பாடுகள் கடந்த 10 ஆண்டுகளாக இடம்பெறவில்லை. கட்டாக்காலி நாய்கள் பல்கிப் பெருகியுள்ளன. நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரித்துள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சும், உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (ற-9)

## திண்மக் கழிவகற்றலுக்கு ஒத்துழைக்க கோரிக்கை


யாழ்ப்பாணம், ஜன. 26

திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவப் பிரிவுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாநகர சபை வட்டார ரீதியாக ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தது.

மாநகராட்சி ஊடாக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டம் கடந்த நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாநகர சபையும் திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டதை முன்னெடுத்துள்ளது.

திண்மக் கழிவுகளைத் தரம்பிரித்து கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும். பிளாஸ்ரிக், கண்ணாடி, இலத்திரனியல் பொருள்களை வேறாக்கி ஒப்படைக்க வேண்டும். திண்மக் கழிவகற்றும் பிரிவினருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற-17)



கிளிநொச்சி, வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கு மீனவர் ஓய்வு அறை அமைக்கப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் கட்டட அமைப்புக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கட்டட உருவாக்கப் பணிகளை கடந்த வியாழக்கிழமை பார்வையிட்டார். (ற)

## பெற்றோர், ஆசான்களை மாணவர் மதிக்கவேண்டும்

### வடக்கு கிராமிய அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை

மன்னார், ஜன.26

மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டுமானால் பெற்றோரையும், ஆசான்களையும் இரு கண்களாக நோக்க வேண்டும்.



இவ்வாறு தெரிவித்தார் வடக்கு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

மடு, கல்வி வலயத்துக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியால மெய்வல்லுநர் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

பாடசாலையின் அபிவிருத்தி மாணவர்கள் உயர்ச்சியிலேயே தங்கியுள்ளது. மாணவர்கள் விளையாட்டிலும், கல்வியிலும் அதிக கவனம் எடுக்கவேண்டும். அனைத்துத் துறைகளிலும் சமமான அக்கறைகொண்டிருக்க வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் ஒன்றுமையுடன் செயற்பட்டால் பாடசாலை மேன்மையடையும் - என்றார். (ற-21)

# சிறு கைத்தொழில்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடவேண்டும்

## யாழ். மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்ச்சி வியாபாரத்தை மட்டும் நம்பியிருக்காமல் சிறு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். தற்போதைய காலத்தின் சூழ் நிலைக் கேற்றவாறு வியாபார நடவடிக்கைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காங்கேசன்துறையிலுள்ள தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் 27 வருடங்களின் பின்னர் நேற்றுக் காலை மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ந.உமாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் ஆகியோர் இணைந்து நிலையத்தைத் திறந்தனர். மாவட்டச் செயலர் வேதநாயகன் அங்கு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பு ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது. தற்போது இந்தச் சங்கத்தில் வியாபார நடவடிக்கைகள் குறைந்துள்ளன. வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி அந்தப் பகுதிகளில் கூட்டுறவாளர் கிளை நிலையங்களைத் திறக்க வேண்டும். நுகர்ச்சி வியாபாரத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டாம். சூழ்நிலைக்கு ஏற்றவாறு சங் கங்கள் சிறுசிறு கைத்தொழில் நடவடிக்கை களில் ஈடுபட முன்வர வேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப் பட்டதன் மூலம் காங்கேசன்துறைப் பிரதேச மீனவர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் உரையாற்றும்போது எரிபொருள் நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கூட்டுத்தாபனம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேசசெயலர் ஸ்ரீமோகனன், கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.மோகன், முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ற-17)

# வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதி விரைவில் பாவனைக்கு

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.26

வற்றாப்பளை - புதுக்குடியிருப்பு வீதியின் ஒருபகுதித் திருத்த வேலைகளே முடிந்துள்ளன. மக்கள் பாவனைக்கு வீதியை விடுவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இவ்வாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் சி.குணபாலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த புதுக்குடியிருப்பு - வற்றாப்பளை வீதி நேற்று மக்கள் பாவனைக்கு விடப்படும் என்று கூறப்பட்டது. எனினும் வீதி கையளிக்கப்படவில்லை. எமது பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு 5 கிலோமீற்றர் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. வயல்களுக்குச் செல்வோரும் சிரமத்தின் மத்தியிலேயே செல்ல வேண்டியுள்ளது. விடுவிக்கப்படும் என்று கூறப்பட்ட வீதி எப்போது விடு விக்கப்படும்?- என்று பிரதேச செயலரிடம் மக்கள் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

மக்களுக்குப் பதிலளித்த பிரதேச செயலாளர், மக்கள் பாவனைக்கு விடுவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. திருத்த வேலைகள் முடிந்ததும் பாவனைக்கு விடப்படும் - என்று தெரிவித்தார். (ற-7)

# காணியை விடுவிக்க வலியுறுத்தி கேப்பாபிலவில் ஆர்ப்பாட்டம்





முல்லைத்தீவு, ஜன.26

தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். கேப் பாப்பிலவு பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவுக்கு நேற்று வருவார் என்று அறி விக்கப்பட்டிருந்தது. 53 குடும்பங் களுக்குச் சொந்தமான 243 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது.

கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் வாழ்வோரின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. வற்றாப்பளை கிராமத்தைச் சேர்ந்தவர்களின் காணிகளையே ஜனாதிபதி விடுவிக்கவுள்ளார் - என்று கேப்பாபிலவு மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். தமது காணிகளை விடு விக்க வலியுறுத்திப் போராட்டம் நடத்தவுள்ளோம் என்றும் கூறியிருந்தனர்.

முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி வரும் சந்தர்ப்பத்தில் போராட்டங்கள் எவையும் நடத்தக் கூடாது என்று இராணுவத்தினர் கடுமையாக அறிவுறுத்தியிருந்தனர். இராணுவத்தின் எச்சரிக்கையும் மீறி கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளுக்காக கொட்டும் மழையிலும் காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.


கலகம் அடக்கும் பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர். சிவில் உடைகளில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. மாதிரிக் கிராமத்தில் உள்ளவர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. வற்றாப்பளையில் உள்ளவர்களின் காணிகளை விடுவித்து அரசு கண்துடைப்புச் செய்கின்றது. எமது காணிகளை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்பதை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவே நாம் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்துகின்றோம்.- என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முல்லைத் தீவுக்குச் செல்லவில்லை. அவரது பயணம் இடைநிறுத் தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் சந்தித்தார். ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் பிரதேச செயலரிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

விடுவிக்கப்படும் காணிகளில் உங்களின் காணிகளும் விடுவிக்கப்படும் என்றே எண்ணியிருந்தோம். உங்கள் காணிகள் உள் வாங்கப்படாமை கவலை தருகின்றது.



உங் கள் மனுவை மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்புவேன் - என்று பிர தேச செயலாளர் உறுதியளித்தார்.

ஆர்ப்பாட்டம்மேற்கொண்டவர்கள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். (ற-21,7,35)

# வவுனியா உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு ஆதரவு

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்கள் வவுனியாவில் நடத்தும் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றோம். தமிழ் மக்களும், இளைஞர்களும் அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு புதிய ஜன நாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் கா.செந்திவேல் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது-

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த மூன்று நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பொதுமக்கள் அணி திரள வேண்டும். காணா மல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தற்போதைய அரசும் தெளிவான பதில் கூறவில்லை.

அரசியல் கட்சிகளின் விடுதலை, பயங்கர வாதச் சட்டத்துக்கான தடை போன்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் உறவுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும். ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்துப் போராடிய இளையோர்கள் இந்தப் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ற-8)



# மரமுந்திரிகை கூட்டுத்தாபன பிராந்திய அலுவலகம் திறப்பு

மன்னார், ஜன.26

இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத் தாபனத்தின் பிராந்திய அலுவலகம் நேற்று மன்னார், தாழ்வுப்பாடு பிரதான வீதியில் திறக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் மாவட்ட உதவிப் பிராந்திய முகாமையாளர் லோகதாசன் சஞ்ஜீவ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை அடிகள் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்தார்.

பிராந்திய அலுவலகம் மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கான பிராந்திய அலுவலகமாகச் செயற்படும். மர முந்திரிகை உற்பத்தியை ஊக்குவித்தல், மர முந்திரிகைக் கன்றுகள் வழங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இதனூடாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)

## ஸ்கந்தபுரம் — முக்கொம்பன் வீதியில்

# கனரக வாகனங்களில் பயணிக்க வேண்டாம்

## பிரதேச பொது அமைப்புகள் கோரிக்கை



கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் 4 கிலோமீற்றர் வீதியை கனரக வாகனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

தற்போது மழையுடனான காலநிலை நிலவுகின்றது. இந்த வீதி வயல்களின் ஊடானது என்பதால் கனரக வாகனங்கள் சேற்றில் புதைகின்றன. போக்குவரத்துத் தடைப்படுகின்றது. இந்த வீதியால் அக்கராயன் - யாழ்ப்பாணம் இடையே ஒரு இ.போ.ச. பேருந்தே சேவையில் ஈடுபடுகின்றது. கனரக வாகனங்கள் சேற் றில் புதைவதால் இ.போ.ச. பேருந்தும் சேவையில் ஈடுபட முடியாது போகும்.

வீதி சீரமைக்கப்படும் வரை கனரக வாகனங்கள் மாற் றுப் பாதையைப் பயன்படுத்த வேண்டும் என்று அவை கோரிக்கை விடுத்தன. (ற-21)

# தேரருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜன 26

அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு மங்களராயம விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்தின தேரர் மற்றும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் உப தலைவர் வி.பூபாலராஜா ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எதிர் வரும் மே 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் இன ரீதியான பேச்சுகளைப் பேசியதாகக் கூறி, அம் பிட்டியே சுமணரத்ன தேரருக்கு எதிராகவும், அமைதிக்குப் பங்கம் விளை வித்ததாகக் கூறி தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் உப தலைவர் வி.பூபாலராஜாவுக்கு எதிராகவும் மட்டக்களப்பு நீதிவான் மன்றத்தில் மட்டக்களப்புப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதை அடுத்து, இவர்கள் இருவரையும் கடந்த டிசெம்பர் 14ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் மன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது.

இது தொடர் பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் மன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதிவான் அதனை ஒத்திவைத்தார். (தி)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்

# மக்கள் போராட்டமாக மாற்றம் பெற்றாலே சரியான தீர்வு வரும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

வவுனியா, ஜன.26

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறுகின்றபோதுதான் சரியான தீர்வு கிடைக்கும்.

இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் கடந்த 3 நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பிள்ளைகளைத் தொலைத்தவர்கள், இராணுவத்தினரிடம் பிள்ளைகளை ஒப்படைத்தவர்கள் படும் வேதனை அளவிட முடியாதது.

காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கிருக்கின்றார்கள் என்று அரசு எம்மிடம் கேட்கின்றது. அதைத் தெரியாமல் தானே பிள்ளைகளைத் தொலைத்த பெற் றோர் ஏழு ஆண்டுகளாகப் பரிதவித்த வண்ணமுள்ளனர்.

இந்தப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறினாலே இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். எந்த இடத்திலும் ஒரு சாரார் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றபோது மறுசாரார் வேறு திசைகளில் செல்வதையும், முக்கியத்துவம் கொடுக்காது இருப்பதையும் உணர்கின்றேன்.

கட்சி பேதம் இன்றி அனைவரும் வடக்கு, கிழக்கு என்றில்லாது உலகம் முழுதுமுள்ள எமது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக, அவர்கள் மீண்டு வர வேண்டும். தங்கள் பெற்றோரோடு சேர்ந்து வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். எமது தமிழ் மக்கள் அனைவரும் ஒரே கூரையின் கீழ் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தால்தான் இது சாத்தியப்படும்.

பிள்ளைகளைப் பறிகொடுத்த எமது பெற்றோர்கள் சில நாள்களாக உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கொட்டும் மழையிலும் அவர்கள் கோரிக்கையை விடாது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்துடன் இருக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகள் எங்கிருக்கின்றார்கள் என்பது எவருக்கும் தெரியவில்லை. கூட்டாட்சி அரசு அவர்களைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.-என்றார். (ற-21)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அனைவருமே போராடவேண்டும்

## வணபிதா செபமாலை அடிகள் அழைப்பு



வவுனியா, ஜன.26

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் 14 பேருடன் நிற்கப் போவதில்லை. இன்னும் ஆயிரக்கணக்கான தாய்களும், ஆயிரக்கணக்கான நலன் விரும்பிகளும், மக்களும் இதில் இணை வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரான வணபிதா செபமாலை அடிகளார் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கடந்த 3 நாள்களாக வவுனியாவில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்படுகின்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

இவர்கள் விரக்தியின் விளிம்புக்குச் சென்று கடந்த 3 நாள்களாக உணவு ஒறுப் பில் ஈடுபட்டுள்ளனர். அரசு காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கூறியே ஆக வேண்டும். அரச தலைவர், அதிகாரிகள் ஐக்கிய நாடுகள் சபைக்குப் பதில் கூறியே ஆக வேண்டும்.

சரிலியோன், ஆஜன்ரீனா போன்ற நாடுகளிலே இவ்வாறான தாய்களின் அயராத போராட்டத்தால் அவர்களுக்கு நீதி கிடைத்திருக்கின்றது. இலங்கையிலும் கடந்த பல ஆண்டுகளாகப் போராடிப் போராடிக் களைத்து இறுதியில் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்துக்குச் சென்றிருப்பது இவர்களின் விரக்தியையும், அரசின் கையாலாகாத தனத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

அரசு உடனடியாக தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் அதற்கு சாத்தியமான பதில்களை சொல்ல வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அமைக்கப்படவிருக்கின்ற அலுவலகம் கூட எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. உள்ளக பொறிமுறை விசாரணை எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. அரசு எங்களுக்கு ஒரு சரியானபதிலைக்கூற வேண்டும். பொய்களைக் கூறி ஏமாற்றாமல் இவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் -என்றார். (ற-21)

# 852 பியர் போத்தல்களுடன் இருவர் கைது

நுவரெலியா, ஜன.26

பண்டாரவளையிலிருந்து எல்ல நகருக்கு வானொன்றில் சட்டவிரோதமாகக் கொண்டுச் செல்லப்பட்ட 852 பியர் போத்தல்களுடன், இரு சந்தேகநபர்களை பண்டாரவளைப் பொலிஸ் புலனாய்வுப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்தே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, பியர் போத்தல்கள் அடங்கிய 21 பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்படி இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-ய-43)

# நீதி அமைச்சு மீது மைத்திரி அதிருப்தி

கொழும்பு, ஜன 26

அதிர்ஷ்டலாபச் சீட்டின் விலையைத் திடீரென அதிகரிப்பதற்கு நிதியமைச்சு எடுத்த முடிவு குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நிதியமைச்சின் இவ்வாறான தன்னிச்சையான தீர்மானங்களால் அரசை மக்கள் குற்றஞ் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கண்பார்வையற்றவர்கள், வறிய மக்கள் எனச் சுமார் 20 ஆயிரம் பேர் வரை அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர் என சுட்டிக்காட்டிய அரச தலைவர், அதன் விலையை அதிகரிப்பதற்கு ஒரு போதும் அனுமதியளிக்கமாட்டேன் எனக் குறிப்பிட்டார்.

20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டினை 30 ரூபாவாக உயர்த்தவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்திருந்த நிலையில், அதற்கெதிராக அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையாளர்கள் பணிப்புறக்கணிப்புப் பேராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து, அதிர்ஷ்டலாபச் சீட்டின் விலையில் மாற்றம் ஏற்படுத் தப்படமாட்டாதென அரச தலைவர் கடந்த வாரம் அறிவித்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# முதிரை மரக் குற்றிகளை கடத்த முயன்றவர் கைது



முல்லைத்தீவு, ஜன. 26

நெடுங்கேணி சேமமடுவில் முதிரை மரக் குற்றிகளைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் வனவளத் துறையினரால் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. கைப்பற்றப்பட்ட முதிரை மரக் குற்றிகளின் பெறுமதி சுமார் 3 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணி வனவளத் திணைக்களத்தினரும், அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் முதிரை மரம் தறிக்கப்பட்டு வெளியிடத்துக்கு கொண்டு செல்வதற்காக உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்ட நிலையில் சிக்கியது.

சந்தேகநபர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-7)

# டெங்குத் தொற்று அபாயம் மழையால் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.26

தற்போது பெய்துவரும் மழையால் டெங்குத் தொற்று அதிகரிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலும், தென்மராட்சியிலும் டெங்குத் தொற்று அதிகமாக உள்ளது என்று சுகாதாரத் திணைக்கள டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அந்தப் பிரதேசங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது மழை ஆரம்பித்துள்ளதால் டெங்குத் தொற்று அபாயம் மேலும் அதிகரித்துள்ளது.

பிரதேச மக்கள் குடியிருப்புகள் மற்றும் காணிகளில் மழை நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பொருள்களை அப்புறப்படுத்தி காணிகளையும் குடியிருப்புப் பகுதிகளையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-9)

# ரூ. 500 போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன. 26
கப்ரக வாகனமொன்றில் 500 ரூபா போலி நாணயத்தாள்களை கொண்டுச் சென்ற பெண்ணொருவர் உட்பட மூவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்றுக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து, 400 போலி நாணயத்தாள்கள் மற்றும் போலி நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காகப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தல பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து, புத்தல ரஜமாவத்தையினூடாகச் சென்ற கப் ரக வாகனத்தை மறித்துச் சோதனையிட்ட பொலிஸார், போலி நாணயத்தாள்களைக் கைப்பற்றியதுடன் மேற்படி மூவரையும் கைது செய்தனர்.

இதன்போது, சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, போலி நாணயத்தாள்கள் அச்சடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கணினி மற்றும் பிரிண்டர்கள் உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். மேற்படி மூவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். (தி)

# 2,753 உளவியல் ஆசிரியர்களை உள்ளீர்ப்பதற்கு அரசு திட்டம்

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26
மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்குவதற்குப் புதிதாக 2 ஆயிரத்து 753 ஆசிரியர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

உளவியல் ஆலோசனைதொடர்பில்முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளும் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சர் தெரிவித்ததாவது:

தற்போதைய சமூகங்கள் மத்தியில் பாடசாலை மாணவர்கள் பல்வேறு உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக இவர்களது கல்வி மற்றும் சமூக செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு, பாடசாலைகளில் சிறந்த தொடர்பாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்காகப் புதிததாக 2 ஆயிரத்து 753 ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். இவ்வாறான பாடசாலைகளில் 3 ஆயிரத்து 768 காணப்படுகின்றன.

தற்போது ஆயிரத்து 39 உளவியல் ஆசிரியர் சேவையில் தற்காலிக பணியில் ஈடுபட்டனர். இவர்கள் உரிய பயிற்சிகளைப் பெற்ற பின்னர், உளவியல் ஆலோசகர்களாக நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டது- என்றார். (வ)

# காய்ச்சலுக்கு கைமருந்துகள் பாவிக்காதீர்கள்

## சிறப்பு வைத்திய நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 26
காய்ச்சல் குணங்குறிகள் உள்ளவர்கள் தற்காலிக நிவாரணமாக கைமருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்க்குமாறும், அது அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடும் எனவும், தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், சிறப்பு வைத்திய நிபுணருமான மருத்துவர் ஹசித திசேரா எச்சரிக்கை செய்துள்ளார்.

காய்ச்சல் குணமுள்ளவர்கள் உடனடியாக உரிய மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வது அவசியம் எனவும், கைமருந்துகளைப் பாவிப்பதன் மூலம் நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு நோயின் முதல் குணங்குறி சாதாரண காய்ச்சலாக இருக்கும் எனவும், எனவே, டெங்கு நோயாளிகள் எக்காரணத்தைக் கொண்டும், மருத்துவ சிகிச்சையைத் தாமதிக்கக்கூடாது எனவும், அவ்வாறு தாமதிப்பது நிச்சயமாக சாவுக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்த மருத்துவர் திசேரா, இவ்வருடத்தின் கடந்த 24 நாள்களில் மாத்திரம் நாடு முழுவதும் 3,616 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் சிகிச்சையைத் தாமதித்த 11 பேர் உயிரிழந்ததாகவும் சுட்டிக்காட்டினார். (த)

# ஓவிய சிற்பக் கண்காட்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு, ஜன. 26
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் 2017ஆம் ஆண்டுக்கான அரச ஓவிய சிற்பக் கண்காட்சி விழா மற்றும் அரச சிறுவர் ஓவிய விழாவுக்கான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையிலுள்ள ஓவியக் கலைஞர்களின் ஆக்கத்திறன்களையும், படைப்புக்களையும் மதிப்பிட்டு முதன்மை அரச ஓவிய விழாவில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை இதன்மூலம் வழங்குகின்றது என்று கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆக்கங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கடந்த 20ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.culturald ept.gov.lk என்ற இணையத் தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிமாக மாவட்டச் செயலகத்திலும், பிரதேச செயலகத்திலும் உள்ள கலாசார அதிகாரிகளிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆக்கத்துடன் கூடிய இறுவட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்செறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும்.

அரச சிறுவர் ஓவிய விழாவுக்கான சகல ஆக்கங்களும் தேசிய ஒருங்கிணைப்பாளர், அரச கட்புலக் கலை ஆலோசனைக் குழு, தேசிய கலாபவனம், ஆனந்தகுமார சுவாமிமாவத்தை, கொழும்பு -07 என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும். போட்டிப் பிரிவு இரண்டுக்குமான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆக்கங்கள் 2017 மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரைமட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் -என்றார். (வ)

# மட்டக்களப்பில் தொடரும் மழை

## குளங்களின் நீர்மட்டம் உயர்வு

களுவாஞ்சிக்குடி, ஜன.26
மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் குளங்கள் யாவும் நிரம்பி வழிகின்றன.

நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 23 அடியாகவும், தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் 11 அடிகளாகவும் உயர்ந்துள்ளது. உறுகாமம் குளத்தில் 24 அடியும், வாகனேரிக்குளத்தில 18 அடியும், வடமுனைக் குளத்தில் 8 அடியும், கித்துள்வெவக் குளத்தில் 6 அடியாகவும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. வெலிக்காக் கண்டிக்குளத்தில் 15 அடி நிரம்பியுள்ளதால் மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது. உறுகாமம் குளத்தில் 16 அடி நீர் நிரம்பியுள்ளதால்; 2 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. கட்டுமுறிவுக் குளமும் 12 அடி நிரம்பியதால் மேலதிக நீர் வெளியேறுகின்றது.

இதேவேளை- மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை 8.30மணியுடன்கூடிந்த24மணித்தியாலங்களில் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்டவானிலைஅவதானநிலையத்தின் பொறுப்பதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்தார்.

அந்த வகையில் மட்டக்களப்பு நகரில் 91.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மைலம்பாவெளியில் 81.5, பாசிக்குடாவில் 94.5, உறுகாமத்தில் 96.5, உன்னிச்சையில் 73.0, வாகனேரியில் 145.3, தும்பங்கேணியில் 101.0, நவகரியில் 97.0, வாகரை கட்டுமுறிவுப் பகுதியில் 130.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பதிவாகியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-ய)

# சோபித தேரரின் வாகனத்தை தேடிப் பிடிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜன. 26
கோட்டை, நாகவிகாரையின் முன்னாள் விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வாகனம் காணாமற் போனமை தொடர்பில் விசாரணைகளை நடத்தி, அந்த வாகனத்தைக் கண்டுபிடிக்குமாறு நுகேகொடை பிரதான நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிவானுமான கனிஷ்க விஜேரத்ன மிரிஹான பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சோபித தேரர் பயன்படுத்திய சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான அதிசொகுசு வாகனம் கடந்த வியாழக்கிழமை முதல் காணாமற்போயிருப்பதாக நாகவிகாரையின் தற்போதைய விகாராதிபதி உடுகலகந்தே ஆரியரத்ன தேரர், மிரிஹான பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை நடத்தி, அந்த வாகனத்தைக் கண்டுபிடித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (தி)

# பேருந்துகளில் ஏறிப்பிச்சை எடுப்போருக்கும் தண்டம்

## தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் அமைச்சருக்கு அழுத்தம்

கொழும்பு, ஜன. 26
பயணிகளுக்குத் தொந்தரவு செய்யும் வகையில் பஸ்களில் பிச்சை எடுப்பவர்களுக்கும், வியாபாரம் செய்பவர்களுக்கும் குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படவேண்டுமென தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன போக்குவரத்து அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கமைய 1951ஆம் ஆண்டின் மோட்டார் போக்குவரத்துச் சட்டவரைவு திருத்தப்படவேண்டுமெனவும், கிட்டத்தட்ட 66 வருடங்கள் பழைமையான இந்தச் சட்டம் கட்டாயமாக மீளாய்வு செய்யப்படவேண்டுமெனவும் அவர் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பேருந்துகளில் பிச்சை எடுப்பவர்களாலும், வியாபாரம் செய்பவர்களாலும் பயணிகள் பல்வேறு தொந்தரவுகளுக்கும், இடையூறுகளுக்கும் முகங்கொடுப்பதால் அவர்களைக் கட்டுப்படுத்தக் குறைந்தபட்ச அபராதமாக ஐயாயிரம் ரூபா விதிக்கப்படவேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். (தி)

# டிரான்ஸ் பசுபிக் கூட்டு ஒப்பந்தம் நீக்கம்

## உலக பொருளாதார சமநிலையில் தளம்பல் ஏற்படுமென பொருளாதார அமைப்புகள் கருத்துரைப்பு



வணிகம்

ஆசிய பசுபிக் நாடுகளுடனான மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தமான டிரான்ஸ் பசுபிக் கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளது.
இதன்படி கடந்த 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய அதிபராகப் பதவியேற்றுக்கொண்ட அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 12 நாடுகளோடு அமெரிக்கா செய்து கொண்டுள்ள டிரான்ஸ் பசுபிக் கூட்டு ஒப்பந்தத்தை (Trans pacific partnership deal) இரத்து செய்யும் கோப்பில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜப்பான், மலேசியா, வியட்நாம், சிங்கப்பூர், சிலி, புருனே, நியூசிலாந்து, கனடா, மெக்ஸிக்கோ, பெரு உள்ளடங்கலான 12 நாடுகள் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையில் உள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி நாடுகளுக்கிடையேயான கூட்டு ஒப்பந்த இரத்து நடவடிக்கையானது உலக பொருளாதார சமநிலையில் தளம்பல் நிலமைகளை ஏற்படுத்துமென்பதான கருத்துரைப்புகள் பொருளாதார அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
குறிப்பாக உலகளாவிய ரீதியிலே பொதுமைப்படுத்தப்பட வேண்டிய திரவத் தன்மை வாய்ந்த சொத்துக்களின் அதிக தொகை மதிப்பீடுகள் கோடீஸ்வரர்களின் கைகளில் மொத்தமாகத் திரட்சியடைந்துள்ள செயல்நிலைகளும் தற்போதைய டிரான்ஸ் பசுபிக் கூட்டு ஒப்பந்தத்தின் மீதான இரத்து நடவடிக்கைகளும் உலக பொருளாதாரத்தின் சமநிலையில் தளம்பல் நிலமைகளை இன்னமும் அதிகப்படுத்தும் என்பதான தகவல்களை உலக பொருளாதார அமைப்புகள் வெளிப்படுத்தியுள்ளதுடன் அது குறித்தான தங்களது அச்சத்தையும் தெரிவித்துள்ளன.
மேலும் உலகின் பெரும்பாலான நிறுவனங்கள் இலாப நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. தங்களது முதலீட்டாளர்களுக்கு அதிக இலாபம் கிடைக்க வேண்டும் என்பதான நோக்கோடு செயற்படுகின்றன என்பதான தகவலை ஆக்ஸ்போம் நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

"உலகின் பொருளாதார வளர்ச்சியின் பயன் என்பது சமூகத்தில் இருக்கின்ற குறித்த ஒரு பகுதியினருக்கு மட்டுமே சென்றடைகிறது. ஏழைகளின் வளர்ச்சியில் இந்த மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி எதனையும் ஏற்படுத்தவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது."

"அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வருமானமான ஈட்டமும் பொருளாதார வளர்ச்சிப்போக்கும் மந்தகதியிலேயே இருந்துவருகிறது. கடந்த இரு தசாப்த காலங்களில் 10 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது"





## சந்திரனில் பெயர்ப் பதிவு

அறிவியல்

இலங்கை ரூபா மதிப்பீட்டில் சுமார் ஆயிரம் ரூபாவைச் செலுத்துவதன் மூலம் ஒரு சிறு அலுமினியத் துண்டில் பெயரை மிக நுண்ணிய அளவில் செதுக்கி அதனை நிலவின் மேற்பரப்பிலேயே விட்டுவருவதற்கான விளம்பரங்களை பி.எஸ்.எல்.வி நிறுவனம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
எதிர்வருகின்ற 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி பி.எஸ்.எல்.வி ரொக்கெட் உதவியுடன் சந்திரனுக்கு விண்கலம் ஒன்றை அனுப்புவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வரும் நிலையிலே அதற்குத் தேவையான பணத்தை மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேற்படி வித்தியாசமான வாய்ப்பை பி.எஸ்.எல்.வி நிறுவனம் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.
இதன்படி பி.எஸ்.எல்.வி நிறுவனம் மேற்கொண்டுள்ள விளம்பரத்தில் எதிர்காலத்தில் உங்கள் சந்ததியினர் சந்திரனுக்கு சுற்றுலாச் செல்லும்போது தங்களது மூதாதையராக விளங்கும் உங்கள் பெயர் நிலவில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படலாம் என்று தெரிவித்துள்ளது.
மேலும் பத்தாயிரம் பேர் வரையானோர் தங்களது பெயரை இதுவரை பதிவு செய்திருப்பதாகவும் சந்திரனுக்கு செல்ல இயலாத பட்சத்தில் தங்களது பெயரையாவது சந்திரனில் பதித்து விட வேண்டும் என்பதான ஆர்வத்தில் பலர் முன்வந்து கட்டணங்களை செலுத்தி வருவதாகவும் பி.எஸ்.எல்.வி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# நிர்மாணம் மற்றும் கட்டட தொழிற்துறை சார்ந்த கண்காட்சி நிகழ்வு கொழும்பில்

## பசுமையான இலங்கையை நோக்கி நடைபோடுவதற்காக இடம்பெறவுள்ளது

நிர்மாணம் மற்றும் கட்டட தொழிற்துறை சார்ந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதான கண்காட்சி நிகழ்வுகள் பசுமையான இலங்கையை நோக்கி நடைபோடுதல் என்ற தொனிப்பொருளின் கீழாக எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வின் போது கட்டடம் மற்றும் நிர்மாணத் தொழிற்துறை தொடர்பான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வெளிக்காண்பிக்கவுள்ளதாகவும் பங்குபற்றுநர்கள், தொழிற்துறை சார்ந்தோர் மற்றும் முக்கியமான சேவை வழங்குநர்களுடன் நல்லிணக்கமான இடைத்தொடர்புறலை ஏற்படுத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து கருத்துரைத்துள்ள இலங்கை நிர்மாணிப்பாளர்கள் சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரான கலாநிதி ரொஹான் கருணாரட்ன, "தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாகவும் இடம்பெறவுள்ள நிர்மாணக் கண்காட்சி 2017 நிகழ்வானது தொழிற்துறையின் மிகச் சிறந்த அம்சங்களைக் காண்பிக்கவுள்ளது. பசுமையான இலங்கையை நோக்கி நடைபோடுதல் என்பதான எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தவுள்ளது. கடினமான ஒரு காலகட்டத்தினுள் பயணித்த நிர்மாணத் தொழிற்துறை தற்போது சற்று தலைநிமிர ஆரம்பித்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது சீனா, சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிர்மாணத் தொழிற்துறை வல்லுநர்கள் தமது அதிநவீன போக்குகள் மற்றும் தொழில் நுட்பங்களைக் காட்சிப்படுத்தவுள்ளனர். புதிய வாடிக்கையாளர்களைச் சந்தித்து, அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகவும் இக்கண்காட்சி அமையவுள்ளது.
மேலும் நிர்மாணத்துறை வழங்குநர்கள், நிர்மாண உபகரணங்கள், நிர்மாண இயந்திரங்கள், நிர்மாண தொழில்நுட்பம், நிர்மாண மூலப்பொருள்கள், நிர்மாண சேவை தொடர்பிலான அம்சங்கள் இக்கண்காட்சி நிகழ்வில் இடம்பெறவுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.




## சிறந்த எஸ்.எம்.இ. வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு

இலங்கையில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த எஸ்.எம்.இ. வங்கியாக கொமர்ஷல் வங்கி பிரிட்டனின் இன்டநஷனல் பினான்ஸ் மகஸின் (IFM) சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாடிக்கையாளர்களுக்காக குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தி அவர்களுக்கான கண்டுபிடிப்புக்கள் மற்றும் செயற்பாடுகளில் அதி உயர் தரங்களை அடைந்தமைக்காக இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
உள்நாட்டு நிதி தொழிற்துறையில் உயர் மட்டப் பங்களிப்புக்காகவும் கிடைத்துள்ள அங்கீகாரமாகவும் இந்த விருது கருதப்படுகின்றது. இன்டநஷனல் பினான்ஸ் மகஸின் (IFM) சஞ்சிகையின் நிதி விருதுக்கான வகைப்படுத்தலில் இந்த விருதானது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது

# கம்பளாவுக்குத் தடையை நீக்க கர்நாடகா அரசு பரிசீலிக்கிறது

தமிழகத்தில் சட்டப்படி ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதைப்போல கர்நாடகாவில் கம்பளா (சேற்றில் எருமையை விரட்டி செல்வது) விளையாட்டை நடத்த அனுமதி வேண்டும் என பாஜக., ம.ஜ.க. ஆகியகட்சிகள் போர்க் கொடி தூக்கியுள்ள நிலையில் தடையை நீக்க பரிசீலித்து வரப்படுகிறது என்று அறிவித்தார் கர்நாடகா முதல்வர் சித்தராமையா.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டு நடத்தப்படுவதைப்போல கர்நாடக மாநிலம் மங்களூருவில் கம்பளாவிளையாட்டுகடந்த200ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்படுகிறது. கடந்தசிலஆண்டுகளுக்குமுன்பு விலங்கு நல அமைப்பினர் இதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில்முறையிட்டபோது, கம்பளாவிளையாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஒரு வாரத்துக்கும் மேலாக இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றனர். இதனால் ஜல்லிக்கட்டு மீதான தடை நீங்கியது. இதேபோல் கம்பளா விளையாட்டுக்கும் தடை நீங்க வேண்டும் என அந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்டங்களுடன் பரிசீலிக்கப்படுகிறது என்று சித்தராமையா மேலும் தெரிவித்தார்.(ம-எ)



# தென்சீனக் கடலில் நிலைப்பாடு மாறாது

## சீனாவும் விடாப்பிடி

பீஜிங், ஜன. 26

தென்சீனக் கடலில் சீனா தனது இறையாண்மையை நிலைநாட்டியே தீரும் எனத் தெரிவித்தார் அந்த நாட்டின் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹூவா சுன்ஜிங்.

உலக அரசியலைத் தீர்மானிக்கும் விவகாரங்களில் ஒன்றாக தென்சீனக் கடல் பகுதி உள்ளது. சீனா அதற்கு சொந்தம் கொண்டாடி வருகிறது. பிலிப்பைன்ஸ், தைவான், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளும் தென்சீனக் கடல்பரப்புக்கு சொந்தம் கொண்டாடி வருகின்றன. அமெரிக்கா, குறித்த பகுதி சீனாவுக்கு உரித்தானது அல்ல என்பதில் உறுதியாக உள்ளது.

பன்னாட்டு பாவனைக்கு உரிய பகுதி அது என்று குறிப்பிடுகிறது. இதனால் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வார்த்தை மோதல்கள் காலாகாலமாக இடம்பெறுகின்றன.

சீனா, தென்சீனக் கடல் பரப்பில் போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டது. ஆய்வு மையம் ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளது. இதற்கு அமெரிக்காவின் தரப்பிலும், தொடர்புடைய ஏனைய நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

தென்சீனக்கடல்என்னைப்பொறுத்தவரை பன்னாட்டு செயற்பாடுகளுக்கு உரியது என்றே நான் நினைக்கிறேன். அதனை சீனா சொந்தம் கொண்டாட முடியாது. அமெரிக்கா, தொடர்ந்து தென் சீனக்கடல் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் பைஸர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கே சீனாவின் தரப்பில் தற்போது பதிலடி கொடுக்கப்பட்டது. தென்சீனக் கடலில் சீனா தனது இறையாண்மையை நிலைநாட்டியே தீரும். தங்களது உரிமைகளையும், நலன்களையும் உறுதி செய்யும். இதற்காக எந்த சக்தியையும் எதிர்கொள்ளத் தயார் என்று சுன்ஜிங் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவான டொனால்ட் ட்ரம்ப் அண்மையில், தைவான் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதற்கும் சீனா தனது கண்டனத்தைத் தெரிவித்தது. ஏனெனில், தைவான் ஒருங்கிணைந்த சீனாவுக்கு உட்படுகிறது என்பதே சீனாவின் அடிப்படை வாதம். (ம-எ)



# அமெரிக்காவின் நண்பன் இந்தியா

## என்றார் ட்ரம்ப்

உலகளவில் அமெரிக்காவின் உண்மையான நண்பன் இந்தியா என ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், இந்தியப் பிரதமர் மோடியும் நேற்றுமுன்தினம் இரவு, தொலைபேசியில் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே இந்தக் கருத்து பரிமாறப்பட்டது.

கலந்துரையாடலில் இரு நாட்டு தலைவர்களும், தத்தமது நாடுகளுக்கு வருமாறு மாறிமாறி அழைப்பு விடுத்தனர். இரு நாடுகளினதும் பாதுகாப்புத் தொடர்பாகவும், பொருளாதார, வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்களும் இந்திய ஊடகங்களும் குறிப்பிட்டன. (ம-எ)



# அலெப்போவின் குரலிடமிருந்து ட்ரம்புக்கு உருக்கமான கடிதம்

அலெப்போ, ஜன. 26

அலெப்போவின் குரல் என்று வர்ணிக்கப்பட்டு அந்த நகரைச் சேர்ந்த சிறுமியான பானா அலாபத், அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப்புக்கு சிரதிய விவகாரம் தொடர்பில உருக்கமான கடிதமொன்றை எழுதியுள்ளார்.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ அரசுக்கு எதிரான கிளர்க் குழுவின் பிடியில் இருந்தது. நகரை மிட்கும் போரில் ரஷ்யாவின் உதவியுடன் களமிறங்கியது சிரியா. கொடூரமான தாக்குதல்கள்மூலம்அலெப்போ மீட்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். மனித உரிமை மீறல்கள் அரங்கேறின. அலெப்போவில் நடப்பவற்றை தனது ருவிற்றரில் பதிவிட்டு உலக மக்களிடையே பிரபலமானவர் தான் பானா அலாபத் என்ற 7 வயதுச் சிறுமி. தற்போது அவர் தன் குடும்பத்துடன் துருக்கியில் உள்ளார். இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அலாபத்தின் கடிதத்தில், அன்புள்ள ட்ரம்ப்புக்கு, எனது பெயர் பானா அலாபத். சிரியாவின் அலெப்போவை சேர்ந்த 7 வயதுச் சிறுமி. நான் பிறந்ததில் இருந்து சிரியாவில் வாழ்ந்தேன். அங்கு நடைபெறும் போரினால் கடந்த ஆண்டு டிசெம்பரில் அலெப்போவில் இருந்து வெளியேறி துருக்கியில் குடும்பத்துடன் தங்கியிருக்கிறேன். தற்போது துருக்கியில் அமைதியாக வாழ்கிறேன். அலெப்போவில் பள்ளியில் படித்தேன். குண்டு வீச்சில் அது அழிந்து விட்டது. எனது பல நண்பர்கள் சாவடைந்து விட்டனர். அவர்களை நினைத்தால் வருத்தமாக உள்ளது. ஏனெனில் அவர்களுடன் நான் விளையாடி மகிழ்ந்துள்ளேன். தற்போது என்னால் அலெப்போவில் விளையாட முடியாது. அந்த நகரம் அழிக்கப்பட்டு விட்டது. சிரியாவில் லட்சக்கணக்கான குழந்தைகள் என்னைப் போன்று மகிழ்ச்சியாக இல்லை. நாட்டின் பல பகுதிகளில் கஷ்டப்படுகின்றனர். நீங்கள் அமெரிக்காவின் அதிபராக இருக்கிறீர் கள். எனவே



உங்களால் சிரியா மக்களையும், குழந்தைகளையும் காப்பாற்ற முடியும்.

சிரியாக் குழந்தைகளுக்காக ஏதாவதுசெய்யுங்கள். ஏனெனில் அவர்களும் உங்கள் குழந்தைகளை போன்றவர்கள்தான். உங்களைப்போன்றுஅவர்களும் அமைதியை விரும்புகின்றனர். சிரியக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்வேன் என எனக்கு நீங்கள் உறுதி அளிப் பீர்களா? நான் உங்களின் புதிய நண்பராகி இருக்கிறேன். ஆகவே சிரியக் குழந்தைகளுக்கு உதவுவீர்கள் என எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு ஊடகங்கள் இந்தக் கடிதத்தை வெளியிட்டன. சமூக வலைத்தளங்களிலும் விரைவாகப் பரவி வருகிறது.

துருக்கி ஜனாதிபதி எர்டகன், பானா அலாபத்தை அண்மையில் சத்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# மரண அறிவித்தல்



## E.S.பே ரம்பலம் கணேசலிங்கம்

(உரிமையாளர்- E.S.P & Company, யாழ்ப்பாணம், E.S.P & Company, கொழும்பு)
(அகில இலங்கை சமாதான நீதிவான்,
வணிக மாமணி, இறைபணி செம்மல், சிவதொண்டன்)

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட E.S. பேரம்பலம் கணேசலிங்கம் கடந்த (23.01.2017) திங்கட்கிழமை இரவு இந்தியாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான E.S. பேரம்பலம் (தொழிலதிபர், E.S.P.& Company)- மாணிக்கம் தம்பதியரின் அருமைப் புதல்வனும் வேலுப்பிள்ளை கதிரவேலு - காலஞ்சென்ற கார்த்திகேயனி தம்பதியரின் அன்பு மருமகனும், சுமதி கணேசலிங்கத்தின் பாசமிகு கணவரும், அபிராமி, செந்தூரன், வைஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் மற்றும் சதாசிவம், சோமசுந்தரம், தங்கமலர், சண்முகராஜா, சுதாகரன், சுபாஸ்கரன், சுபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைலா, அறிவழகன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், கஜேந்திரன், கஜமுகன், கமலநேசன், கமலநாதன், கமலரூபன் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், சண்முகநாதன், காலஞ்சென்ற சண்முகராசு மற்றும் பவானி சண்முகரட்ணம் (AUS), சிவராசன், சிவகுமாரி, சிவரூபன், சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், ராஜசுலோசினி, கலைமகள், வாசுகி, அச்சுதன், உமாசுதன், சங்கவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆகாஷ், ஆர்த்தி ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (28.01.2017) சனிக்கிழமை வரை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் பொரளை (கனத்தை) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.11, பெதெஸ்டா வீதி,**
**கொழும்பு - 05.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 110 6323/ 077 675 7178**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கண்துடைப்புத்தானா?

காணாமற்போனோர் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் ஆற்றிய உரை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. காணாமற்போனவர்களைப் பற்றிய தகவல்கள் எவற்றையும் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர் என்று அவர் கூறியுள்ளார்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் கால வரையறையற்ற உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில், தலைமை அமைச்சரின் கருத்து வந்திருக்கிறது. காணாமற்போன தமது உறவுகள் குறித்த திட்டவட்டமான ஒரு பதிலை அரசு தரவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கையில், அவர்களின் தலையில் இடி இறங்கியதைப் போன்று தலைமை அமைச்சரின் கூற்று வெளியாகி இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது, காணாமற்போனவர்களில் பலர் சட்டத்துக்குப் புறம்பாக வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும், அவர்களில் சிலர் இறந்துபோயிருக்கலாம் என்பதைத் தான் நம்புகிறார் என்றும் கூறியிருக்கிறார் ரணில்.

காணாமற்போனவர்கள் குறித்து தகவல்களைத் திரட்ட முடியவில்லை என்றால், காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகம் எதற்காக அரசால் அமைக்கப்படப்போகின்றது என்ற கேள்வி எழுகிறது.

இந்த அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதை ஓர் அமைச்சின் கீழ்ப் பாரப்படுத்தி அரச தலைவர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவேண்டும். அதில் தாமதம் ஏற்படுகின்றது என்பது தொடர்பில் ஏற்கனவே பொது அமைப்புகள் கடும் சீற்றமுற்றிருக்கின்றன. அந்த அலுவலகத்தை விரைவில் அமைக்கும்படி அவை வலியுறுத்தி வருகின்றன.


அந்த அலுவலகத்தை அமைப்பது தொடர்பில் படைத் தரப்பினர் அரச தலைவரிடம் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன. போர் நடந்தபோது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களில் பலரின் வழக்குகளில் படையினர் மீதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைக்கப்பட்டால் அதன் மூலம் படையினர் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அரச தலைவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாலேயே அவர் அந்த அலுவலகம் அமைக்கப்படுவதைத் தாமதிக்கிறார் என்கிற ஐயமும் பொது அமைப்புகள் மத்தியில் நிறையவே உண்டு.

இத்தகைய பின்னணியில் காணாமற்போனவர்களைப் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை என்று தலைமை அமைச்சர் திடீரென நாடாளுமன்றத்தில் கூறுவது பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது. காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை என்று கூறுவதற்கு முன்னர் பொலிஸார் அது தொடர்பில் நடத்திய விசாரணைகள் என்ன என்கிற விவரத்தைத் தலைமை அமைச்சர் வெளியிடவில்லை. காணாமற்போனவர்களில் எத்தனை பேருடைய வழக்குகள் அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன என்கிற விவரமும் தெரிவிக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை எதிர்கொள்ளவுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு மட்டும்தான் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டதா என்கிற நியாயமான அச்சமும் எழுகிறது. தலைமை அமைச்சர் பொறுப்பற்ற தனமாக, விடயத்தைப் பூசி மெழுகும் விதத்தில் தெரிவித்திருக்கும் கருத்து அந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

அரசின் இத்தகைய செயல் கண்டிக்கத்தக்கது. இவ்வாறு ஏமாற்றும் நாடகத்தை விட்டுவிட்டு காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை உடனடியாக அமைத்து, அதன் மூலம் உண்மையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய குற்றவாளிகளைத் தண்டிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்காமல் விடப்படும் போக்கு இலங்கையில் அதிகரித்ததன் விளைவும் 2015 ஆட்சி மாற்றத்துக்கான காரணிகளில் ஒன்று என்பதைத் தற்போதைய ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் இந்த விடயத்தில் – அரசியல் வேறுபாடுகளை ஓரமாக வைத்துவிட்டு – ஓரணியாக நின்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.



# தமிழ்-முஸ்லிம் உறவைக் கெடுக்காதீர்!

## தமிழ் மக்கள் பேரவையிடம் தாழ்மையான வேண்டுகோள்

எம்.ஐ.முபாறக்

தேசியப் பிரச்சினைக்கு குறிப்பாக, வடக்கு-கிழக்கு தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு உடனடியாக வழங்கப்படுமா அல்லது தொடர்ந்தும் காலம் இழுத்தடிக்கப்படுமா என்ற கேள்வியைச் சுமந்தவாறே இன்றைய நாள்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

புதிய அரசமைப்பு இந்த வருடமே கொண்டுவரப்படும் என்றும், இல்லை அதற்கான சந்தர்ப்பம் அடுத்த ஆட்சியில்தான் கிடைக்கும் என்றும் இரு வெவ்வேறு கருத்துக்கள் அரசுக்குள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அரசியல் தீர்வைப் பெறுவதற்கான முயற்சியைக் கடுமையாக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழ்ச் சமூகம் இப்போது தள்ளப்பட்டுள்ளது.

> “புதிய அரசமைப்பு இந்த வருடமே கொண்டு வரப்படும் என்றும், இல்லை அதற்கான சந்தர்ப்பம் அடுத்த ஆட்சியில்தான் கிடைக் கும் என்றும் இரு வெவ்வேறு கருத்துக்கள் அரசுக்குள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அரசியல் தீர்வைப் பெறுவதற்கான முயற்சியைக் கடுமையாக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழ் சமூகம் இப்போது தள்ளப்பட்டுள்ளது.


இணக்கப்பாட்டு அரசியல்தான் தமிழருக்கு விடிவைக் கொண்டு வரும் என்ற தமிழர்களின் நிலைப்பாடு பிழைத்துவிடுமோ என்று தமிழர்கள் இன்று எண்ணத் தொடங்கியுள்ளனர். இருந்தாலும், முன்வைத்த காலைப் பின்வைக்காமல், தொடர்ந்து பயணிக்க வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பில் அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், தமிழரின் நிலைப்பாட்டை சிறிதளவேனும் விட்டுக்கொடுப்பதில்லை என்றும், இராஜதந்திர உத்திகளைப் பயன்படுத்தி, தாம் விரும்பும் தீர்வை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக இருப்பதால்தான், இணக்கப்பாட்டு அரசியலை அதற்கான ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றது.

கூட்டமைப்பின் இந்த இலக்கை அடைவதற்குத் தேவையாக இருப்பது தமிழ் சமூகம்-தமிழ் அரசியல் கட்சிகள்-தமிழ்ப் புத்திஜீவிகள் ஒன்றிணைந்து நிற்பதுதான். ஒரே நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், வெவ்வேறு திசைகளில் பயணித்தால் உரிய இலக்கை அடைவது சிரமமே.

இன்று தமிழ்த் தரப்பு அரசியல் என்பது "ஒரே இலக்கு; வெவ்வேறு திசைகளில் பயணம்" என்ற வடிவத்தில் தான் அமைந்துள்ளது. வடக்கு-கிழக்கின் ஒட்டுமொத்தத் தமிழர்களும் கூட்டமைப்பைத் தலைமைத்துவமாகக் கொண்டு ஒரே இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நிலையில், கூட்டமைப்பின் அந்தப் பயணத்துக்கு இடையூறு விளைவிக்கும்வகையில் தமிழ் மக்கள் பேரவை பயணித்துக்கொண்டு இருக்கின்றது. அதாவது ஒரே இலக்கு; வெவ்வேறு திசைகளில்

"இன்று தமிழ்த் தரப்பு அரசியல் என்பது "ஒரே இலக்கு வெவ்வேறு திசைகளில் பயணம்" என்ற வடிவில்தான் அமைந்துள்ளது. வடக்கு–கிழக்கின் ஒட்டுமொத்தத் தமிழர்களும் கூட்டமைப்பைத் தலைமைத்துவமாகக் கொண்டு ஒரே இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நிலையில், கூட்டமைப்பின் அந்தப் பயணத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தமிழ் மக்கள் பேரவை பயணித்துக்கொண்டு இருக்கின்றது.அதாவது ஒரே இலக்கு; வெவ்வேறு திசைகளில் பயணம்.



பயணம்.

அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் கூட்டமைப்பை விடவும் நாம் வேகமாகப் பயணித்துக்கொண்டு இருக்கின்றோம்; சரியான பாதையில் பயணித்துக் கொண்டு இருக்கின்றோம்; கூட்டமைப்பின் இணக்கப்பாட்டு அரசியல் பிழையானது என்று காட்டுவதற்கு தமிழ் மக்கள் பேரவை முற்படுவது தெளிவாகத் தோன்றுகிறது.

அரசியலில் மக்களால் ஓரங்கட்டப்பட்டவர்களின் கூடாரமாகத் தமிழ் மக்கள் பேரவை இருப்பதால், அவர்களின் நோக்கம் என்னவென்று தெரிகின்றது. இழந்த செல்வாக்கை மீளக் கட்டியெழுப்புவதற்காக தமிழர் பிரச்சினையில் கூட்டமைப்பை விடவும் தாம் அதிக அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றோம் என்று காட்டுவதற்கு பேரவை முற்படுவதை அவதானிக்கலாம்.

**'எழுக தமிழ்'**
**நிகழ்வால்**
**உருவான சர்ச்சை**

இந்தப் பேரவை வடக்கில் நடத்திய அதன் முதலாவது 'எழுக தமிழ்' நிகழ்வு, தெற்கில் எவ்வாறான அதிர்வலைகளை–விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை நாம் அறிவோம். அப்படியானதொரு விளைவை, பேரவை மட்டக்களப்பில் நடத்தப் போகின்ற இரண்டாவது 'எழுக தமிழ்' நிகழ்வும் ஏற்படுத்தப் போவது நிச்சயம்.

அரசியல் தீர்வைப் பெறுவதற்கு கூட்டமைப்பு இராஜதந்திரரீதியில் காய் நகர்த்திக்கொண்டு இருக்கும் நிலையில்,பேரவை நடத்திய 'எழுக தமிழ்'நிகழ்வு பெரும் இனவாதத்தைக் கிளப்பி இருந்தது.தமிழர்கள் தனி நாட்டுக்கான அடித்தளத்தை இடுகின்றார்கள் என்றொரு கருத்தை சிங்களவர்கள் மத்தியில் பரப்புவதற்கு அந்த நிகழ்வு வழியேற்படுத்திக் கொடுத்திருந்தது.

இப்படியான ஒரு கருத்தை இந்த எழுக 'தமிழ் நிகழ்வு' மீண்டும் பரப்பப் போகின்றமை உறுதி.இதைவிடவும் ஒரு சிக்கலான விடயம் என்னவென்றால், மட்டக்களப்பில் இடம்பெறப் போகின்ற இந்த 'எழுக தமிழ்' நிகழ்வுக்குள் கிழக்கு முஸ்லிம்களையும் இழுத்துவிடுவதற்கு முயற்சிப்பது தான்.

இது உண்மையில் தமிழ்–முஸ்லிம் மக்களின் உறவில் விரிசலை ஏற்படுத்தும் ஒரு சிக்கலான விடயம் மாத்திரமன்றி, தமிழர்களின் அரசியல் தீர்வு முயற்சியை முஸ்லிம்கள் குழப்புகிறார்கள் என்ற அவப்பெயரை உண்டுபண்ணும் செயலும்கூட.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் என்று தெரிந்தும்கூட,'எழுக தமிழ்'நிகழ்வில் கலந்துகொள்வதற்கு தமிழ் மக்கள் பேரவை முஸ்லிம்களுக்கு அழைப்புவிடுக்கின்றது. ஆனால், முஸ்லிம்கள் அந்த அழைப்பை ஏற்றுத் தேவையற்ற பிரச்சினைகளை உண்டுபண்ணுவதற்குத் தயாரில்லை.

இந்த விடயத்தில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம் விடுத்திருக்கும் அறிவிப்பு கவனிக்கத்தக்கதாகும். தமிழரின் அரசியல் இயக்கமாக கூட்டமைப்பு இருப்பதால், அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் பற்றிக்கூட கூட்டமைப்புடன்தான் பேச வேண்டும் என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது. பேரவையின் அழைப்பை நிராகரித்துள்ளது.

இதன்மூலம் அனைத்து முஸ்லிம்களும் விளங்கிக்கொள்ள வேண்டியது என்னவென்றால், கூட்டமைப்பு மாத்திரமே தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் இயக்கம்; இந்த இயக்கம் சாராத–இந்த இயக்கத்துக்கு எதிராகச் செயற்படுகின்ற அமைப்புகள் நடத்துகின்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு, தமிழர்களின் தீர்வு முயற்சியை முஸ்லிம்கள் குழப்புகின்றார்கள் என்ற கெட்ட பெயரை வாங்கிவிடக்கூடாது என்பதுதான்.

**கருத்து முரண்பாடுகளைக்**
**கூட்டமைப்பும்**
**முஸ்லிம் தரப்புகளும்**
**பேசித் தீர்க்க வேண்டும்**


கூட்டமைப்புக் கோரி நிற்கும் அரசியல் தீர்வில் முஸ்லிம்கள் உடன்படமறுக்கும்–அவர்களுக்கு ஆபத்தானது எனக் கருதும் பல விடயங்கள் உள்ளன. அவை தொடர்பில் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென்றால், கூட்டமைப்புடன்தான் முஸ்லிம்கள் பேச வேண்டும். தமிழ் மக்கள் பேரவை போன்ற, கூட்டமைப்புக்கு எதிரான அமைப்புகளுடன் பேச முடியாது; அவ்வாறு பேசி எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்குமாக இருந்தால், அவை கூட்டமைப்பின் ஊடாகச் செல்கின்ற கோரிக்கைகளாகத்தான் இருக்கும். தமிழ் மக்கள் பேரவையுடனோ அல்லது வேறு எந்த கட்சியுடனோ அரசு தொடர்பு வைத்திருக்கப் போவதில்லை.

பேரவையால் செய்ய முடியுமானதெல்லாம், இவ்வாறு கூட்டங்களை நடத்திப் பேசுவதுதான்.அவர்களின் நிலைப்பாடு ஒட்டுமொத்த தமிழர்களின் நிலைப்பாடாகப் பதியப்படமாட்டாது.ஆனால்,அரசியல் தீர்வு முயற்சியைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மகிந்த அணியினர் போன்றோரே, பேரவையின் கருத்துக்களைச் செவிமடுப்பர்.பேரினவாதிகளுக்குத் தீனி போடுவதற்கு பேரவையின் செயற்பாடுகள் தேவை. மொத்தத்தில் பேரினவாதிகள், பேரவையின் செயற்பாடுகளை மறைமுகமாக வரவேற்கின்றனர். அப்போதுதான் அவர்கள் வாழலாம்; தெற்கில் அரசியல் செய்யலாம்.

இப்படியானதொரு குழப்பமான சூழ்நிலையில், தமிழ் மக்களின் ஆதரவு இல்லாத ஓர் அமைப்புக்கு–தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஓர் இயக்கத்துக்கு எதிராகச் செயற்படுகின்ற ஓர் அமைப்பின் செயற்பாட்டுக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்குவது பொருத்தமானது அல்ல.

இந்த உண்மையை உணர்ந்ததால்தான், முஸ்லிம் மக்கள், பேரவையின் அழைப்புக் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. அத்தோடு, காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம், ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி இது தொடர்பில் கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு தெளிவையும் வழங்கியுள்ளது. ஆகவே, இவ்வாறான சிக்கலான விடயங்கள் தொடர்பில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ■



# வாசகர் திருமுகம்

## சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

யாழ். பிரதேசத்தில் பெருமளவிலான தேங்காய்கள் விற்பனைக்கு வரும் இடமாகிய கொடிகாமம் மத்திய சந்தையில் குறைந்த விலைக்கு தேங்காய்களை வாங்கி, அந்த இடத்திலேயே குறிப்பிட்டதொரு லாபம் வைத்து விற்பனை செய்யும் வியாபாரிகள் பலர் காணப்படுகிறார்கள். இவர்களால் தெங்கு உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் அதிக நட்டத்துக்குள்ளாகிறார்கள். இவர்களின் சுயலாபப் போக்கு நிறுத்தப்பட வேண்டுமானால், தேங்காய்களை பெரியது, நடுத்தரம், சிறியது எனத் தரம் பிரித்து வாங்குவதற்கும் விற்பதுக்குமான ஒழுங்குகளையும் மேற்கொள்ளலாம். விற்பனைக்கு வரும் தேங்காய்களின் தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மாதமும் வாங்கும் விலையையும், விற்கும் விலையையும், கூட்டிக் குறைக்கலாம். இதையெல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

*மக்கள் நலன் விரும்பி*
*யாழ்ப்பாணம்.*

## சிரமங்களைப் போக்கி உதவுவீர்களா?

போர் முடிவுக்கு வந்த பின்னரும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்படையினரது பல்வேறு அழுத்தங்களின் மத்தியில் பல்வகைச் சிரமங்களுடனேயே எமது வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தோம். ஆயினும் பருவகால மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள இன்றைய நிலையில், வழக்கம்போல் இந்திய மீன்பிடி றோலர்கள் எமது கடற்பகுதிக்குள் சட்டவிரோதமான வகையில் மீன்பிடியில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. மறுபுறத்தில் வெளி மாவட்ட மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டக் கடற்பகுதியில் உள்ள மீன் வளத்தை இலக்கு வைத்து எமது மாவட்ட கடற்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக எம்மால் முடிந்த அளவுக்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தரப்புக்களுடன் தொடர்புகொண்டு எமது பாதிப்பு நிலை குறித்து எடுத்து விளக்கியபோதிலும் எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கொலி போன்று பயனற்றுப் போயுள்ளன. எமது பாதிப்பு நிலை குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி எமது வாழ்வாதாரத் தொழிலை இடையூறுகள் எதுவுமின்றி நாம் முன்னெடுக்க உதவ வேண்டும் எனக் கோருகின்றோம்.

*பாதிப்புக்கு உள்ளாகும்*
*கடற்றொழிலாளர்கள்.*
*முல்லை. மாவட்டம்*

**தென் அமெரிக்காவின் 'ஆண்டிஸ்' மலைத் தொடர் மிக நீளமானது. இதன் நீளம் சுமார் 7,000 கி.மீ.**








**பார்பி**
**பொம்மையின் முழுப்பெயர்**
**பார்பி மில்லிசென்ட் ராபர்ட்ஸ் (Barbie Millicent Roberts)**

## சர்வதேச தினங்கள்

**ஏப்ரல்**

01 முட்டாள்கள் தினம்
02 சிறுவர் நூல் நாள்
04 நிலக்கண்ணி வெடி விழிப்புணர்வுதினம்
05 சமுத்திரதினம்
07 சுகாதார தினம்
08 உரோமர் கலாசாரதினம்
12 வான் பயண தினம், வீதியோர சிறுவர்களுக்கான தினம்
14 அமைதி தினம்
15 அரவாணிகள் தினம்&நூலகர்கள் தினம்
17 இரத்த உறையாமை தினம்.
18 மரபு தினம்
19 புகைப்பட தினம்
22 பூமி தினம்
23 புத்தக தினம் மற்றும் காப்புரிமை தினம்
25 இறைச்சல் விழிப்புணர்வு தினம்
26 அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு நாள்
30 குழந்தை தொழிலாளர்கள் தினம்

கைக் கடிகாரத்தின் பின்புறப் பகுதி, குரோமியம் மற்றும் பித்தளை போன்ற உலோகங்களால் தயாரிக்கப்பட்டிருக்கும், எமது உடல் வியர்வை காரணமாக அவை வேதி மாற்றம் அடைந்து பச்சை நிற ஆக்ஸைடுகளாக மாறுகின்றன. அதைக் 'களிம்பு ஏறுதல்' என்பார்கள். செப்புப் பாத்திரங்களிலும் சிலைகளிலும்கூட இந்த மாற்றம் ஏற்படுவதை நாம் பார்க்கலாம்



## வரலாற்றில் இன்றைய தினம்

1994 - கிழக்கு தேர்தலையொட்டி அங்கு பெருமளவு இராணுவம் நகர்வு; சோதனை நிலையங்களும் அதிகரிப்பு.

1995 - முழு அரசமைப்பும் சமஷ்டி முறைக்கு மாற்றக் கோருகின்றார் அன்ரன் பாலசிங்கம். "வொய்ஸ் ஒப் அமெரிக்காவுக்குப் பேட்டி.

2004 - எதிரும் புதிருமான கொள்கை கொண்ட கூட்டணி; இனப்பிரச்சினை தீர்வு காண்பது எவ்வாறு என பீரிஸ் கேள்வி

2006 - முஸ்லிம் சிங்களவர் மோதல்; தர்கா நகரில் பதற்றம், பலர் காயம், உடமைகள் சேதம்.

## தங்க இறகு

பண்ணைபுரம் என்ற ஊரில் விவசாயி ஒருவன் இருந்தான். அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அவனது வயலில் விளைச்சல் பெருகவே இல்லை. விவசாயி கணக்குப் பார்த்தால் 'உழவுக்குக் கூட மிஞ்சாது' என்ற பழமொழிப்படி பல ஆண்டுகளாகப் பாடுபட்டும் கூட அவன் வறுமையி லேயே வாடிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் வயலில் ஏர் உழுது விட்டு வரும் போது தகதகவென ஜொலித்த பறவை ஒன்று அங்கிருந்த மரத்தில் அமர்ந்திருந்தது. அதைப் பார்த்த விவசாயி, இந்தப் பறவை நம் வயலைக் காக்கும் தேவதையாக இருக்கக் கூடும். இத்தனை நாள் நாம் இதை வணங்காமல் போனதால்தான் நம்முடைய வயலில் விளைச்சல் பெருகவில்லை. இன்று முதல் இதை நாம் வணங்குவோம்' என்று தீர்மானித்தான்.

எனது வயலைக் காத்து வரும் தேவதையே! இவ்வளவுநாள்கள் உன்னைக் கவனிக்காமல் இருந்ததற்காக என்னை மன்னித்துவிடு. உனக்கு என் வீட்டில் இருந்து பழங்கள் எடுத்து வந்துள்ளேன். சாப்பிட்டு என்னை ஆசீர்வதிப்பாயாக," என்று கூறி பாத்திரத்தை வைத்து விட்டுச் சென்றான் விவசாயி. மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்றான் விவசாயி.

நாள்தோறும் மாலை வேளைகளில் விவசாயி பாத்திரத்தை வைத்துவிட்டு வருவான். மறுநாள் காலையில் ஒரு தங்க இறகு இருக்கும். இவ்விதம் மகிழ்ச்சியாகக் காலந்தள்ளிக் கொண்டிருந்த விவசாயி ஒருநாள் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. தனது மகனைக் கூப்பிட்டு அவனிடம் பறவைக்கு பழம் வைத்து விட்டு வருமாறு கூறினான். விவசாயி மகனும் தந்தை சொல்லியவாறே அன்று மாலை பழங்களை வைத்து விட்டுச் சென்றான்.




மறுநாள் காலையில் வந்து பார்க்கும் போது அந்தப் பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. அதைப் பார்த்த விவசாயியின் மகன். இந்தப் பறவையைப் பிடித்து தங்க இறகுகளை வேண்டிய மட்டும் பிய்த்துக் கொள்வோம். எப்படியும்பறவைக்கு தங்கஇறகுமுளைத்து விடும். மீண்டும் பிய்க்கலாம்,' என்று நினைத்து அவன் மறுநாள் ஒளிந்திருந்து பறவை பழம் சாப்பிடும் போது பிடித்துக் கொண்டான். அதன் இறகைப் பிய்க்க முயன்றபோது பறவை அவன் கண்களை குத்தி குருடாக்கி விட்டுச் சென்றது. விவசாயியின் மகன் பேராசையின் காரணமாக பார்வை யற்றவன் ஆனான். கிடைப்பதை கொண்டு திருப்தி அடையணும்.

*"அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான் செல்லூ"*

## அறிவோமா...




- எது மதிப்புக்கு மூலம்
எதையும் எவரிடமும் கேட்காமல் இருப்பது.
- எது துக்கம்
மனநிறைவு இல்லாமல் இருப் பது.
- எதை உயர்ந்த வாழ்வென்று சொல்வது
குற்றங்கள் புரியாமல் வாழ்வது.
- எவை தாமரையிலை மேல் தண்ணீரைப்போல நிலையில்லாதவை
இளமை, செல்வம், ஆயுள் போன்றவை
- யார் சந்திரனுடைய ஒளியைப் போல் பிறருக்கு இன்பம் தருவார்கள்
நல்லவர்கள்.
- எது சுகமானது
அனைத்தையும் தியாகம் செய்து விட்டு பற்றின்றி வாழ் வது.
- எது இன்பம் தருவது
நல்ல மனதுடையோர்களின் நட்பு.
- எது மரணத்துக்கு இணையானது
அசட்டுத்தனம்.
- எதை விலை மதிப்பற்றதெனச் சொல்லலாம்
காலமறிந்து செய்யும் உதவி.
- எது இறக்கும் வரை உறுத்தும்
ரகசியமாகச் செய்த பாவம்.
- யார் சாது
ஒழுக்கமான நடத்தை உள்ளவர்.

## நாளை தை-14

வெள்ளிக்கிழமை -27.01.2017
திதி: அமாவாசை முழுவதும்
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 10.55
ராகுகாலம்:11.06-12.36 வரை
சுபநேரம்:06.36-08.06 வரை
அமாவாசை விரதம்

| ஜனவரி | 2017 | | JANUARY | | |
|---|---|---|---|---|---|
| SUN | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED | 4 | 11 | 18 | 25 | |
| THU | 5 | 12 | 19 | 26 | |
| FRI | 6 | 13 | 20 | 27 | |
| SAT | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## தனுசு

எதிலும் நிதானமாகச் செயற்படுவதுடன் அடுத்தவரின் ஆலோசனையையும் கேட்கும் தனுசு ராசியினரே! இந்த காலகட்டத்தில் ராசிநாதனான குருவும் சப்தம தொழில் ஸ்தானாதிபதியுமான புதனும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். சனியின் சஞ்சாரம் மன சஞ்சலத்தை ஏற்படுத்தும். வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். ராசிக்கு இரண்டில் சூரியனின் சஞ்சாரம் இருப்பதால் திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும்.

தொழில் ஸ்தானத்தை குரு அலங்கரிக்க தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தனப் போக்கு காணப்படும். குடும்ப ஸ்தானத்தில் சூரியன் இருக்கிறார். குருவும் சனியும் பார்க்கிறார்கள். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களின் கோபத்தை தூண்டலாம். மிகவும் கவனமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நன்மை தரும். கணவன், மனைவிக்குள் திடீர் மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் நண்பர்களுடன் இருந்து வந்த பகை நீங்கும். கலைத்துறையினருக்கு உடன் பணிபுரிபவர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. எனவே அனுசரித்துச் செல்வது நல்லது. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையைத் தரும்.

பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வீண் அலைச்சல் ஏற்படலாம். ஆனாலும், சுக்கிரனின் சஞ்சாரத்தால் மனதில் இருந்த குழப்பம் நீங்கி நிம்மதி உண்டாகும். கடன் பிரச்சினை தீரும். அரசியல்துறையினரே, நீங்கள் அவசரப்படாமல் நிதானமாக எதையும் செய்தால் வெற்றி நிச்சயம். இந்த காலகட்டத்தில் எதிர்ப்புக்கள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். சூரியனின் சஞ்சாரத்தால் ஏற்கனவே செய்த ஒரு செயலை நினைத்து வருந்த நேரிடும். மாணவர்களுக்கு கல்வியில் காணப்பட்ட மெத்தனப் போக்கு நீங்கி சுறுசுறுப்பாக பாடங்களை படிப்பீர்கள். பிடிவாதத்தை விடுவது நன்மை தரும்.

**பரிகாரம்:** குருவுக்கு வியாழக்கிழமையில் நெய் தீபமேற்றி அர்ச்சனை செய்து வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். அறிவுத் திறன் கூடும்.

## மகரம்

சொல்லாற்றலும் செயலாற்றலும் பெற்ற மகர ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் யோகாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். பணவரத்து இருக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியிலுள்ள அஷ்டமாதிபதி சூரியனின் சஞ்சாரம் வீண் மனக் குழப்பங்களை ஏற்படுத்தினாலும், முடிவில் தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டியிருக்கும். தேவையான உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். வீண் கனவுகள் தோன்றும். திடீர் கோபம் தோன்றலாம். மிகவும் கவனமாக பேசுவது நன்மை தரும். தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்ப்பதால் தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில் முன்னேற்றம் தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விடயத்துக்காகக் கூட அலைய வேண்டி இருக்கும். குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் குடும்பத்தில் இருந்து வந்த தேவையற்ற குழப்பங்கள் சரியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்குள் கருத்து வேற்றுமை ஏற்படலாம். உங்கள் செயல்களை குடும்பத்தில் உள்ளவர்கள் குற்றம் சொல்லலாம். எனவே, வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமற் செல்வது நன்மை தரும்.

கலைத்துறையினரே, யோககாரகன் சுக்கிரன் ராசிநாதன் சனிக்கு கேந்திரம் பெறுவதால் எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் நன்மையும் உண்டாகும். சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். அரசியல்துறையினருக்கு மனம் வருந்தும் படியான சூழ்நிலை ஏற்படும். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக் கவலை உண்டாகும். மாணவர்கள் நிதானத்தைக் கடை பிடிப்பது வெற்றிக்கு உதவும். பாடங்களை கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் சனிபகவான், விநாயகரை வழிபடுவது எல்லா காரியங்களும் நன்றாக நடக்க உதவும். கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

## இஸ்லாமியத் தீவிரவாதம் மட்டில் ட்ரம்பின் முடிவு வரவேற்கத்தக்கது

இஸ்லாமியத் தீவிரவாதத்தை உலகில் இருந்து அகற்றுவேன் என்று ட்ரம்ப் தனது முடிவை மாற்றிக்கொண்டதை அடுத்து, இன்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன மத்திய தரைக்கடலின் தேசங்கள். இந்த வகையில் ட்ரம்பின் முடிவு வரவேற்கத்தக்கதே.

உலகின் தலையெழுத்தைத் தீர்மானிக்கப் போகும் சக்திகளில் ஒருவராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக கடந்த 20 ஆம் திகதி பதவியேற்றார்.

முன்னாள் ஜனாதிபதி ஒபாமா உலக அபிப்பிராயத்தை வென்றவராக இருந்தார். அவரிடம் இருந்து பல விடயங்களில் ட்ரம்ப் வேறுபட்டார். தேர்தல் பரப்புரைகளில், அமெரிக்காவின் பரம வைரியான ரஷ்யாவுடன் நல்லுறவு, அண்டை நாடான மெச்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்புவது, பசுபிக் ஒப்பந்தம் கைவிடல் மற்றும் அமெரிக்கப் படைகளை ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் திரும்பப் பெறுவது என்பன முக்கியம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

அமெரிக்கப் படைகளைத் திரும்பப்பெறுவேன் என்ற அறிவிப்பு உலகையே நடுங்கச் செய்தது எனலாம். ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. இந்த அமைப்பை உலகின் பொது எதிரியாகக் கொண்டு பல நாடுகளும் போர் புரிந்து வருகின்றன. குறிப்பாக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை அடியோடு இல்லாது செய்வதில் கடும் முனைப்புக் காட்டுகின்றன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும் முக்கிய வர்த்தக நகருமான மோசூல் ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே உள்ளது. அந்த நகரை மீட்க கடந்த ஒக்ரோபர் மாதம் அமெரிக்காவின் துணையுடன் களமிறங்கி முன்னேறி வருகிறது ஈராக் அரச படை. இந்த நிலையில் உலகில் உள்ள அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்று அமெரிக்காவின் எல்லைகளைக் காப்பதிலேயே கவனம் செலுத்துவேன் என்ற ட்ரம்ப்பின் அறிவிப்பு பல அதிர்வுவலைகளைத் தோற்றுவித்தது.

ஆனால், தனது பதறியேற்பு நிகழ்வில் இஸ்லாமியத் தீவிரவாதத்தை உலகில் இருந்து அடியோடு அகற்றுவேன் என்று ட்ரம்ப் தெரிவித்தார். அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டார். ட்ரம்பின் இந்த அறிவிப்பை அடுத்து அங்கு குவிந்திருந்த லட்சக்கணக்கான மக்களின் கரகோசங்கள் வானைப் பிளந்தன. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளும் அவரின் உரையை செவியுற்றிருந்தனர். குறிப்பாக ஒபாமா புன்சிரிப்புடன் கைதட்டினார். இது ஒரு நெகிழ்ச்சியான சம்பவமாக அன்று பதிவானது.

இஸ்லாமியத் தீவிரவாதத்தில் அனைவரும் விரும்பும் ஒரு முடிவை ட்ரம்ப் எடுத்திருந்தாலும், ஏனையவற்றின் அமெரிக்காவின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு அவர் செயற்படவுள்ளார் என்ற சமிக்ஞைகள் ஒவ்வொன்றாக வெளிப்படுகின்றன. ஆசிய பசுபிக் ஒப்பந்தத்தில் (12 நாடுகள் தமக்கிடையே எல்லைகள் மற்றும் நிபந்தனைகள் இல்லாமற் செய்துள்ள ஒப்பந்தம்) இருந்து நேற்றுமுன்தினம் வெளியேறியது அமெரிக்கா. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பிரிட்டன் பிரதமர் திரேசா மே, ட்ரம்ப் இடையிலான சந்திப்பு ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளது. ட்ரம்ப் - ரஷ்ய ஜனாதிபதி புடின் இருவரும் விரைவில் சந்திக்கவுள்ளனர். சந்திப்புக்கு முன்னதாக இன்னும் சில தினங்களில் தொலைபேசியில் உரையாடவுள்ளனர். ட்ரம்ப் - இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாகு இடையிலான சந்திப்பும் இடம்பெறவுள்ளது. இவை அமெரிக்காவின் அடுத்தடுத்த முடிவுகளை வெளிப்படுத்தத் தகுந்தவையாக அமைந்துள்ளன.



உடுவிலூர் கலா



# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம் மனையில் கூடுதல் கோடி பெறும்" இது ஔவையின் பாடலில் வருகின்ற வரிகள். கூடி வாழ்தலே தமிழரின் பாரம்பரிய பண்பாடு. இன்று கூடிவாழ்தல் மிக மிக அரிதாகிவிட்டது. கூடி வாழ்தலின் ஒற்றுமை, பாசப்பகிர்வு, மன மகிழ்ச்சி ஆகியவற்றை அனுபவித்து உணர்ந்த எம்மவர்கள் அதைப் பண்பாட்டின் அடிக்கட்டுமா னத்தில் இறுக்கமாக இணைத்துக் கொண்டார்கள்.

இன்றும் திருச்சபைகள், பாடசாலைகள், அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் வருடாந்த ஒன்றுகூடலை நிகழ்த்தி மகிழ்ந்து வாழ்வதைக் காண்கிறோம்.

குடும்பங்களைப் பொறுத்தவரை சிறிய சிறிய நிகழ்வுகளுக்குக் கூட கே.எவ்.சி என்றும் மாங்கோஸ் என்றும் விருந்து படைப்பதையும் எம் கலாசாரத்துக்கு அப்பாற்பட்ட உணவுகளை நாகரிகம் எனப் பரிந்துரைத்து உண்டு மகிழ்வதையும் காணக் கூடியதாக உள்ளது. அது மட்டுமல்ல திருமணம், பூப்புனித நீராட்டுவிழா ஏன் அந்தியேட்டிக்கான நிகழ்வுகள் கூட இன்று ஆங்காங்கு முளைத்து நிற்கின்ற மண்டபங்களில் ஒரு சில மணித்தியாலங்களில் நடந்து முடிகின்றன. இந்த மண்டபங்களில் வரவேற்பு என்பது விசித்திரமானதாக உள்ளது கண்கூடு. எங்கள் பண்பாட்டின் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்கள் இந்த மண்டபங்களில் ஆழமாகப் புதைக்கப்படுகின்றன என்கிற உண்மையை மறந்து வாழும் எம்மவரை எவ்வாறு அழைப்பது? ஒரு வீட்டின் வைபவத்தின்போது அந்த வீட்டு உறவுகளால் அகமும் முகமும் மலர்ந்து கைலாகு கொடுத்து முத்தம் கொடுத்து சந்தனமிட்டு வரவேற்ற எம் பண்பாடு எப்படித் தொலைந்தது? வீடுகளில் விருந்தினர்களை வரவேற்று உபசரித்த நிறைவு இன்று மண்டப நிகழ்வுகளில் ஏற்படுகிறதா?

வீட்டில் ஒரு நிகழ்வை நடத்துவதானால் உறவினர்களுக்கு அழைப்பு விடுப்பதே பெரிய வேலையாக இருந்தது. இன்று தொலைபேசி அழைப்பு அல்லது முகநூலில் பதிவிடுவது போன்ற அறிவியல் அழைப்புக்கள் முன்னிலையில் உள்ளன. உணவுகளை எடுத்துக் கொண்டால் மேலைத்தேய கீழைத்தேய உணவுகள் மேசையில் ஏறி அழகாக அமர்ந்து சிறப்பிக்கின்றன. எமக்கு ஆரோக்கிய உணவை அள்ளித்தந்த அட்சய பாத்திரமாம் வாழையிலை ஓரங்கட்டப்பட்டுவிட்டது. மோர், இளநீர், பழஞ்சோற்று நீர் என்பனவெல்லாம் பழமை என்கிற போர்வைக்குள் இறுகக் கட்டப்பட்டு ஓரத்திலே போடப்பட்டுள்ளன. மென்பானங்களும் கொக்கோகோலா, செவின்அப் என்னும் சோடாவகைகளும் விருந்துகளைத் தரமுயர்த்தி நிற்கின்றன.

இவையெல்லாம் எமது ஆரோக்கிய வாழ்வுக்கு சாவுமணி அடிப்பதைத் தடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. பகட்டு வாழ்க்கைக்கு அடிமையாகி எமது பாரம் பரியங்களைத் தொலைத்து தொற்றா நோய்களையும் விலைகொடுத்து வாங்கும் மாய வாழ்க்கைக்கு எப்போது முடிவு வரும்? முற்றுப்புள்ளி வைப்பது யார்? தடம்புரளும் எமது பழக்க வழக்கங்களால் தடம்மாறியுள்ளது எமது வாழ்க்கை. நீரிழிவு வியாதி வயது வித்தியாசமின்றி ஏற்படுகிறது. உடற்பருமன் வாட்டி வதைக்கின்றது. வாய்வுக் கோளாறுகள் வாழ்க்கையைத் திசை திருப்புகின்றன. ஆரோக்கியம் எம்மை விட்டுத் தொலைதூரம் சென்றுவிட்டது.

இனியும் இப்படியே வாழலாமா? எமது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் இழக்கலாமா? தொற்று நோய்களையும் தொற்றா நோய்களையும் விலை கொடுத்து வாங்கலாமா? ஆயுளின் நாள்களைக் குறைக்கலாமா? எம்மவரே சிந்தியுங்கள். அருமருந்தன்ன உறவுகளை மேம்படுத்த ஹோட்டல்களுக்குச் சென்று விருந்து வழங்காதீர்கள். எதிரிக்குக் கூட சோடாக் கொடுத்து மகிழாதீர்கள் உங்கள் வீடுகளில் வைபவங்களை மகிழ்ச்சியுடன் நடத்துங்கள். உறவுகளுடன் கூடி மகிழுங்கள். உங்கள் கைகளால் விதம் விதமாகச் சமைத்துக் கூடி உண்ணுங்கள். அறுசுவையுணவின் சொந்தக்காரர் நாமல்லவா? ஆரோக்கியத்தைப் பேணுங்கள். பிளாஸ்ரிக் பாவனைக்கு முற்றுப்புள்ளியிடுங்கள்.

அருகிப்போன சாமை, தினை, வரகு போன்றவற்றின் உணவுகளை மீண்டும் சமைத்து உண்ணப்பழகுங்கள். வீடுகளில் உறவுகளின் கலகலப்பைக் கண்டு ரசித்து மகிழுங்கள். பெருந்தொகையான பணத்தைக் ஹோட்டல்களில் செலுத்தி அற்பமான சந்தோசத்தை உணரும் நிலையைத் தவிருங்கள். உறவுகள் தொடர்கதை உணர்வுகள் சிறுகதை". உறவுகளை புனிதப்படுத்துங்கள். கூடிவாழ்ந்தால் கோடி நன்மை. குடும்பம் கோயிலாகும் என்பது உண்மை. இதை என்றும் புரிந்து வாழ்வது எம் ஒவ் வொருவரதும் தலையாய கடமை. அறிவியலில் எம் வாழ்வை அர்ப்பணித்து நீண்ட சந்தோசங்களை அற்பமாக்கி அநியாய வாழ்வு வாழாது நீண்ட ஆரோக்கியத்தோடு வாழ எம் பாரம்பரிய உணவுகளையும் பழக்க வழக்கங்களையும் இறுக்கிப் பற்றிப் பிடிக்க ஒவ்வொருவரும் தயாராக வேண்டும். எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க நோய்களிலிருந்து விடுதலைபெற எம்மை நாமே சிந்தித்துணர வேண்டும். அத்தோடு பெற்றோரிடமிருந்தே பிள்ளைகள் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். இன்று நாம் செய்கின்ற இந்தப் பண்பாட்டுக்கு அப்பாற்பட்ட பழக்க வழக்கங்கள் பிள்ளைகளின் வாழ்வில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மறந்துவிடக் கூடாது.

"ஒரு வீட்டின் வைபவத்தின் போது அந்த வீட்டு உறவுகளால் அகமும் முகமும் மலர்ந்து கைலாகு கொடுத்து முத்தம் கொடுத்து சந்தனமிட்டு வரவேற்ற எம் பண்பாடு எப்படித் தொலைந்தது? வீடுகளில் விருந்தினர்களை வரவேற்று உபசரித்த நிறைவு இன்று மண்டப நிகழ்வுகளில் ஏற்படுகிறதா?

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.


**இடபம்:** சுயநலத்துடன் சிலர் உங்களுக்கு உதவ முன்வருவர். தொழிலில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிவியமாக வெளியூர் செல்வர். பெண்கள் பிள்ளைகள் நலனுக்காகப் பாடுபடுவர்.


**மிதுனம்:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். தொழில், வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். பணவரவும்- நன்மையும் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு விரும்பிய பதவி பெற அனுகூலம் உண்டு.


**கடகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழிலில் திட்டமிட்ட பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்குவர்.


**சிங்கம்:** நிறைவேற்ற வேண்டிய பணி தாமதம் ஆகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. மாண்வர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.


**கன்னி:** நண்பரின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள் உடல்நலனில் கவனம் செலுத்துவது அவசியம்.


**துலாம்:** சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை வந்து சேரும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.


**விருச்சிகம்:** குடும்ப சிரமம் குறித்து பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். தெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும். பிள்ளைகளால் உதவி உண்டு.


**தனுசு:** வெகுநாள் திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.


**மகரம்:** பணிகளில் கவனக்குறைவு ஏற்படலாம் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறுக்கீடுகளை சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படலாம்.


**கும்பம்:** உங்களுக்கு எதிராக செயற்பட்டவர் விலகிச் செல்வர். புதிய முயற்சிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.


**மீனம்:** சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். அரசு வகையில் ஆதாயம் கிடைக்கும்.

வெளிநாட்டில வேலை பார்க்கிறவன் சங்கர் படம் மாதிரி பிரமாண்டமா தெரிவாங்க....

உண்மையில் அவர்களின் வாழ்க்கை பாலா படம் மாதிரித்தான் இருக்கும்.



# தொடர்ந்து தள்ளிப்போகும் சூர்யாவின் எஸ்-3



சூர்யா நடிப்பில் ஹரி இயக்கி உருவாகியுள்ள 'எஸ்-3' படம் பெப்ரவரி 3 ஆம் திகதி வெளியாகும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

சூர்யா நடிப்பில் தற்போது எஸ்-3 படம் படப் பிடிப்பு முடிந்து வெளியீட்டுக்கு தயாராகவுள்ள நிலையில், படம் தொடர்ந்து பலமுறை தள்ளிப் போகிறது. இந்தப் படத்தை வெளியிடுவதற்கான திகதியை படக்குழு பலமுறை ஒத்திவைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிங்கம் படத்தின் தொடர்ச்சியாக மூன்றாவது பாகமாக உருவாகியிருக்கும் இந்தப் படத்தை ஹரி இயக்கியிருக்கிறார். ஸ்ருதிஹாசன், அனுஷ்கா ரெட்டி, விவேக், சூரி, ராதாரவி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

குடியரசுத் தினத்தன்று வெளியாகும் என அறிவித்திருந்த பட நிறுவனம் தற்போது அதனை ஒத்திவைத்துள்ளது.

இந்த நிலையில், தமிழகம் முழுவதும் ஜல்லிக்கட்டுக்காக இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கடுமையாகப் போராடி வந்தனர். போராட்டங்கள் முடிவுக்கு வந்தாலும் இயல்புநிலை திரும்பாததால் படத்தை வெளியிடுவதைத் தள்ளி வைப்பதாக படத் தயாரிப்பு நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டதாக சினிமாவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏன் மச்சான் பசங்க ஐ லவ் யூ சொன்னதும் பெண்கள் ஏன் செருப்ப கழட்டுறாங்க



ஆண்களின் இதயம் கோயில் மாதிரிடா அதுக்குள்ள போவதற்குமுன் செருப்பை கழட்டுறது தானே முறை. அதுதான்

நடப்பதெல்லாம்
நன்மைக்கே எண்டு
சொல்லுறாங்களே
எத்தினை கிலோ மீற்றர்
நடந்தா நல்லது எண்டு
உங்களுக்குத் தெரியுமா?
தெரிஞ்சா எனக்குச்
சொல்லுங்க...







# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | | 9 | | 5 | | | 3 |
| | 7 | | | 8 | | | 9 | |
| | | 9 | | | | 4 | | |
| | 2 | | | 1 | | | 5 | |
| 9 | 8 | | | | | | 2 | 7 |
| | 6 | | | 9 | | | 3 | |
| 6 | | 8 | | | | 7 | 4 | |
| | 5 | | | 6 | | | 1 | |
| 4 | | | 7 | | 1 | | 8 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | 2 | 8 | 5 | 4 | 1 | 7 |
| 5 | 1 | 4 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 7 | 2 | 3 | 4 | 1 | 9 | 6 | 5 |
| 4 | 3 | 5 | 8 | 7 | 2 | 1 | 9 | 6 |
| 2 | 9 | 6 | 5 | 1 | 3 | 7 | 4 | 8 |
| 7 | 8 | 1 | 9 | 6 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 5 | 7 | 4 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 1 | 4 | 3 | 6 | 2 | 8 | 5 | 7 | 9 |
| 9 | 2 | 8 | 1 | 5 | 7 | 6 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் ள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வே டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# பூசணிக்காய்

கோடைக்காலத்தில் வெப்பத்தினால் உடலில் அதிகம் உண்டாகும் வெப்பத்தை பூசணிக்காய் தணிக்கிறது. அதனால் இதைக் கோடைப் பூசணி என்றும் வழங்குவார்கள்.

பூசணிக்காயின் தாயகம் வடக்கு மெக்ஸிகோவும், தென்னமெரிக் காவுந்தான். இதன் தாவர விஞ்ஞானப் பெயர் பெனின்காசா ஹிஸ் பிடா (Banincasa Hispida) என்பதாகும்.

சாம்பல் பூசணியின் இலைகளும், விதைகளும், பூசணியைப் போலவே முழுவதும் ஊட்டச் சத்து நிரம்பியவை.

இதில் உள்ள ஊட்ட உணவுகளுக்காகவும் மருத்துவக் குணங்களுக் காகவுமே பூசணியைப் பயிர் செய்கின்றனர். இது படர் கொடியைச் சேர்ந்தது. தென்னமெரிக்கர்களின் விருப்பமான காய்கறிகளுள் சாம்பல் பூசணியும் ஒன்றாகும். இக்காய்கறி பெண்களுக்கு ஏற்படும் வலிப்பு நோய், தலைப்பேன்கள், சிறுநீர் பிரியாமை முதலியவற்றைக் குணப்படுத்திவிடுகிறது.

முடி நன்கு வளரவும், தலையில் பேன்கள் குடியேறாமல் இருக்கவும், வறண்ட முடிகள் எண்ணெய்ப் பசையுடன் காட்சியளிக்க பின் வருமாறு செய்ய வேண்டும். பூசணியின் தோலையும், விதைகளையும் தேங் காய் எண்ணெயில் காய்ச்சி இறக்கி வைத்துக் கொள்ளவும். தினமும் இந்த எண்ணெயைத் தலையில் தேய்த்தால் போதும், பயன் கிடைக்கும்.



# வேர்க்கடலை சுண்டல்



**தேவையான பொருள்கள்**
வேர்க்கடலை - ஒரு கப்
(அரை உப்பு போட்டு வேகவைத்தது)
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
உப்பு - தேவைகேற்ப
தேங்காய் துருவல் - இரண்டு தேக்கரண்டி

**பொடி செய்ய:**
கருப்பு எள்ளு - ஒரு தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு - ஒரு தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் - இரண்டு
அனைத்தையும் வறுத்து
பொடி செய்து கொள்ளவும்.

**தாளிக்க:**
எண்ணெய் - ஒரு தேக்கரண்டி
கடுகு - அரை தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் - இரண்டு
கறிவேப்பிலை - சிறிதளவு

**செய்முறை**

கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை போட்டு தாளிக் கவும். பிறகு, அதில் வேகவைத்த வேர்க்கடலை, மஞ் சள் தூள், உப்பு, தேங்காய் துருவல் சேர்த்து மூன்று நிமிடம் கிளறவும். பின், பொடி சேர்த்து கிளறி இரண்டு நிமிடம் கழித்து இறக்கவும்.



# இது புதுசு

சிறுவர்களுக்கான பரிசுப் பொதிகள் அறிமுக மாகியுள்ளன. சிறிய கைப்பை, தலைமுடிக்கு கிளிப்புகள், ஹேல் பாண்டுகள் அனைத்தும் ஒருங்கே இணைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இவை 250 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.




# துணிகளை துவைக்கும்போது கவனிக்க வேண்டியவை

- ஒரு முறை பயன்படுத்திய உடனே துணி துவைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. கெட்ட வாடை, அழுக்கு அல்லது வியர்வை அதிகம் உறுஞ்சி இருந்தால் மட்டுமே துவைத்தால் போதும்.
- வெளிர் நிற துணிகளை வண்ணத் துணிகளுடன் கலக்க கூடாது. அது வெள்ளை என்று மட்டுமில்லாமல் எதுவாக இருந்தாலும் இரண்டையும் சேர்த்து துவைக்கக் கூடாது.
- அதிக நேரம் சவர்க்கார நீரில் ஊறவைத்தல், அதிக நேரம் சலவை இயந்திரத்தில் துவைத்தல் போன்றவை அழுக்கு போக்க செய்யும் என எண்ண வேண்டாம். இது துணி மற்றும் ஆடையின் தரத்தை குறைக்கச் செய்யும்.
- சிலர் அதிகப்படியான சலவைத்தூள் பயன்படுத்தினால் அழுக்கு முழுவதும் போகும் என கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு. இதுவும் ஆடை மற்றும் நூலின் தரத்தை இழக்கச் செய்யும்.
- உள்ளாடைகளை சவர்க்காரம் போட்டு தான் துவைக்க வேண்டும் என்றில்லை. நீங்கள் குளித்த பிறகு அலசிப் போட்டால் கூட போதுமானது.
- சட்டை, பேண்ட் எதுவாக இருந்தாலும் துவைக்கும் போது பட்டங்கள், ஜிப் போன்றவற்றை அவிழ்த்து துவைக்க வேண்டும். இல்லையேல் அதன் இறுக்கம் குறைவதுடன், பட்டன் வலுவிழந்து போகலாம்.
- துவைத்த பிறகு நீண்ட நேரம் துணியை வாளியில் அல்லது சலவை இயந்திரத்தில் போட்டு வைக்க வேண்டாம். இதனால் பக்டீரியாக்கள் தாக்கம் பெருகும்.
- சலவை இயந்திரத்தை பயன்படுத்துவோர், உங்கள் துணிகளின் மீது விருப்பம் கொண்டிருந்தால் இயந்திரத்தையும் அவ்வப்போது கழுவ வேண்டும்.




குளிர்காலத்தில் உடல் அதிகம் வியர்ப்பதில்லை. எனவே, உணவில் அதிக உப்பு வேண்டாம். பேரிக்காய், பிளம்ஸ், அப்பிள், சாத்துக்குடி, ஒரேஞ்சு போன்ற பழங்களைச் சாப்பிடலாம்; நீர்ச்சத்து நிறைந்த தர்பூசணி, முலாம்பழம், திராட்சை போன்றவற்றைத் தவிர்க்கலாம். மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு தினம் ஒரு வாழைப்பழம் கொடுக்கலாம்.



பால், தயிரில் அதிக கொழுப்பு இருப்பதால், குளிர்காலத்தில் வயதானவர்களுக்கு அது வேண்டாம். இஞ்சி தேநீர் அல்லது சுக்குமல்லி காபி குடிக்கலாம். இது குருதி ஓட்டத்தை சீராகவைக்க உதவும். பாலைத் தவிர்க்க முடியவில்லை என்பவர்கள் காய்ச்சிய பாலில் மிளகுத்தூள், மஞ்சள்தூள் சேர்த்துக் குடிப்பது சிறந்தது. அதேபோல தயிரைத் தவிர்த்து மோராக எடுத்துக் கொள்ளலாம்.


# சூரியக் குடும்பம்.!

## புகையுருவான கொள்கையினுள் ஒரு பார்வை




சூரியக் குடும்பம் எவ்வாறு தோன்றியது என்பது தொடர்பில் உறுதியான கொள்கையோ அல்லது பதிலோ இதுவரை கண்டறியப்படவில்லை. சூரியக் குடும்பம் தோன்றியது தொடர்பிலான பல்வேறு விதமான கருத்துக்கள் இதுவரை கூறப்பட்டு வந்துள்ளன. 18 ஆம் நூற்றாண்டில் புகையுருக் கோட்பாடு என்ற தத்துவம் கூறப்பட்டது. அதாவது பல வாயுக்களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங்கியது. அச்சுருக்கத்தின் காரணமாக அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்புச் சக்தியின் அரவணைப்பானது. அவற்றின் சுழற்சி வேகம் மேலும் அதிகரித்தது.

இதன்காரணமாக அத்தொகுதியின் வெளிப்பரப்பின் வேகம் மிகவும் அதிகமானது. ஈர்ப்பை மீறத் தொடங்கியது. இதிலிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாயின. நடுப்பகுதி மட்டும் சூரியனாக ஒளியையும், வெப்பத்தையும் அளித்துக் கொண்டுள்ளது எனப்



புகையுருக் கோட்பாடு சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிக் கூறிக்கொள்கிறது.

பின் நாள்களில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியானது தொலைநோக்கியை எம்மிடையே கண்டுபிடித்து தந்தது. இதன் மூலமாக ஈர்ப்பு விசையை மீறியதாக இடைப்பட்ட துண்டுகள் எவையும் வெளியேற முடியாது என்று அறியப்பட்டது. இவை புகையுருக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாது மறுதலித்தது.

18 ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும்பத் தோற்றம் பற்றியதான கொள்கை உருவானது. விண்வெளியில் உலவும் மற்றொரு விண்மீன் சூரியனின் அருகாக வர நேர்ந்போது ஈர்ப்பு விசை காரணமாக சூரியனது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்ததாக சொல்லப்படுகிறது. சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாயின என்று அக்கொள்கை விளக்கமளிக்கிறது. இதன் பிற்பாடு இரு விண்மீன்களுக்கு இடையேயுள்ள தூரம் மிக அதிகமாகையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பது ஏற்புடையதாக இல்லை என்றனர் விஞ்ஞானிகள்.

ஆனாலும் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஒன்று உள்ளதாக கூறப்படுகிறது. அந்தக் கொள்கையானது பின்வருமாறு விளக்கமளிக்கிறது. ஆரம்ப காலத்தில் ஒரு மிகப் பெரிய விண் முகில் இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச் செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. அதாவது நியூட்டனின் ஈர்ப்பு விதியின் படி, இரு பகுதிகளான விண்முகிலில் நிறை ஈர்ப்புச் செறிவு மிகுந்த பகுதி மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது.

இதன் பின் தனது சொந்த நிறை ஈர்ப்பினால் விண் முகில் சுருங்கத் தொடங்கியது. இந்த நிலையில் இது ஒரு வாயுப் பந்துபோல் சுருங்கச் சுருங்க சுழலும் வேகமும் அதிகரித்தது. காலப்போக்கில் இதன் மையப் பகுதி குமிழ் போன்றும் சுற்றுப்பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. இதன் பின்னர் வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது.

இதனால் மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப் பகுதி ஒரு விண்மீனாக (சூரியன்) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள் மீன்களாக மாறின என்கிறது அக்கொள்கை.

மேலும் சூரியனுக்கு அருகில் உள்ள கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன மிக அதிகமான வெப்ப நிலையிலிருந்து குளிர்ந்து உருவானவை. இதனால் இவை திடக் கோளங்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கான், இரும்பு போன்ற தாதுக்கள் காணப்படுகின்றன. இந்தத் திடக்கோளங்களைச் சுற்றி மென்மையான வாயு மண்டலம் காணப்படுகின்றது. ஆனாலும் சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்கள் உயர்வெப்ப நிலையை அடையாது குளிர்ந்த வாயு நிலையிலேயே சுழன்று வருகின்றன. இவை பெரும்பாலும் ஹீலியம், ஐதரசன் ஆகிய வாயுத் தனிமங்களைக் கொண்டவையாகக் காணப்படுவதாகக் கூறுகின்றது.

சூரியனுக்கு அருகிலிருந்தான இடப்படி முறையே புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப் டியூன் என கோள்கள் அமைந்துள்ளன. சூரியனுக்கும் புவிக்கும் இடையே அமைந்துள்ள கோள்களான புதன், வெள்ளி ஆகிய இரண்டும் உட்கோள்கள் (Inner Planets) என அழைக்கப்படுவதுடன் புவியைத் தாண்டிச் சுற்றி வரும் கோள்களான செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன வெளிக்கோள்கள் என்பதாகவும் அழைக்கப்படுகின்றன.

தவிர, சூரியனைச் சுற்றி வரும் இக் கோள் மீன்கள் அனைத்தினது பாதையும் நீள்வட்டமாகவே காணப்படுவதாகவும் அதே வேளை இவை ஏறத்தாழ ஒரே தள அமைப்பில் அமைந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

**மகப்பேறு இனவிருத்தி நிலையம்**
**நொதேண் சென்றல் வைத்தியசாலை திருநெல்வேலி**

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF,ICSI யும் கொடை முட்டை (doner egg) விந்து நன்கொடை (doner Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் **திருநெல்வேலி நொதேண் சென்றல் வைத்திய சாலையில்** அளித்து வருகின்றார். இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

**தொடர்புகளுக்கு: திருமதி ராஜேஸ்வரி**
**077 343 9988, 021 221 9988, 021 221 9977, 021 222 2263**

**புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன் புலம்**
**ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை**
**கருத்தாய்வுக் கூட்டம்**

மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபையின் பொதுக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தாய்வுக்கூட்டம் எதிர்வரும் 08.02.2017 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**தலைவர்** (AJA 7997)(12.18) **செயலாளர்**

**பெயர்மாற்றம்**

பொந்திலேன், பண்டத்தரிப்பைச் சேர்ந்த **மாறி வினோதினி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **மாறி வினோதினி அல்போன்சஸ்** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

மாறி வினோதினி அல்போன்சஸ்

**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)**
**கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 29.01.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

குறிப்பிட்ட கிளைகளுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் தவிசாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காதுவிடினும் குறித்த கூட்டத்துக்கு இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளித்து கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 01 | நல்லூர் | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். | திரு.பா.ஸ்ரீகுமார் |
| 02 | கோப்பாய் | கந்தசாமி கோயிலடி சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். | திரு.வ.நிதர்சன் |
| 03 | உடுவில் | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மானிப்பாய் வீதி, மருதனார்மடம். | திரு.க.சசிகரன் |
| 04 | சங்கானை | சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம், சித்தங்கேணி. | திரு.பா.பாலரவி |
| 05 | சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், கீரிமலை வீதி, சண்டிலிப்பாய். | திரு.கு.நிஷாந்தன் |
| 06 | சாவகச்சேரி | சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கண்டி வீதி, சாவகச்சேரி. | திரு.நா.குமணதாசன் |
| 07 | யாழ்ப்பாணம் | யா/கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலயம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | செல்வி ச.லாவண்யா |
| 08 | தெல்லிப்பழை | மகாஜன சபை மண்டபம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. | திரு.த.பிரபாகரன் |
| 09 | காரைநகர் | காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், சுற்று வீதி, காரைநகர். | திரு.இ.தனுஷன் |

26.01.2017 (c /00437) (11,17,18)

செயலாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

# ஜமைக்கா தடகள வீரர் உசேன் போல்டின் ஹட்ரிக்கில் ஹட்ரிக் சாதனை பறிபோனது

2008 ஒலிம்பிக் போட்டியில் ஜமைக்கா நாட்டை சேர்ந்த தடகள வீரர் உசேன் போல்ட் வாங்கிய தங்கம் திரும்பப் பெறப்படுகிறது. இதன் மூலம் அவரின் ஹட்ரிக்கில் ஹட்ரிக் சாதனை பறிபோகிறது.

**ஊக்கமருந்து விவகாரம்**

2008ஆம் ஆண்டு பிஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஜமைக்கா நாட்டின் சார்பில் உலகின் முன்னணி தடகள வீரர் உசேன் போல்ட் 4X100 மீற்றர் தொடர் ஓட்ட பந்தயத்தில் தங்கம் வென்றார். அந்த போட்டியில் அவருடன் பங்கேற்ற நெஸ்டா கேர்ட்டர் என்ற வீரரின் குருதி மாதிரியில் மெத்தில்ஹெக்சாமைன் என்ற ஊக்கமருந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு ஒலிம்பிக் கவுன்சில் சார்பில் 454 பேர் ஊக்க மருந்து பயன்படுத்தியதாக இருந்த சந்தேகத்தின் பேரில் அவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட குருதி மாதிரிகள் கடந்த ஆண்டு பரிசோதிக்கப்பட்டது. அதன் முடிவில் கேர்ட்டர் ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து கேர்ட்டர், உசேன் போல்ட் உட்பட 4 பேரின் தங்கம் திரும்பப் பெறப்பட உள்ளது.

*பறிபோனது சாதனை*

கடந்த சில மாதங்களுக்கு முன் ரியோ டி ஜெனிரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பெற்ற தங்கம் உட்பட இதுவரை 9 தங்கங்களை ஜமைக்கா நாட்டை சேர்ந்த உசேன் போல்ட் பெற்றார். அதன் மூலம் ஹட்ரிக்கில் ஹட்ரிக் படைத்த நாயகன் எனப் புகழ்ந்து பேசப்பட்டார். இந்த நிலையில் தற்போது அவர் வாங்கிய ஒரு தங்கம் பறிக்கப்படும் பட்சத்தில் அந்தப்பெருமையை இழக்கிறார் உசேன் போல்ட். (வ)



# டோனிக்கு பத்ம பூசண் விருது அறிவிப்பு கோக்லி, மாரியப்பனுக்கு பத்ம சிறி விருது

புதுடெல்லி, ஜன. 26

இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனிக்கு, இந்தியாவின் மூன்றாவது உயர் விருதான பத்ம பூசண் விருது வழங்கப்படவுள்ளது என்று டெல்லி அரசால் நேற்று அறிவிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் தற்போது அறிவிக்கப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே டோனிக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் நான்காவது உயர் விருதான பத்ம சிறி இந்திய அணியின் தற்போதைய தலைவரான விராட் கோக்லி மற்றும் பரா ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டு தங்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் தங்கவேலு மாரியப்பன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது. (ம)



# உலகின் மிக உயரமான கட்டடத்தில் இந்திய தேசியக் கொடி ஒளிர்கிறது

உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா, இந்திய மூவர்ண தேசிய கொடி நிறத்திலான ஒளிவிளக்குகளால் பிரகாசிக்கிறது.

இந்தியாவின் 68ஆவது குடியரசு தின விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. புதுடில்லியில் நடைபெறும் விழாவில் அபுதாபி இளவரசர் முகமது பின் ஜயாத் அல் நஹ்யான் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

இந்திய கொடிக்கு கௌரவம் இதைமுன்னிட்டு, டுபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா, இந்திய மூவர்ண தேசிய கொடியின் நிறத்திலான எல்.இ.டி., விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பிரகாசிக்கிறது. இன்று மற்றும் நாளை அந்த நாட்டு நேரப்படி மாலை 6.15 மணி, 7.15 மணி, 8.15 மணி ஆகிய நேரங்களில் விளக்குகள் ஒளிர்விக்கப்படுகிறது. இந்தத் தகவலை புர்ஜ் கலிபாவின் அதிகாரபூர்வ கீச்சக (டுவிட்டர்) பக்கம் வெளியிட்டுள்ளது. 2,716.5 அடி உயரமுள்ள புர்ஜ் கலிபா கட்டடம் உலகளவில் மிக உயரமான கட்டடம், மிக உயரமான லிப்டுகள் கொண்ட கட்டடம் போன்ற பல்வேறு சிறப்புகள் வாய்ந்தது. (வ)



உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா, இந்திய மூவர்ண தேசிய கொடியின் நிறத்திலான எல்.இ.டி., விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### போராட்டம்...

யில் உடனடியாகச் சேர்க்கப்பட்டார். தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு காணாமல் ஆக் கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் 16 பேர் வவுனியா நகரின் மையத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

குடிதண்ணீரும் இன்றி, இரவு - பகலாக, கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டத்தை தொடர்ந்தனர். கடந்த இரு தினங்களை விட மக்கள், பொது அமைப்புக்களின் ஆதரவு நேற்றைய தினம் அதிகரித்திருந்தது.

வவுனியா வைத்தியசாலையின் மருத்துவர், போராட்டத்தில் ஈடுபட்டோரை நேற்று மாலை சோதனை நடத்தினார். நான்கு பேரின் உடல் நிலை மிக மோசமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார். இன்று நான்காவது நாளும் உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் உடல்நிலை படுமோசமாகப் பாதிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

காணாமற்போனோரின் உறவுகள், நகரில் அமைக்கப்பட்டுள்ள கொட்டிலிலேயே படுத் துறங்கி, தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இதேவேளை வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த சண்முகம் சறோ ஜினி தேவியின் உடல்நிலை நேற்று மாலை பாதிக்கப்பட்டது. அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-5-402)

### தெற்பம்...

குடும்பத் தலைவர் நீரில் மூழ்கி வலையில் சிக்குண்டு உயிரிழந்தார். அதில் பயணித்த மற்றையவர் தப்பினார் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கடற்றொழிலுக்காக இருவரும் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் புறப்பட்டுச் சென்றிருந்தனர். இதன்போதே சம்பவம் இடம்பெற்றது. நெடுந்தீவு 13ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த டொன் பொஸ்கோ குயின்ரஸ் (வயது 27) என்பவரே உயிரிழந்தார்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வழமையைவிட நேற்றுக் காற்று அதிகமாகக் காணப்பட்டது. அவரும் அவரது உறவினரும் தொழிலுக்குப் பிற்பகல் சென்றிருந்தனர். தெப்பம் புரண்டதில் இருவரும் கடலில் தூக்கி வீசப்பட்டுள்ளனர். அவர்களில் குயின்ரஸ் மீது வலையும் விழுந்துள்ளது. அதனால் நீரில் அவர் மூழ்கியதோடு தப்ப முடியாதவாறு அவர் வலையில் சிக்குண்டுள்ளார். அவருடன் சென்றவர் வலையை வெட்டி அகற்றி குயின்ரஸை கரை சேர்த்தபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சடலம் நெடுந்தீவு வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-4)

# வலைப்பந்தாட்ட பயிற்றுநர் சங்கத்துக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் சங்கம் கொழும்பில் உருவாக்கப்படவுள்ளது. மேற்படி வலைப்பந்தாட்ட பயிற்றுநர் கழகங்களின் இணைய விரும்பும் யாழ். மாவட்ட பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் பயிற்றுநர்கள் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவி திருமதி ரூபசிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ம-23)

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா தனபாலசூரியர் (தங்கராஜா)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.05.1944 | 25.01.2017 |

பண்டியன்தாழ்வை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தனபாலசூரியர் (தங்கராஜா) நேற்று (25.01.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 4080 578

227, கொழும்புத்துறை வீதி,
பண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

### நல்லையா கண்ணதாசன்

(ஆசிரியர், கிளி /இராமகிருஷ்ணா வித்தியாலயம்)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், இல. 323, நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கண்ணதாசன் நேற்று 25.01.2017 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - நாகேஸ்வரி (புங்குடுதீவு) தம்பதியரின் அன்புமகனும் சண்முகநாதன் - லீலாவதி (வேலணை மேற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும் பாமா (ஆசிரியை, யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) அன்புக்கணவரும் வைஷ்ணவியின் பாசமிகுதந்தையும் பாலசுப்பிரமணியம், இரத்தினம், வரலட்சுமி, விக்னேஸ்வரன், மாலினி (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சுந்தரமூர்த்தி (யா/கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி), திருநாவுக்கரசு, காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் இல.323, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெற்று இறுதிக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 323, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# அகதிகளுக்கு எதிரான திட்டத்துக்கு ட்ரம்ப் நேற்று ஒப்புதல் வழங்கினார்



வொசிங்டன், ஜன.26

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அகதிகள் மற்றும் அமெரிக்கக் குடியுரிமை பெறாதவர்களுக்குத் தடை விதிக்கும் திட்டத்துக்கு நேற்று ஒப்புதல் வழங்கினார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரியா, வேறுசில ஆறு மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாட்டு அகதிகளுக்கு எதிராகக் குறித்த தடை விதிக்கப் பட்டுள்ளது என குடிவரவு உத்தியோகத்தர்கள் தகவல் வெளியிட்டனர். அத்துடன், ட்ரம்ப் தனது ருவிற்றரில், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முக்கியமான தினம் இது என நேற்றுக் குறிப்பிட்டார். (ம-எ)


## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.01.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்)
1.காலை 08-10 2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## பூக்கன்றுகள் விற்பனை

நல்லின குரோட்டன்கள், மருத்துவ செடிகள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். பூச்சாடிகள், மீன்தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=

யாழ் அக்கூரியம்
917, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
075 991 0060, 077 707 0711

## தேவை

கச்சேரியை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு பிறைற்றைஸ், கொத்து, அப்பம் தயாரிப்பவர்கள் தேவை. தங்குமிடம், உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 077 846 9173

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபலமான மருத்துவ ஆய்வுகூடத்திற்கு வேலையாள்கள் தேவை.

- ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் (MLT)
- கணக்காளர் (Accountant)

077 325 7144 (A/C/005) (22,17,18)

## வாடகைக்கு

ஆனைப்பந்திக்குச் சமீபமாக நாவலர் வீதியில் முற்றிலும் பிரத்தியேகமான பாதையுடன் ஒரு அறை, சிறிய குசினி, இணைந்த குளியலறை, திறந்த விறாந்தையுடன் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. இருவர் உள்ள குடும்பத்திற்கு மட்டும் ஏற்றது. முற்பணம் 50,000/= மாத வாடகை 12,000/=. (மாற்ற மடையாது) தேவையானோர் விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

Balaganesh811@gmail.com

## பெண் பணியாளர்கள் தேவை

மன்னார் உப்புக்குளத்தில் இயங்கிவரும் ஆதரவற்ற சிறார்களிற்கான நலனோம்பு நிலையமான **அன்னை இல்லத்திற்கு** பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவம் வாய்ந்தவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். உணவு, தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

### பராமரிப்பாளர்கள் - மூவர் தேவை

**தகைமைகள்:**

வயது எல்லை - 25 - 45
கல்வித்தகைமை - க.பொ.த(சாதாரண தரம்) சித்தி
சம்பளம் - பேசித்தீர்மானிக்கப்படும்

### அலுவலகப் பொறுப்பாளர் - ஒருவர் தேவை

**தகைமைகள்:**

வயது எல்லை - 25 - 45
கல்வித்தகைமை - க.பொ.த(உயர் தரம்) சித்தி, அடிப்படைக்கணினி அறிவு அவசியம், கணக்குத் துறையில் அனுபவம் அவசியம்.
சம்பளம் - பேசித்தீர்மானிக்கப்படும்

அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனப்பாங்கும், தகைமையும் கொண்டவர்கள் சுயவிவரத்துடன் 10.02.2017 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு - அன்னை இல்லம், உப்புக்குளம், மன்னார்.

## Galaxy Star

வெற்றி வாரம் 130 திகதி 2017.01.25

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 14 28 43 58

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,624,475 /-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2838 திகதி 25.01.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
01 12 46 62 L
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
03 ரூ. 45,241,588/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

பச்சை நிற டிக்கட்டுகள் 28 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

**01. சுப்பர் மார்க்கட் (60 ஆண்)**
RM 1000 SR 40000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

**02. எலெற்றோனிக் கம்பனி**
RM 1000 SR 40000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு. (30 ஆண்)

சவுதி

**01. Milk (பால் கம்பனி) (20 ஆண்)**
RL 1100 SR 44000 + OT
உணவு, தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

**02. சேல்ஸ்மன் (20 ஆண்)**
RL 1900 SR 76000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

Tel No: 077 044 7386/ 077 346 8011
E - mail: asianlanka27@gmail.com


## Uduvil Girls' College Invites

the Parents, the Old Girls and the well wishers to its
**Annual Inter Clan Athletic Meet**
**on Friday, January 27,2017, at 1.30 p.m**

**Chief Guest**

Dr. T. Gobyshanger
MBBS, MRCS(Edinburgh) MS
Consultant Orthopaedic Surgeon
Teaching Hospital Jaffna.
&
Mrs. Nilani Gobyshanger
B.A Carnatic Music
Teacher-Chundukuli Girls' College.

Principal, Staff & Students

## கண்ணீர் அஞ்சலி


மக்கள் வங்கி ஊர்காவற்றுறைகிளையில் பணியாற்றும் **ரூபகாந்தன்** அவர்களின் அன்புத் தந்தை

### முருகேசு சண்முகமூர்த்தி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்திக்கின்றோம்.

முகாமையாளரும்,
உத்தியோகத்தர்களும்
மக்கள் வங்கி ஊர்காவற்றுறை கிளை.

## மரண அறிவித்தல்



### தில்லையம்பலம் கந்தசாமி
(மேசன் செல்லக்கண்டு)

சப்பச்சிமாவடி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கோயிற் குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கந்தசாமி 24.01.2017 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி, சாவகச்சேரி.
தகவல்: குடும்பத்தினர்

077 257 7721, 077 463 9187

# சுருங்கி வரும் நிலா!

நம் அண்டைய உலகமான சந்திரனை நோக்கியதான பயணச் சாதனைகள் கடந்துபோன ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்தேறி வருகின்றன.

அப்பலோ பயண சாதனைகளுக்குப் பிற்பாடு ஏறத்தாழ 20 ஆண்டுகள் கழித்து 1992 டிசெம்பர் 7 ஆம் திகதியன்று சந்திரனை உற்று நோக்கிய கலிலியோ எனும் அமெரிக்க விண்கலம் சந்திரனின் வட துருவம் அருகே நிலாப் பள்ளங்களில் நிரந்தரப் பனிக்கட்டி படிந்திருப்பதனை அறிவித்தது.

தொடர்ந்து 1994 பெப்ரவரி தொடக்கம் மார்ச் மாதங்கள் வரை அமெரிக்காவின் கிளமென்டைன் (Clementine) எனும் ஆய்வுக் கலம் சந்திரனின் தென் துருவத்தில் தண்ணீர்ப் பனிக்கட்டிகள் உறைந்திருப்பதாகத் தெரிவித்தது. நிலவின் வட கோளத்தில் 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பிலும், தென் பகுதியில் 5 ஆயிரம் முதல் 20 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்கள் அளவிலும் ஏறத்தாழ 30 கோடி தொன்கள் நீர் ஒளிந்திருப்பது நிச்சயம் எனச் சொல்லப்பட்டது.

இந்த அளவீடானது ஏற்கனவே அறிவித்திருந்ததை விடவும் ஏறத்தாழ 20 மடங்கு அதாவது 600 கோடி தொன்கள் எனப்படுகிறது. குறிப்பாக சந்திர நிலத்தடி நீரின் அளவு என்பது இந்துமா கடலின் தண்ணீர் அளவின் ஒரு கோடியில் ஒரு பங்கு என்கின்றனர் விஞ்ஞானிகள். விண்வெளி நாடுகள் யாவுமே நிலவுத் தண்ணீரைக் குறிவைக்கின்றன. குறி வைத்துக் கொண்டுள்ளன.

நிலவுப் பயணங்கள் மேற்கொண்ட நாடுகளின் வரிசையில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பிறகு ஐரோப்பாவும், ஜப்பானும், சீனாவும் சேர்ந்து கொண்டன. அதன் பிற்பாடு ஆறாவது இடத்திலே இந்தியாவும் இணைந்து கொண்டிருந்தது.

விசேடமாக சந்திராயன் விண்கலமானது நிலவை 100 கிலோ மீற்றர் துருவப்பாதையில் சுற்றிய விடயங்கள் நாமறிந்ததே. சந்திரனின் கனிம வளங்கள் பற்றி ஆராய்ந்ததில் சந்திரனில் இடம்பெற்ற அமெரிக்காவின் எம்-3 (Moon Mineralogy Mapper-MMM)என்பது குறித்து நோக்கத்தக்கது. இது அமெரிக்காவின் ஜே.பி.எல். என்கிற ஜெட் புறொப்பல்ன் லபோரட்டரி (துரை உந்தும் ஆய்வுச்சாலை) ஆராய்ச்சிக் கூடமும், பிரௌன் பல்கலைக்கழகமும் இணைந்து வடிவமைத்த கருவி. ஏறத்தாழ 95 வீதம் நிலவைத் தனக்குள் பொதிந்து, பதிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. சந்திரனில் செறிந்து உள்ள கைட்ராக்சில் நீர்க்கூறு அம்சம் கண்டுபிடிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் இது முற்றிலும் புதிய கண்டுபிடிப்பாக சொல்லப்பட்டது.

2009 ஓகஸ்ட் மாதத்தில் வடதுருவப் பனி அளவை ஆராய்வதற்கு சந்திரக் கண்காணிப்புச் சுற்றுகலம் (Lunar Reconnaissance Orbiter) என்ற விண்கலம் நிலவுக்கு அனுப்பப்பட்டது. அதில் நாசாவின் சிறு வானலை அதிர்வு ஏற்பி (Miniature Radio Frequency) ஒன்று இடம் பெற்றது. அதன் விம்பங்கள் நிலவை முப்பரிமாணத்தில் பதிவு செய்தன. அங்கு துருவப் பகுதிகளில் பனி உறைந்து இருந்ததைக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது.


அமெரிக்காவின் நிலவுக் கண்காணிப்புச் சுற்று கலமும் சந்திரயானின் மினி சார் எனும் சிறிய செயற்கைத்துளை ரேடார் (Mini-Synthetic Aperture Radar) கருவியும் சேர்ந்து ஒரே தருணத்தில் நிலவின் வட துருவத்தில் மேலாக நின்று எர் லாங்கர் குழுவினைப் படம் பிடித்தன. நான்கு நிமிடங்களாக இவை பதிவு செய்த தகவல்கள் பூமியில் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு இயற்பியல் ஆய்வு கூடத்தில் பெறப்பட்டு ஆய்வுகள் நடந்தன. அதன்படி நிலவில் தண்ணீர் இருப்பது உறுதிசெய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. இருந்தும் அவை குடிப்பதற்கான திரவ நீராகவும் பனிக்கட்டிகளாகவும் இருக்கவில்லை. மண்டிகங்களிலும், மணலிலும் பிணைந்து உள்ள நீர்க் கூறுகளாக காணப்பட்ட தாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. குறிப்பாக சந்திரனின் பருவம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறதாகக் கூறப்படுகிறது. நிலவுக் கண்காணிப்புச் சுற்றுக் கலன் பார்வையில் நிலவின் தரைப் பரப்பில் பல்வேறு முண்டு விரிசல்கள் (Lobate Scarps) பதிவாகி உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையிலே கடந்த 100 கோடி ஆண்டுகளுக்குள் நிலவு 100 மீற்றர்கள் அளவு சுருங்கி விட்டது என்கிறார் அமெரிக்காவில் ஸ்மித்சோனியப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் குழுத் தலைவர் தோமஸ் வாட்டர்ஸ். அதாவது ஒவ்வொரு நூற்றாண்டும் நிலவு 10 மைக்ரோன் அளவு மெலிந்து வருகிறது. சராசரித் தலை முடி அளவின் பத்தில் ஒரு பங்காக இது காணப்படுகிறது. ஆக, நிலவு தனித்து அழகுப் பதுமையாய்ச் சுற்றி வராமல் புவி வரலாற்றியல் அடிப்படையிலே ஓய்வின்றி இயங்கிக் கொண்டிருப்பது மிக்க அழகே.!

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாரிமுத்து வேலாயுதம்

**(வேலுப்பிள்ளை)**



கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் மகளிர் குடியேற்ற திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து வேலாயுதம் (வேலுப்பிள்ளை) 24.01.2017 செவ்வாய்க் கிழமை இறைபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் (வேலுப்பிள்ளை - புகையிரத ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கரம்பகம் வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மதுரங்குளம் வைரவி - நாகமுத்து தம்பதியரின் மருமகளும் செல்லம்மா, கந்தசாமி (இளைப்பாறிய புகையிரத ஊழியர்), சிவக்கொழுந்து, தில்லைநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற க. வல்லிபுரம் (மணியம்), க. இராச மலர்,வே. பேரின்பராசா (இளைப்பாறிய கிராம சேவையாளர்),தி.பாமதி ஆகியோரின் மாமியாரும் பொன்னையா, சின் னாச்சி, இராசையா, தெய்வானைப்பிள்ளை, வல்லிபுரம், பொன்னு ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மிருசுவில் மகளிர் குடியேற்றத் திட்ட அவரது இல்லத்தில் நாளை (27.01.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று அவ்வூர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**077 661 7195, 077 114 1885, 077 774 2557**

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி துரைச்சாமி



பிறப்பு 12.06.1933 இறப்பு 24.01.2017

தெல்லுளுவை வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி துரைச்சாமி 24.01.2017 செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் துரைச்சாமியின் அன்பு மனைவியும் நீலரஞ்சிதராஜா(லண்டன்), அருள்ராஜா(சுவிஸ்), விக்கினராஜா(சுவிஸ்), நிர்மலா, சுவர்ணமாலா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணலதா(லண்டன்), ராஜி (சுவிஸ்), ஜெயமதி(சுவிஸ்), இந்திரதாசன்(ஆசிரியர், வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை), பஞ்சலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டினேஸ்ராஜ், வெங்கடேஷ்ராஜ், பியூலா, வினின், மானசி, தேனுஜா, தனுசியா, சோனியா, தரணிகா, தேனுகா, அரோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தெல்லுளுவை, வல்வெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 205 5306**



தோற்றம் 15 . 07 . 1952

மறைவு 24 . 01 . 2017

### கந்தையா சதானந்தன்

மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதானந்தன் 24.01.2017 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (திருச்செந்தூர் மாஸ்ரர்) - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கோகுலன், மதுரா, சுஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகோபாலன் (டென்மார்க்), கஜாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஸ்கா, அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் செல்வரட்ணம் (ஆஸ்திரேலியா), நேசரட்ணம்(பாமசிஸ்ட்), சண்முகநாதன், சச்சிதானந்தராஜா (கனடா), தெய்வராணி (ஆஸ்திரேலியா), கௌரீஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ராணி வாசா மூளாய் கிழக்கு, சுழிபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 465 2833 (மகன்)**
**077 254 1690 (மகன்)**

## மரண அறிவித்தல்



### இராமநாதன் தியாகராஜா

**(முகாமையாளர் , முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை, கிளிநொச்சி)**

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் கருவேலடி,54, மணியாரன் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் தியாகராஜா 24.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கல்கமுவா பரமநாதன் -மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் ஐங்கரன், மஞ்சுளா, நிரஞ்சன், திவாகரன் (U.K), கயன் (உரிமையாளர் - கற்பக விநாயகர் ஸ்ரோர்ஸ், தட்டாதெரு ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணியின் (கனடா) அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கிருஸ்ணதாசன், கிருஸ்ணகுமார், கிருஸ்ணரூபன், காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் மீனகுமாரியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மணியாரன் வீதி, கொக்குவில்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள்.**

**077 376 9386**

## காணாமற்போனோர்...

அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளரு மான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர்களை எங்கே போய் தேடுவது. காணாமற்போனவர்களை கண்டு பிடிப்பதற்கு உள்ள ஒரே வழிமுறை அவர்க ளைத் தேடிப் பார்ப்பதுதான். அவர்களைப் புதி தாகத் தேடிப் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. காணாமற்போனோர் தொடர்பிலான சில முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளன. ஏனையவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

1971ஆம் ஆண்டு இலங்கையில் கலவரம் நடந்தது. அதில் காணாமற்போனவர் களுக்கு இன்னமும் இறப்புச் சான்றிதழ் கிடைக்கவில்லை. 1988ஆம் ஆண்டிலும் கலவரம் நடந்தது. அதில் காணாமற் போன வர்களுக்கும் இன்னமும் இறப்புச் சான்றி தழ் கிடைக்கவில்லை.

காணாமற்போனோரின் உறவுகள் குறைந்த பட்சம் காணாமற்போனோரின் இறப்புச் சான்றிதழையாவது கொடுக்கும்படி கோரு கின்றனர். அவ்வாறு இறப்புச் சான்றிதழ் கொடுப்பதற்கான முறைமையொன்று இன் னமும் இலங்கையில் உருவாக்கப்படவில்லை. அதனால்தான் இந்தப் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது.

1976ஆம் ஆண்டுமுதல் காணாமல் ஆக் கப்பட்டவர்களுக்கு எவ்வாறான தீர்வை வழங்குவது என்ற பொறிமுறையை ஆராய்ந்து வருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோ ரின் பிரச்சினையை ஓரிரு நாள்களில் தீர்த்துவிட முடியாது. அவர்கள் அனைவரும் இறந்துவிட்டதாக இறப்புச் சான்றிதழையும் கொடுக்க முடியாது.

1988 ஆம் ஆண்டில் இறந்ததாகக் கூறப் பட்ட ஒருவர் 26 வருடங்களின் பின்னர் மீண்டும் வீடு திரும்பி வந்துள்ளார். அவ ருக்கு இறப்புச்சான்றிதழ்கொடுக்கப்பட்டிருந் தால் என்னவாகும். இதுதான் பிரச்சினை - என்றார். (வ-5)

## உறவினர்களுக்கு...

அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மக் கள் விடு தலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார். காணா மற்போனவர்களின் உறவினர்கள் வவுனி யாவில் முன்னெடுத்துவரும் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் நாடாளு மன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போன தமது சொந்தங்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதை அறிவதற் குரிய உரிமை அவர்களின் உறவினர்க ளுக்கு இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக் குத் தீர்வை வழங்குவதற்குரிய நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்பது கவ லைக்குரிய விடயமாகும்.

யாழ்ப்பாணம் சென்றிருந்தவேளை, காணா மற்போனோர் தொடர்பில் தலைமை அமை ச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருந்த கருத்துப் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்தி ருந்தது. காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு நீதியான முறையில் பதி லொன்றை வழங்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கின்றது.

அதை வழங்குவதற்குத் தாமதிக்கப்பட்டு வருவதாலேயே அவர்களின் உறவினர்கள் விரக்தியடைந்து போராட்டம் நடத்த வேண் டிய நிலையேற்பட்டுள்ளது - என்றார். (வ-5)

## உறவுகளின்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதிகள், இறக்குமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங் கீகரிப்பதற்குரிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர்களைத் தேடி அவர்க ளின் உறவினர்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அரசோ பாராமுகம் காட்டி வருகின்றது. இப்போதுதான் இந்த அரசின் உண்மை முகம் மெல்ல, மெல்ல வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளது. எமது மக்களின் கண்ணீர் சும்மாவிடாது.

தமிழர்களுக்குத் தீர்வை வழங்க வேண்டும் என்ற உண்மையான எண்ணம் ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களிடம் இல்லை. நிலை யான சமாதானத்தையும், நல்லிணக்கத்தை யும் பேச்சளவுக்கு மட்டுமே மட்டுப்படுத்தி யுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாணங் களில் தற்போதும் ஒருவகையான அடக்கு முறை - அச்சுறுத்தல்மிக்க சூழ்நிலை காணப் படுகின்றது. கேப்பாப்பிலவு மக்களும் இராணுவத்தால் மிரட்டப்பட்டுள்ளனர் - என் றார். (வ-5)

## வவுனியா...

வீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். , வடபகுதி பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களின் உறவினர்கள் அடையாள உணவுத் தவிர்ப் புப் போராட்டத்தை நல்லூர் கோயில் முன்றி லில் முன்னெடுக்கவுள்ளனர். அதேநேரம் சமூகவலைத் தளங்கள் ஊடாக விடுக்கப் பட்ட அழைப்புக்கு அமைவாக நல்லூரில் இளைஞர்களின் போராட்டமும் இன்று நடை பெறவுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களும் இன்றைய தினம் ஒரு நாள் அடை யாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளனர்.

வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு ஆதரவு தெரிவித்து, போராட்டம் நடைபெறும் இடத்தில் இன்று ஆயிரக் கணக்கானவர்கள் ஒன்று திரள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## படை வசமிருந்த...

காலை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல் லூரியில் இடம்பெற்றது. முல்லைத்தீவில் இராணுவத்தினர் வசமிருந்த 600க்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளில் 243 ஏக்கர் காணி முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதியால் முல்லைத்தீவு மாவட்டச் செய லாளர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளிக் கப்பட்டது.

இந்த காணிகளுக்கான அனுமதிகள் பய னாளிகளுக்கு உத்தியோக பூர்வமாகக் கைய ளிக்கப்பட்டன. காணி அனுமதிப் பத்திரம் இதுவரை கிடைக்கப் பெறாத முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவு களைச் சேர்ந்தவர்களில் ஆயிரத்து 350 பேருக்குச் சொந்தமான காணி அனுமதிப் பத்திரங்கள் இதனூடாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 300 பேருக்கான தலா ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவி களும் வழங்கப்பட்டன. அத்தோடு முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரியில் மகிந்த சிந்தனையின் கீழ் அமைக்கப்பட்ட தொழில் நுட்ப ஆய்வுகூடக் கட்டடத் தொகுதியும், நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்த னால் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிவமோகன், வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் கமலேஸ் வரன், வடமாகாணசபை உறுப்பினர் க.சிவ நேசன், அரச தலைவரின் வன்னி இணைப் பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான பிரபா கணேசன், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முல்லைத்தீவு இராணுவக் கட்டளை தளபதி, மாவட்ட செய லாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-21-7-35)

## கேப்பாபிலவுக்கு...

இருப்பினும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகள் நடைபெற்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அரச தலைவர் மைத்தி ரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள் கொழும்பிலிருந்து நேற்றுக் காலை உலங்கு வானூர்தியில் புறப்பட்டனர். அநுராதபுரம் வான் பரப்பில் உலங்கு வானூர்தி பிரவேசித்திருந்த நிலையில், காலநிலை சீரின்மையால் தொடர்ந்து பயணிக்க முடியாது என்று விமானிகள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து உலங்கு வானூர்தி மீளவும் கொழும்பு நோக்கிப் பய ணித்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதன் காரணமாக ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களான த.சித்தார்த்தன், சி.சிவமோகன் ஆகி யோர் தலைமையில் நிகழ்வுகள் நடை பெற்றன. (த-5)

## ரணில்...

நடவடிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று (நேற்றுமுன்தினம்) எம்முடன் பேச்சு நடத்தினார். இந்த விடயம் தொடர்பாக தெரிந்த தகவல்களை வழங்குவதாக பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். அமைச் சர் சுவாமிநாதனும் நாளை (இன்று) வவு னியா செல்கிறார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் எந்த வொரு தகவல்களையும் இங்கு தேடிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர். இருப்பவர் கள் பற்றிய தகவல்களைத் தருவதாகக் கூறினர். ஏனையவர்கள் தொடர்பில் இலங் கையில் எந்தவொரு தகவலும் இல்லை.

அவர்கள் வெளிநாடு சென்றுள்ளார்களா என்பதற்குரிய எந்தவொரு ஆதாரமும் சட்டரீதியாகக் கிடையாது. சட்டவிரோதமாக அல்லது வேறு வழியில் இவர்கள் சென்றார் களா என்று தெரியவில்லை. முடிந்தவரை யான தகவல்களை வழங்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலர் உயிருடன் இல்லை என்றே நான் நினைக்கின்றேன். சாட்சியம் எதுவும் இல் லாதவர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு மற்றும் அது குறித்து எடுக்க வேண்டிய நட வடிக்கை தொடர்பில் ஆராயவேண்டும். இது தொடர்பில் கொள்கை ரீதியான முடி வொன்றை எடுக்க வேண்டியுள்ளது.

இவர்கள் (காணாமற் போனவர்கள்) இலங் கையில் இல்லாத அதேநேரம், சட்ட ரீதியான வழியில் நாட்டை விட்டுச் சென்றிருக்க வில்லை என்று எம்மால் கூற முடியும். அதைத் தான் பொலிஸாரும் கூறுகின்றனர் - என்றார். (வ-5)

## மூளை...

கொண்டு செல்லப்பட்டது. கொலைக் குற் றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கள் இருவரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர் காவற்றுறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை கரம்பனில் ஞானசேகரன் மேரிரம்சியா (வயது 27) என்ற 8 மாதக் கர்ப்ப வதியே கோரமாகக் கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் சவச்சாலையில் நேற்று முன்தினம் வைக்கப்பட்டது. நேற்று முற்பகல் தொடக்கம் மதியம் வரை உடற்கூற்றுப் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டது. கொலை யாளிகள் தாக்கியமையால் கர்ப்பவதியின் மண்டையோட்டு எலும்புகள் நொருங்கி மூளை சிதைந்து உயிரிழந்தார். மொட் டையான ஆயுதத்தால் தாக்கியதால் அவர் உயிரிழந்துள்ளார். அதனைவிட கத்தியால் வெட்டிய காயமும் கழுத்து, கால் உள்ளிட்ட இடங்களில் காணப்படுகின்றன என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஊர் காவற்றுறை நீதிவான் எம்.எம்.றியால் யாழ்ப் பாணப் போதனா வைத்தியசாலைக்கு நேற்றுச் சென்று விசாரணை நடத்தினார். பின்னர் சடலம் கணவனிடம் ஒப்படைக்கப் பட்டது.

ஞானசேகரனும் மேரிரம்சியாவும் நெடுந் தீவைச் சேர்ந்தவர்கள். கணவன் ஊர்காவற் துறை நீதிமன்றில் பணிபுரிவதால் அதற்கு வசதியாக இருவரும் ஊர்காவற்றுறை கரம் பனிலுள்ள வீட்டில் வசித்து வருகின்றனர். சடலம் நெடுந்தீவுக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது. இன்று இறுதிக் கிரியைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தக் கொலை இடம்பெற்ற உடனேயே கிடைத்த தகவலின் அடிப்படை யில் பண்ணை வீதியில் மண்டைதீவுச் சந் திக்கு அண்மையாக ஓட்டோவில் பயணித் துக் கொண்டிருந்தவர்கள் கைது செய்யப் பட்டனர். கொலையுடன் அவர்களுக்குத் தொடர்புள்ளது என்று பொலிஸார் நம்புகின் றனர். அதன்படி கைது செய்யப்பட்ட [illegible] தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வை[illegible] விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த[illegible] நேற்றுச் சட்ட மருத்துவ நிபுணரிடம் அவ[illegible] முற்படுத்தப்பட்டனர். பின்னர் ஊர்கா[illegible] றுறை நீதிமன்றில் நீதிவானின் சமா[illegible] அறையில் பொலிஸாரால் முற்படுத்[illegible] பட்டனர். அவர்களை விளக்கமறிய[illegible] வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் [illegible] படுத்தப்பட்டபோது கொல்லப்பட்ட கர்ப்பிணி யின் உறவுகள் நீதிமன்றின் முன்பாகக் [illegible] சந்தேக நபர்களைத் தம்மிடம் ஒப்ப[illegible]க்கு மாறுகோரியதால் நேற்றும் சிறிது குழப்ப நிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக பொலிஸார் நீதிமன்றின் முன்பா[illegible] குவிக்கப்பட்டிருந்தனர்.

நிறைமாதக் கர்ப்பிணி வீட்டில் தனியாக இருந்த நேரம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 அளவில் கொலை இடம்பெற்றது. அவரின் வீட்டுக்குள்ளும் வீட்டு வளாகத்தில் அவர் உணர்வற்று விழுந்து கிடந்த இடத்தி லும் குருதிப் படிவுகள் காணப்பட்டன. அங் கிருந்து கத்தி, கோடரி, கொட்டன் என்பன வற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தி ருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் கைது செய்யப்படும்போது உடைகளில் குருதிக் கறைகள் காணப்பட்டுள்ளன என்றும் அதனை வாய்பேசமுடியாத சிறுவன் ஒருவன் சாட்சி யமளித்தான் என்று பொலிஸார் தெரிவித்தி ருந்தனர். (வ-4,37)

## ரயிலுடன்...

சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சொந்த இடமாகவும் மாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட ந.கண்ணதாசன் (வயது - 52) [illegible]றம் இராம [illegible] புரிகிறார். [illegible] என்ற ஆசிரியரே உயிரிழர்[illegible] ஆசிரியர் கிளிநொச்சி கிருஸ் கிருஸ்ணா வித்தியாலயத்தில் [illegible] பணி முடித்து வீடு திரும்பி[illegible] [illegible]ண்டிருந்த போது விபத்து இடம்பெற்ற[illegible] சடலம் கிளி நொச்சி மாவட்ட வைத்தியசா[illegible]யில் வைக் கப்பட்டுள்ளது. மேலதிக வி[illegible]ணை இடம் பெறுவதாகக் கிளிநொச்சி [illegible]பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)



# இறுதிக்குள் நுழைந்தது ஐக்கியம்



யாழ்ப்பாணம், ஜன. 26
பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து சென். தோமஸ் அணி மோதியது.
இதில் பருத்தித் துறை ஐக்கிய அணி 25:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-422)

# வண்ணன் வி.கழகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 26
புதுகுடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் வண்ணன் அணி கிண்ணம் வென்றது.
புதுகுடியிருப்பு பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வண்ணன் அணியை எதிர்த்து புதிய பாரதி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வண்ணன் அணி 30 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றது. 5 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு விளையாடிய புதியபாரதி அணி மூன்று ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து வண்ணன் அணி ஓர் ஓட்டத்தால் வென்றது. (ம-23)



சுமோ என்ற மல்யுத்த விளையாட்டு பன்னாட்டு அளவில் அண்மையில் இடம்பெற்றது. ஜப்பானின் வீரர் கெசனேனாசட்டோ வெற்றியீட்டினார். இதன் மூலம் 19 வருடங்களின் பின்னர் குறித்த தொடரில் வென்ற ஜப்பான் வீரர் என்ற அடைவை அவர் ஏற்படுத்தினார். சுமோ, ஜப்பானின் தேசிய விளையாட்டு என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# மானிப்பாய் இந்துவின் இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 26
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் எம்.இந்திரபாலாவின் தலைமையில், கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1.45 மணிக்கு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் ஆரம்பமாகின்றன. வலிகாமம் கல்வி வலய திட்ட மிடல் பிரதிப்பணிப்பாளர் எஸ்.தேவமனோகரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (ம)



# சென். மேரிஸை வீழ்த்தி உதயசூரியன் இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஜன. 26
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உதயசூரியன் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் அணி மோதியது. இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியிலும் எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த இயலவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் உதயசூரியன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# சிறிமுருகன் நியூவாரியஸ் முதலிடம்

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரம் தொடரில் ஆண்கள் பிரிவில் சிறிமுருகன் அணி முதலாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் நியூவாரியஸ் அணி முதலாம் இடத்தையும் தமதாக்கின. ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை அம்பாள் விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இட த்தை மல்லாகம் சிறிமுருகன் அணியும் தமதாக்கின. (ம-23)

# வளர்மதி அணி மகுடம் சூடியது

முல்லைத்தீவு, ஜன. 26
முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் வளர்மதி அணி சம்பியனானது.
வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதி ஆட்டம் நடை பெற்றது.
இறுதியாட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய வளர்மதி அணி 25:17, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



# மருதநிலா அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 26
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி அபார வெற்றிபெற்றது.
குறித்த கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், சுயன் ஞாபகார்த்த இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நியூபைட் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய மருதநிலா அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# நக்கீரன் வி.கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 26
பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் நக்கிரன் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதியது.
இதில் நக்கீரன் அணி 12:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 26

**வளர்மதியின் கரப்பந்தாட்டம்**

வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் செல்லத்தம்பி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடர் கரவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுத் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் விநாயகர் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து அணியை எதிர்த்து விவேகனாந்தா அணி மோதவுள்ளது.

**இளைஞரின் கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில்; இடம்பெற்று வருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணிமோதவுள்ளது.


**யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோத வுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது. (ம-23)



# முச்சதத்தை விளாசுவார் வோர்ணர்

## சிமித் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வோர்ணர் முச்சதம் விளாசுவார் என்ற நம்பிக்கையை ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் வெளிப்படுத்தினார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் புனேயில் பெப்ரவரி 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான கருத்துப் பகிர்வுகள் தற்போதே ஆரம்பித்து விட்டன. இந்த நிலையில் வோர்ணர் மீது இவ்வாறான ஒரு நம்பிக்கையை வெளிப்படுத்தினார் சிமித்.

இந்திய சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிறப்பாக விளையாடி, ஆட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் முன்னணி வீரர்களுக்கு அதிக பொறுப்புள்ளது. இலங்கை தொடரில் நாங்கள் பெரிதாக ஏதும் செய்யவில்லை. இதனால் சரியான முடிவு எங்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் இந்திய தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, நல்ல முடிவை எட்ட விரும்புகிறோம். அனுபவ வீரர்களான நான், டேவிட் வோர்னர், ஸ்ராக், ஹசில்வூட் மற்றும் நாதன் லையன் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ஆட்டத்தை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம். வோர்ணர் சதமொன்றைப் பதிவுசெய்தால், அதை முச்சதமாக மாற்ற அதிக வாய்ப்புக்கள் அவருக்கு உள்ளது. சுழலுக்கு சாதமான இந்திய ஆடுகளங்களில் எனது பெரும் நம்பிக்கையாக வோர்ணர் உள்ளார்.

பந்துவீச்சைப் பொறுத்தமட்டில் நாதன் லையன் ஒட்டுமொத்த அணியினதும் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். அஸ்வின், ஜடேயா இருவரையும் போன்று, அவர் செயற்பட வேண்டும். பந்துவீச்சில் அவரிடமே அளவுக்கு அதிகமான பொறுப்புக்கள் உள்ளன. அதை அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை மிகையாக உள்ளது என வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)

# இறுதி ஆட்டம் இன்று

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள்ஆட்டம்இன்று நடை பெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த நான்கு ஆட்டங்களில் ஆஸ்திரேலியா 3:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவைப் பாதிக்காது. ஆனால் 1:4 என்று படுதோல்வியடையாமல், குறைந்த பட்சம் 2:3 என்று தொடரை முடிக்க பாகிஸ்தான் முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பாகிஸ்தான் அணியின் தலைவரான ஹபீஸ், கடந்த ஆட்டத்தின் அடைந்த தோல்வியின் பின்னர், தொடரை 2:3 என்று முடிப்பதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா – இங்கி. அணிகளின் ரி–20 தொடர் இன்று ஆரம்பம்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது.

கான்பூரிலேயே இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்திய ஆடுகளங்கள் சுழல்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. அத்தகைய ஆடுகங்களில் பந்துவீசுவதில் வல்லவர்களான அஸ்வின் மற்றும் ஜடேயா இருவருக்கும் இந்தத் தொடரில் இருந்து ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய அணியின் பந்துவீச்சுப் பலம் பாதியாகக் குறைவடைந்துள்ளது என்று கருதப்படுகிறது. இருப்பினும் பதில் வீரராக இணைப்பட்ட மிஸ்ராவும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்த வல்லவர். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 4:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கிலும் இந்தியா வென்றது. இதனால் ரி-20 தொடரையாவது இங்கிலாந்து கைப்பற்ற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் உள்ளது. இவ்வாறான ஒரு கருத்தையே இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கனும் குறிப்பட்டுள்ளார்.

இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் எதிர்வரும் 29 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் பெங்களூரில் பெப்ரவரி முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)




# அரையிறுதியில் ரோஜர் பெடரர்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிட்சர்லாந்தின் நட்சத்திர வீரரான ரோஜர் பெடரர்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்ட மதிப்புப் பெற்ற தொடராக ஆஸ் திரேலியத் தொடர் இடம்பெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத் தில், பெடரரை எதிர்த்து ரஷ்ய வீரரான மிஸ்சா மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின், முதல் மூன்று செற் களையும் முறையே 6:1, 7:5, 6:2 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றி, 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் பெடரர்.

இன்று நடைபெறும் அரையிறுதியில் முன்னணி வீரர்களான பெடரரும், வாவ்ரிங்காவும் மோதுகின்றனர். (ம)



# உப்புல் தரங்க தலைவராக நியமனம்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக தரங்க நியமிக்கப்பட்டார்.

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது. ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் அணித்தலைவர் மத்தியூஸ் விலகி தனிப்பட்ட காரணங்களுக்காக நாடு திரும்பினார். இதனால் நேற்று நடைபெற்ற இறுதி ரி-20 ஆட்டத்துக்கு சந்திமல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள் ளது. இந்தத் தொடரிலும் மத்தியூஸ் பங்குபற்றமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இலங்கை அணித்தலைவராக தரங்க நியமிக்கப்பட்டார்.

இதன்மூலம் மத்தியூஸ் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகுகிறார் என்பது கிட்டத்தட்ட உறுதியானது.

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற இலங்கை, சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரை தரங்க தலைமையிலான இலங்கை அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கண்ணீர் அஞ்சலி







பிறப்பு
18 - 06 - 1964

இறப்பு
23 - 01 - 2017

அமரர்

## திரு. E.S. பேரம்பலம் கணேசலிங்கம்

உரிமையாளர் ESP & COMPANY கொழும்பு, யாழ்ப்பாணம்.
(அகில இலங்கை சமாதான நீதிவான், வணிகமாமணி, இறைபணி செம்மல், சிவதொண்டன்)

காதோரம் வந்த செய்தி, கனவாகிப் போகாதோ
ஆற்றாமல் தவிக்கின்றோம், ஆறவில்லை எம் துயரம்
பண்பின் சிகரமாய், பார் போற்ற வாழ்ந்தவரே
கண்கள் பல உனைத் தேட, காணாமல் காலனுடன் சென்றதேனோ
கள்ளமில்லா வெள்ளை மனமும்,
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததெங்கே
மீளாத் துயில் கொண்டு எம்மை , ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றதேனோ
எம் அருமைச் சகோதரனே
உன் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல வாரிவளவு கற்பக விநாயகர் தாள்
தொழுது நிற்கின்றோம்.

**உரிமையாளர்களும் ஊழியர்களும்.**

**E.S.P நாகரத்தினம் சக நிறுவனம் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி.**
**கஜமுகன் காட்வெயார். கொழும்பு - யாழ்ப்பாணம்.**
**எஸ்.பீ.என் மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம்.**
**P.N.K. குறூப் - யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.